எங்கெங்கு காணினும் சக்தியடா

சக்தி

பெண்ணிதழ்

பெண்கள் மேம்பாட்டு பன்மொழி மின்னிதழ்

மலர்-2 இதழ்- 04 | நிறுவனர் & தலைமைப் பதிப்பாசிரியர் முனைவர் செ. ராஜேஸ்வரி | டிசம்பர் 2025

கட்டுரை

சங்க இலக்கியத்தில் திருக்கார்த்திகை
மா.மாரிராஜன்

அகிலமெங்கும் ஆவுடை வழிபாடு
முனைவர் திருமதி செ. ராஜேஸ்வரி

பெண்ணின் பெருந்தக்க யாவுள...
முனைவர் தே.மொழி

தமிழ் பெண்ணின் ஆளுமை வரலாற்றில் பெண்ணின் நிலை
மு.ஜுல்ஸத்துல் பிர்தௌஸ்

கதை

தீபாவளியும், தோசையும்
அர்ஷா

சின்னா
இரம்யாநடராஜன்

கவிதை

மாயக்கோல் ஒன்று கேட்கும்!
- சக்தி சுரேஷ்

சினம் தவிர்
சசிகலா விஸ்வநாதன்

தொடர்கதை

Aranyeni
- Vijeni

தைரியலட்சுமி
- வை.மு.கோதைநாயகி

இன்னும் பல ...

எங்கெங்கு காணினும் சக்தி
பெண்ணிதழ்
மலர் -2 இதழ் - 04 டிசமபர் 2025

நிறுவனர் & தலைமைப் பதிப்பாசிரியர் :
முனைவர் செ.ராஜேஸ்வரி

பொறுப்பாசிரியர் :
முனைவர் சந்திரிகா சுப்ரமணியன்(சிட்னி)

சிறப்பாசிரியர் :
முனைவர் தேமொழி (USA)

துணை ஆசிரியர் :
கவிஞர் மேனகா நரேஷ் (NJ)

உள்ளடக்கம்

1. காதலித்துவிடாதீர்கள்.. (கவிதை) 2
-Martha Rivera-Garrido
தமிழில்: azeefa
2. சங்க இலக்கியத்தில் திருக்கார்த்திகை 3
மா.மாரிராஜன்
3. ஒருவனுக்கு ஒருத்தியா? ஒருத்திக்கு ஒருவனா? 5
சோஃபியா சாக்ரட்டீஸ்
4. கிளிப் (கதை) 11
5. இந்திய விடுதலைப் போராட்டமும் பெண்களும் 13
முனைவர் எஸ். சாந்தினிபீ
6. அகிலமெங்கும் ஆவுடை வழிபாடு 16
முனைவர் திருமதி செ. ராஜேஸ்வரி
7. இன்னும் கொஞ்சம்... (கவிதை) 33
8. .. தீபாவளியும், தோசையும் (கதை) 34
அர்ஷா
9. ரூமியும் நானும் 39
வித்யா மனோகர்
10. சின்னா (கதை) 49
இரம்யாநடராஜன்
11. Hindu lady டாக்டர் ருக்மா 54
சுரேஷ்குமார்
12. கவிஞர் டெய்சி ஜெயப்பிரகாஷ், கலிஃபோர்னியா 57
மேனகா நரேஷ்
13. மரணத்தின் வேர்கள் (கவிதை) 59
அ.ஈடித் ரேனா.
14. தைரிய லக்ஷ்மி (கதை) 60
வை.மு.கோதைநாயகி அம்மாள்
15. இயற்கை எழில் (கவிதை) 63
- கலைச்செல்வி கோபாலன்
16. அதிரனின் 'அம்மாவின் பூனை' - நூல் அறிமுகம் 64
நெல்லை. G. சோமசுந்தரி
17. மாயக்கோல் ஒன்று கேட்கும்! (கவிதை) 68
- சக்தி சுரேஷ்
18. கடமையைச் செய்யாத கணவர் இறந்ததற்கு சமம் 69
19. டாடா மெமோரியல் புற்றுநோய் ஆராய்ச்சி அறக்கட்டளை நிறுவிய பெண் 72
20. தமிழ் பெண்ணின் ஆளுமை வரலாற்றில் பெண்ணின் நிலை 73
மு.ஜன்னத்துல் பிர்தௌஸ்
21. மழை 75
கவிஞர் மாலதி இராமலிங்கம், புதுச்சேரி.
22. பெண்ணின் பெருந்தக்க யாவுள . . . 76
முனைவர் தேமொழி
23. கண்ணுக்குள் நிலவு (கவிதை) 78
- மேனகா நரேஷ்
24. பீஷ்மரை வென்ற பெண் - அம்பை 79
முனைவர் சைலஜா சக்தி
25. சினம் தவிர் (கவிதை) 82
சசிகலா விஸ்வநாதன்
26. இதுவும் பாடம்தான்! (கதை) 83
அன்னபூரணி தண்டபாணி
27. அறம் துறந்த மனிதம்! (கவிதை) 89
28. மனிதாபிமானம் (கதை) 90
சுஜாதா
29. செல்லம்மாள் மகளிர் கல்லூரி 91
30. வண்ணக்காரன் நடேசன் பிள்ளையின் ஓவியங்களில் தேவரடியார் 93
ஓவியர்.ஆர்.ராஜராஜன்
31. ARANYANI (கதை) 95
VIJENI
32. "கல்விக்கூடங்களும் வட்டாரவழக்குகளும்" 99
முனைவர் த.ஜான்சிபால்ராஜ்
33. பால் நிலவு (கவிதை) 102
சத்ய பிரபா

காதலித்துவிடாதீர்கள்..

வாசிக்கும் பெண்ணை, அதிகமான உணர்திறன் கொண்ட பெண்ணை,
எழுதும் பெண்ணைக் காதலித்துவிடாதீர்கள்.

படித்த, மாயாஜாலமான, மருளும், பிக்துப்பிடித்த பெண்ணைக் காதலித்துவிடாதீர்கள்.
யோசிக்கும் பெண்ணை, தனக்கு என்ன தெரியும் என்பதைத் தெரிந்து வைத்திருக்கும் பெண்ணை,
எப்படிப் பறக்க வேண்டும் என்றறிந்த பெண்ணைக் காதலித்துவிடாதீர்கள்;
தன்னைப் பற்றிய தீர்க்கமான தெளிவுடைய பெண்ணைக் காதலித்துவிடாதீர்கள்.

காமத்தின் போது சிரிக்கும் அல்லது அழும் ஒரு பெண்ணை,
தன் உயிரைத் தசையாக திரிக்கத் தெரிந்த பெண்ணைக் காதலித்துவிடாதீர்கள்;
அதுவும் கவிதைகள் தெரிந்த (இவர்கள்தான் மிகவும் ஆபத்தானவர்கள்), அல்லது ஒரு ஓவியத்தைப் புரிந்துகொள்ள அரை மணிநேரம் சிந்திக்கும்,
இசை இல்லாமல் வாழ முடியாத பெண்ணொருத்தியைக் காதலித்துவிடாதீர்கள்.

அரசியலில் ஆர்வம் கொண்ட,
கலகம் செய்யும் மற்றும் அநியாயத்தைக் கண்டு கொதித்தெழும் பெண்ணைக் காதலித்துவிடாதீர்கள்.
தொலைக்காட்சி பார்க்க விரும்பாதவளை.
முகம் அல்லது உடல்சார் அம்சங்கள் பொருட்டே அல்லாமல் அழகாக இருப்பவளை.
தீவிரமான, மகிழ்ச்சிகரமான, தெளிவான மற்றும் எதையும் கண்டுகொள்ளாத பெண்ணொருத்தியைக் காதலித்துவிடாதீர்கள்.
அப்படியான பெண்ணைக் காதலிக்க வேண்டுமென்றும் விரும்பாதீர்கள்.
ஏனென்றால்,
அப்படியான பெண்ணைக் காதலிக்கும் போது,

அவள் காதலித்தாலும்
இல்லை என்றாலும்,
அப்படியான
பெண்ணிடம் இருந்து
நீங்கள் ஒருபோதும்
மீண்டு வரப் போவதில்லை.



–Martha Rivera-Garrido

தமிழில்: Azeefa

சங்க இலக்கியத்தில் திருக்கார்த்திகை

மா.மாரிராஜன்
சோழர் வரலாற்று ஆய்வு மையம், காரைக்கால்

அகநானூறு பாடல் 141. தலைவி தன் தோழியிடம் வினவுகிறாள். பொருளீட்டும் நோக்கத்துடன் எம்மை பிரிந்து சென்ற என் தலைவன் என்னைக் காண எப்போது வருவான்.?

சொல்வாயாக என் அருமைத் தோழியே..
தலைவிக்குத் தோழி கூறும் மறுமொழி இது.

உழவர்கள் உழவுத் தொழில் முடித்து தங்கள் கலப்பைக்கு ஓய்வு கொடுத்த நாள். மழை பெய்து ஓய்ந்த நாள். முழுநிலவு நிறைந்த நன்னாளில் இருளை அகற்றும் விளக்குகளை வீதிகள் தோறும் ஏற்றி வீடுகள்தோறும் மாலைகள் தொங்கும் நாளான கார்த்திகை தினத்தன்று பலர் தொழும் விழாவான கார்த்திகை நாள் கொண்டாடும் பழவிறல் மூதூராகிய நம் ஊருக்கு நம் தலைவன் வருவார் அம்மா.

“உலகு தொழில் உலந்து நாஞ்சில் துஞ்சி
மழைகால் நீங்கிய மாக விசும்பின் குறுமுயல் மறுநிறம் கிளர மதி
நிறைந்து அறுமீன் சேரும் அகலிருள் நடுநாள்
மறுகு விளக்கு உறுத்து மாலை தூக்கிப்
பழவிறல் மூதூர்ப் பலருடன் துவன்றிய விழவுஉடன்
அயர.வருகதில் அம்ம../

கார்த்திகை நாளின் விளக்கீடு காட்சியை அப்படியே வர்ணனை செய்கிறது இப்பாடல்.

மழை பெய்து ஓய்ந்த நாள்.
முழு நிலவு நாள்.
வீடுகளில் விளக்கு.
மாலை அலங்காரம்.
கார்த்திகைத் திருநாள் கொண்டாட்டம்.


ஏற்றுக தீபம் போற்றுக தீபம்
வாழிய தீபம் கார்த்திகை தீபம்
புதிய பூமி உதயமாக ஏற்றுக தீபம்
பொங்கி நின்று சங்கொலித்து ஏற்றுக தீபம்
இதய வீட்டில் ஒளி துலங்க ஏற்றுக தீபம்
இன்றும் என்றும் நன்று வாழ ஏற்றுக தீபம்.

ஒருவனுக்கு ஒருத்தியா? ஒருத்திக்கு ஒருவனா?

சோஃபியா சாக்ரட்டீஸ்

சமூகவியல் ஆய்வின் படி மனித குல வரலாற்றின் நதிக்கரை நாகரிகம். புதிய பரிணாமங்களை கொண்டு வந்தது. மலைக்குகைகளில் வாழ்ந்த மக்கள் ஆற்றங்கரைகளில் குடியேறியதும் நீர்வளம் உள்ள நிலங்களைப் பண்படுத்திப் பயிர் செய்தனர். அதுவரை கூட்டு வாழ்க்கை வாழ்ந்து வந்த மனித குலம் நிலங்களுக்கு வரப்பு கட்டித் தனி உடமையாக்கியது. பின்பு ஆடவர் பெண்களையும் தாலி கட்டித் தமது உடமையாக்கினர். அவள் தனக்கு மட்டும் பெற்று தரும் குழந்தைகளைத் தன் நிலம், நீச்சு, தோட்டம், துரவுக்கு வாரிசாக்கினர்.

இவ்வாறாக மருத நிலத்தில் திருமணம் மூலமாகக் குடும்பமும் சொத்துடைமையும் தோன்றின.

குலமகள், பொதுமகள்



மருதத் திணையில் ஒருவன் தன் நிலத்தின் அளவுக்கேற்ப அதில் பாடுபட ஆட்கள் வேண்டுமென்ற காரணத்தால் பல பெண்களை மணந்தான். அவர்கள் குல மகளிர் எனப்பட்டனர். திருமணம் செய்து கொள்ளாமலும் குழந்தை பெறும் உரிமையைக் கொடுக்காமலும் பொதுமகள் என்ற பெயரில் சிலரைப் பொதுப் பயன்பாட்டுக்கு அடைவர் வைத்திருந்தனர். இவர்கள் பொதுமகளிர் *(concubines, prostitutes,)* எனப்பட்டனர். இவர்கள் பெரும்பாலும் போரின்போது பிற நாடுகளில் இருந்து பிற குலங்களில் இருந்து பிடித்துக் கொண்டு வரப்பட்ட கொண்டி மகளிர் ஆவர்.

யாரோடு எப்போது தங்க வேண்டும்

தொல்காப்பியத்துக்கு முன்பிருந்தே சான்றோர் ஒரு வரையறை வைத்திருந்தனர். என்பதை இந்நூலின் *(நூற்பா 189)* வாயிலாக ஆராயலாம்.

‘பூப்பின் புறப்பாடு ஈராறு நாளும்/
நீத்தகன்று உரையார் என்பனார் புலவர்
பரத்தையிர் பிரிந்த காலையான

மாதவிலக்கான பின் பன்னிரு நாட்களும் கருத்தங்கும் காலம் (fertility days) என்பதால் அந்நாட்களில் ஒரு ஆண் தன் மனைவியை விட்டுப் பிரியக் கூடாது. பரத்தையின்பால் போகக்கூடாது. இவ்விதி குழந்தைப் பிறப்பிற்கும் மனித வளத்துக்கும் சமுதாயம் அளித்த சிறப்பை உணர்த்துகின்றது.

தொல்காப்பியத்தைத் தொடர்ந்து வந்த பல நூல்கள் இக்கருத்தை வலியுறுத்தின. ஆசாரக்கோவையின் 42வது பாடல்

தீ’ண்டாநாள் முந்நாளும் நோக்கார் நீராடிய பின்
ஈராறு நாளும் இகவற்க என்பதே பேரறிவாளர் துணிவு’

.பெண்கள் மாதவிலக்காகி இருக்கும் மூன்று நாட்களிலும் ஆண்கள் தன் மனைவியைப் பார்க்க மாட்டார்கள் அவள் மாதவிலக்கு முடிந்து நீராடிய பின்பு 12 நாட்களும் அவளை விட்டுப் பிரிய மாட்டார்கள் பிரியக்கூடாது.. இச்சமுக விதி பெண்களுக்குத் தமது கணவர் மீது வெறுப்புக் கொள்ளாமல் ஊடல் கொள்ளச் செய்கின்றது.

ஒரு கணவன் பரத்தைவயின் பிரிந்தாலும் அவன் நெஞ்சில் நிறைந்தவள் மனைவி மட்டுமே என்ற நம்பிக்கையை அவளுக்கு ஏற்படுத்துகிறது. மனைவியும் அவனைத் தவிர வேறொருவனை மறு ஜென்மத்தில் கணவனாக வரிப்பதும் கூட தன் கற்புக்கு களங்கம் என்று நம்புகின்றாள். பொழுதுபோக்குக்காக அவன் போயிருக்கலாம். ஆனால் அவனது இதயத்தில் குடியிருப்பவள் நானே என்ற மன உறுதியுடன் ஒருத்தி

‘இம்மை மாறி மறுமை ஆயினும்
நீ ஆகியர் என் கணவனை
யான் ஆகியள் நின் நெஞ்சு நேர்பவளே’
(குறுந்தொகை 49)

என்கிறாள். இந்தப் பிறவி போய் இன்னொரு பிறவி வந்தாலும் நீயே எனக்கு கணவன், நானே உன் நெஞ்சில் நிறைந்தவள், என்கின்றாள்

அவன் என்ன சொல்கிறான்?

பரத்தை வீட்டுக்குப் போய் வந்தவனும் மனைவி சொன்னதைத் தான் சொல்கிறான். உன் மனைவி கோபித்துக் கொள்ளப் போகிறாள் என்ற தோழனிடம் பெரும்சுழல் காற்று வீசினாலும் இடி இடித்தாலும் பூமியே கிடுகிடு என்று நடுங்கி நிலநடுக்கம் ஏற்பட்டாலும் அவள் என் நெஞ்சை விட்டு நீங்க மாட்டாள். அவளே என்றும் எனக்கு இனியவள் என்கிறான்.

கால் பொருது இடிப்பினும்
கதழ் உறை சிதறினும்
உரும் உடன்று எரியினும்
ஊறு பல தோன்றினும்
பெருநிலம் கிளறினும்
திருநல உருவின்
மாயா இயற்கை பாவையின்
போதல் ஒல்லாள்
என் நெஞ்சத்தாளே (நற்றிணை201)

ஆக சமூகத்தின் கண்ணாடியான இலக்கியம் ஒருவனுக்கு ஒருத்தி என்பதை வலியுறுத்தவில்லை. ஒருத்திக்கு ஒருவன் என்பதையே வலியுறுத்துகிறது. ஆனால் இந்தியக் குற்றவியல் சட்டம் ஒருவனுக்கு ஒருத்தி என்பதை வலியுறுத்தி மறு தாரத் தடைச்சட்டத்தைப் பெண்களுக்கு ஆதரவாகக் கொண்டுள்ளது.

பெண் என்பவள் வெறும் உடலா?.

பெண் என்பவளை உடலைக்கொண்டு தான் அடையாளம் கண்டுகொள்கிறோம். ஆனால் அவள் பண்பைக் கொண்டு தான் மதிக்கிறோம். உடல் அவளது உடைமை. அவளது கௌரவம்; மானம்; மதிப்பு. ஒரு விபத்து நடந்தால் உடனே நாம் இறந்தது ஆனா பெண்ணா என்று தான் முதலில் கேட்போம் மனிதர் என்பதன் முதல் அடையாளம் அவர் ஆனா பெண்ணா என்று அறிவதே. எண்பது வயது பாட்டி சாலையோரத்தில் மயங்கி விழுந்து கிடக்கும்போது அவரது ஆடை சற்று விலகியிருந்தால் எலுறது கண்களும் அங்கு தான் முதலில் நோக்கும் பிறகு நாகரிகம் உணர்ந்து விலகும் . ஒரு பெண் அங்கு வந்தால் உடனே பாட்டியின் ஆடையைத் தான் சரி செய்வார். அந்தப் பாட்டியின் மானத்தைக் காப்பாற்றுவார். கிராமங்களில் 'மானத்தை மூடு' என்று சொல்வதுண்டு. பெண் உடல் என்பது அனைத்து பெண்ணுக்கும் மானம்

சார்ந்தது. அது எந்தப் பெண்ணின் உடலாகவும் இருக்கலாம். ஒரு பெண்ணின் உடல் ஆபாசமாகத் தெரிந்தால் அது அனைத்துப் பெண்ணுக்கும் கூச்சத்தைத் தரும் . அந்த இடத்தில் நிற்க மற்ற பெண்களும் சங்கடப்படுவர்.

ஒரு முறை ஒரு திருநங்கைக்கு ரயிலில் பெண்கள் பெட்டியில் ஏறிச் செல்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டது. நாங்கள் பெண்ணாக உணர்ந்தோம் பிறகு தேவையான அறுவை சிகிச்சை செய்து பெண்ணாக மாறிவிட்டோம், என்று சொல்லியும் அதிகாரிகள் கேட்கவில்லை. பொதுப் பெட்டியில் ஆண்களுடன் பயணிக்கும்படி அவர்களிடம் கூறினர். திருநங்கைகள் வாதாடிப் பார்த்தும் அவர்கள்சொன்னதை யாரும் ஒப்புக்கொள்ளவில்லை. உடனே அவர்கள் தாங்கள் பெண்கள் தாம் என்பதை நிருபிக்க அவர்களின் முன்பு தங்களின் உடைகளை அவிழ்த்து தங்கள் உடம்பைக் காட்டினர். இதே நிலை ஒரு பெண்ணுக்கு வந்திருந்தாள் அவள் அதைச் செய்திருக்க மாட்டாள். ஏனென்றால் பெண் என்பாவல் வெறும் உடல் அல்ல. அது ஓர் தகவு. தகவு என்றால் மதிப்பு. பெண் என்ற உணர்வு முற்காலத்தில் சொல்லிய அச்சம் மடம் நாணம் பயிர்ப்பு என்ற நான்கும் உடையதாக இன்றில்லாவிட்டாலும் இந்நான்கும் முழுவதுமாக அற்றுப்போய்விட்டது என்று சொல்ல இயலாது.

உலகப் புகழ் பெற்ற குத்துச்சண்டை வீரர் ஒருவர் தன மகள் கவர்ச்சியாக உடை உடுத்தி இருப்பதைப் பார்த்து 'உன் பொன் முத்து வைர நகைகளை என்கே வைத்திருக்கிறாய்' என்று கேட்டார். அவள் அப்பா அவற்றை என் பெட்டியில் பத்திரமாகப் பூட்டி வைத்திருக்கிறேன் என்றாள். அவற்றைக் காட்டிலும் உன் உடம்பு மதிப்புக் குறைந்ததா மகளே என்றார். அவளுக்கு ஏ'தோ புரிந்தது போலவும் புரியாதது போலவும் இருந்தது'. 'ஊரறிய காட்டுகிறாயே என்றார். புரிந்துவிட்டது அதன்பிறகு அவள் தன உடம்பை மதிப்புடன் காத்துக்கொண்டாள்

தட்சந யாகத்துக்கு சிவனை அழைக்கவில்லை என்பதனால் அவன் மகள் பார்வதி அந்த யாகத் தீயில் விழுந்து கருகிச செத்த போது அவள் உடம்பு பல துண்டங்களாகி பல் இடங்களில் விழுந்த கதை ஒன்று உண்டு. அவளது உறுப்புகள் விழுந்த இடங்கள் இன்றும் புனித வழிபாட்டுத்தலங்களாக விளங்குகின்றன. ஒரு உறுப்பு மட்டுமல்ல பெண்ணின் ஒவ்வொரு உறுப்பும் தேவியின் சக்தி கொண்டதாக விளங்குகிறது என்பதை நுண்ணிதின் ஆராய்ந்தால் பெண்ணின் ஒவ்வொரு உறுப்பின் சிறப்பு புரியும். ஒவ்வொரு பெண்ணும் தேவியின் அம்சம் என்னும் போது அவளது ஒவ்வொரு உறுப்பும் தகை சான்றது அல்லவா.

அத்தகைய தகவை [மதிப்பை] பெண்கள் போற்றாமல் அதனைக் கடை விரிப்போருக்கு ஆதரவு தெரிவிக்கலாமா?.

தீவிரப் பெண்ணியம் பெண்ணின் உடம்பு மீதான உரிமை பெண்ணுக்கே உரியது அவள் கணவனுக்கு அல்ல என்று பிரச்சாரம் செய்வதை கூர்ந்து நோக்கினால் அது உடம்பைத் தனது விருப்பப்படி பலருக்கும் விருந்தாக்குவது அன்று. அவள் அனுமதியின்றி கணவனாகவே இருந்தாலும் அவளை அடைய முயற்சி செய்யக் கூடாது என்ற அடிப்படை உரிமையைக் கோருவதேயாகும். அவள் தந்து உடம்பையும் அங்கு உண்டாகும் கர்ப்பத்தையும் தந்து உரிமையாக்கி கொள்கிறாள். இதன் ஆரம்பக் கட்டமே பயிர்ப்பு என்னும் பெண்மை நலன்.

பயிர்ப்பு என்பது அந்நிய ஆடவரின் மூச்சுக் காற்றோ தொடுகையோ தன் மீது படாமல் ஒரு பெண் தன்னைத் தற்காத்துக் கொள்வதாகும். இன்று பேருந்தில் செல்லும் பெண்களின் முதுகருகில் வந்து நிற்கும் ஆண்களின் மூச்சுக் காற்று அவர்கள் மீது படும்போது அல்லது மேலதிகாரிகள் உடன் பணியாற்றுவோர் பின்புறமாக் வந்து நின்று பெண்களின் கணினியில் திருத்தங்கள் சொல்லும்போது அவர்கள் படும் வேதனை பாலியல் பலாத்காரத்துக்கு நிகரானதாகும். இதுவே பயிர்ப்பு எனப்படும் சிறந்த பெண்மை பண்பாகும். இதன் அடுத்த கட்ட வளர்ச்சியே தீவிர பெண்ணியத்தில் தன் அனுமதி இன்றி எந்த ஆண்மகனும் தன்னைத் தொடக் கூடாது என்று உரிமை கோருவதாகும்.

கவுதம புத்தர் உடம்பை யோக சாதனம் என்றார். உடம்பைக் கொண்டு செய்யப்படும் யோகப் பயிற்சியின் மூலமாக ஆக்சிஜன் என்னும் உயிர் வளியை சேமித்து நீண்டநாள் வாழலாம் என்பதைக் கற்பித்தார். புத்தர் முதலில் பெண்களை தனது சமயத்தில் சேர்க்க மறுத்த போது அவரது பெரியம்மா மிகவும் போராடி அவரது சம்மதத்தைப் பெற்றார். பிக்குணி என்று அழைக்கப்பட்ட பெண்கள் பவுத்த சமயத்தில் தீவிரமாக சம்யப்பநியாற்றினர். அநாதை பெண்களுக்கு முதலில் அடைக்கலம் கொடுத்த சமயமாக பவுத்த சமயம் வளர்ந்தது. மாதவி தாசித் தொழிலைச் செய்ய விரும்பாமல் கோவலனுக்கு மனைவியானாள். .கோவலன் பிரிந்ததும் மாதவியின் மகள் மணிமேகலை தன கற்புக்கு பாதுகாப்பு வேண்டி தன்னை அடைய நினைக்கும் சோழ இளவரசனிடம் இருந்து தப்பித்து பவுத்த மடத்தில் சேர்ந்தாள். பெண்களை காத்த சமயம் பவுத்த சமயம். பத்மாவதி, தாராதேவி போன்ற பவுத்த பெண் துறவிகள் தெய்வங்களாக வணங்கப்பட்டனர் அவர்களுக்கும் புத்தரோடு கோயில் எழுப்பப்பட்டது. ஆக இவர்கள் தங்கள் உடம்பை யோக சாதனம் ஆக்கி துறவிகளாகி பிறகு அவற்றில் சிலர் தெய்வங்கள் ஆயினர்.

சித்தர்களும் 'உடம்பால் அழியின் உயிரால் அழிவார்' உடல் வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே என்றனர். குண்டலினி யோகாவில் சமயாசாரத்தில் பெண்ணின் உடல் [சக்தி] தான் கீழே இருந்து மேலே ஏற்றிக்கொண்டு போவதாகக் குறியீட்டு வடிவில் விளக்கப்படுகிறது. அவள் மூலாதாரத்தில் நிலையாய் இருக்கிறாள். அவள் பெயர் இங்கு 'நிலையா'. அவளை அங்கிருந்து எழுப்பிக் கொண்டு வந்து சுவாதிட்டானம் கடந்து மணிபூரகத்துக்கு வந்ததும் அவலுக்கு சர்வ அலங்காரம் செய்வித்து மேலே ஸக்ஸ்ராரத்துக்கு

அழைத்துச் சென்று அங்கு அவளுக்கு சாந்தி செய்விக்கும் போது ஆனந்த வெள்ளமாக அமுர்த வர்ஷினியாக மாறுகிறாள். இங்கு ஓர் பேரின்ப நிலையை பெண்ணின் உடலைக் காட்டி விளக்குகின்றனர். பெண் உடல் என்பது ஆன்மிகத்தில் ஓர் அடையாளம்; ஆணாதிக்க சமுதாயத்தில் ஒரு கௌரவம். ஆனால் ஒரு பெண்ணைப் பொறுத்த வரை அது அவளது பொக்கிஷம்

பெண் உடல் என்பது வெறும் ரசனைக்குரிய அழகுப் படைப்பு மட்டும் அல்ல. அழகும் ஆராதனையும் உண்டு. ஆராதனை என்பது உண்மையிலேயே பெண் உடம்புக்கு நடந்த காலமும் உண்டு இன்றும் சாக்தப் பிரிவினர் ஆங்காங்கே செய்துவருகின்றனர். அஸ்ஸாம் காமாக்யா கோவிலில் பெண்ணுறுப்பு மட்டுமே வழிபடு பொருளாக இருக்கின்றது. வஜ்ராயன பவுத்த சமயத்தைச் சேர்ந்தவர்கள் பெண் வழிபாட்டுக்கு அதிக முக்கியத்துவம் தருகின்றனர். அவள் ஒரு மருத்துவச் சுரங்கம். அவள் உடலில் இருந்து வெளியேறும் சுரப்புமு குருதியும் மருந்துக்கும் மாயத்துக்கும் பயன்படுகிறது. ஆவுடை அல்லது யோனி வழிபாடு பல தலங்களில் நேரடியாகவும் மறைமுகமாகவும் நடைபெறுகிறது. இதனை யாரும் பெரிதுபடுத்துவதில்லை.

நிலையாமைத் தத்துவத்தை உணர்த்திய சமயங்கள் யாக்கை நிலையாமை என்று உடம்பின் அழியும் தன்மையை எடுத்துரைத்தன எனினும் சுவர் இருக்கும் வரை தான் சித்திரம் என்ற பழமொழியின் படி பார்த்தால் உடம்பு திடமாக இருக்கும் வரை தான் மனிதனுக்கு எல்லாம் இன்பமயம். மனித உடலின் ஆறிவியல் ரகசியங்களை அறிவோம். .அதற்கு நமக்கு யு டியுபே போதும். அனால் அதன் மதிப்பை இன்னும் சற்று நிதானமாகப் புரிந்துகொள்ள வேண்டும் . ஒரு பெண்ணுக்கு உடல் என்பது உறுப்புக்களின் சேர்க்கை மட்டுமல்ல அவளது உணர்வு, பண்பாடு , மதிப்பு, தகவு, பார்மபரியம் என இவை எல்லாவற்றீன் உறைவிடம் ஆகும். பெண் தன் உடலை நேசிக்க வேண்டும் உற்றுப் பார்த்து பூரிக்க வேண்டும் ஆரோக்கியமாகப் பாதுகாக்க வேண்டும் அதன் அழகைப் பராமரிக்க வேண்டும் அதன் மதிப்பை உணர வேண்டும்

பெண் என்பவள் வெறும் உடல் அல்ல; மதிப்பு மாண்பு

வாங்கிப் பயன் பெறவீர்!!! தொடர்புக்கு:

சம்சுல் ஹுதா பானு

99403 35306

கிளிப்

என் பெயர் பிருந்தா, நான் ஒரு தனியார் கல்லூரியில் பிஇ படிக்கிறேன். எங்கள் வீட்டிற்கு நான் ஒரே ஒரு பெண் செல்ல, நான் என் கல்லூரிக்கு பேருந்தில் தான் பயணம் செய்வேன். என்னுடன் என்னை சுற்றி எனது தோழிகள் மூன்று நான்கு பேர் எப்பொழுதும் என்னுடன் இருப்பார்கள், நாங்கள் ஒன்றாக சேர்ந்து கல்லூரிக்கு சென்று வருவோம் பேருந்தில். என் பெயர் பிருந்தா என்றேன் அல்லவா பிருந்தாவனம் தோட்டம் எப்படி இருக்குமோ பச்சை பசேல் என்று பூத்துக் குலுங்கி, பார்ப்பதற்கு அழகாக பொலிவாக இருக்குமோ அதே போல் தான் நானும் மிகவும் அழகாக இருப்பேன், படிப்பில் ஆவரேஜ் ஸ்டுடென்ட் தான், ஆனால் என்னை அழகு படுத்துவதில் அதிக கவனம் செலுத்துவேன், கல்லூரிக்கு செல்வதால் அதிக ஆடைகளையும் அதற்கு ஏற்றார் போல் மேட்சிங் கிளிப்ஸ் வளையல் அக்ஸசரீஸ் வாங்குவதில் அதிக ஆர்வம் காட்டுவேன். எனது தோழிகளும் உறவினர்களும் எனது ஆடைகளையும் அழகையும் பார்த்து பொறாமை கொள்வார்கள், அது எனக்கு மிகவும் சந்தோஷமாக இருக்கும் நான் வாங்கும் உடைகள் ஆக்சஸரீஸ் எல்லாம் மிகவும் விலை உயர்ந்ததாக இருக்கும் எங்கள் வீட்டின் அருகில் உள்ள ஒரு பேன்சி ஸ்டோர் கடையில் தான் நான் வாங்குவேன்.

ஒரு நாள் நான் காலேஜுக்கு சென்று வரும் பொழுது எங்கள் பேச்சுக்கு அருகில் ஒரு தள்ளுவண்டி கடை இருந்தது அதில், கம்மல் ஜிமிக்கி வளையல் செயின் நெக்லஸ், போன்றவைகள் இருந்தன. மாணவிகள் அங்கு சென்று வாங்குவதே நான் பார்த்திருக்கிறேன் தூரத்தில் இருந்து, நான் அங்கு வாங்க மாட்டேன். தரம் குறைவான பொருளாக இருக்கும் என்று நான் நினைத்தேன், நான் தினமும் காலேஜுக்கு வரும்போதும் போகும்போதும் அந்த கடையை பார்த்துக் கொண்டே போவேன் ஆனால் எதுவும் வாங்க மாட்டேன் ஒரு நாள் திடீரென்று எனக்குத் தோன்றியது அங்கு சென்று என்ன பொருட்கள் எப்படி இருக்கின்றன என்று பார்க்கலாம் என்று,

ஒரு நாள் என் தோழிகள் யாரும் என்னுடன் இல்லை அவர்கள் வேறு வேலையாக வெளியே சென்று விட்டனர் அதனால் நான் தனியாக அந்த தள்ளுவண்டி கடைக்குச் சென்று அந்த பொருட்களை பார்க்கத் தொடங்கினேன் பார்த்தால் பொருட்கள் அனைத்தும் அழகாகவும், தரமானதாகவும் விலை குறைவாகவும் மிக மிக குறைவாகவும் இருந்தது எனக்கு ஒரே ஆச்சரியமாக இருந்தது. அந்தக் கடையை நடத்துபவர் ஒரு 70 வயதிற்கு மேற்பட்ட ஒரு முதியவர். நான் என் ரசிக்கும் மேட்சாக ஒரே ஒரு கிளிப் மட்டும் வாங்கலாம்

என்று கிளிப்பை தேடினேன், கிளிப்புகள் அதில் பச்சை கலரும் ஊதா கலரும் எனக்கு மிகவும் பிடித்திருந்தது அதை எடுத்து பார்த்தேன். இதன் விலை என்ன என்று கேட்டேன் அதற்கு அந்த தாத்தா ஒரு கிளிப்பின் விலை 20 ரூபாய் என்றார் எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது இவ்வளவு மிகவும் குறைவாக உள்ளது என்று நான் வழக்கமாக வாங்கும் பேன்சி ஸ்டோரி இதே கிளிப்பிங் விலை 50 ரூபாயிலிருந்து அறுபது ரூபாயாக இருக்கும் எனக்கு ஆச்சரியமாகவும் சந்தோஷமாகவும் இருந்தது.

என்னிடம் ஒரு சிறிய கெட்ட பழக்கம் உள்ளது, அது என்னவென்றால் எந்த கடைக்கு சென்றாலும், கடைக்காரருக்கு தெரியாமல் ஏதாவது ஒரு பொருளை திருடி எடுத்துக் கொள்ள வேண்டும் என்று ஆனால் இதுவரை அது மாதிரி எதுவுமே நடந்ததே கிடையாது எனக்கு பயம் யாராவது நம்மை பார்த்து விடுவார்களோ அசிங்கமாக மாட்டிக் கொள்வோமோ என்று அதேபோல் இந்த கடையிலும் எனக்கு அந்த எண்ணம் தோன்றியது தாத்தாவிற்கு தெரியாமல் ஒரு கிளிப்பை எடுத்து விட வேண்டும் என்று ஊதா நிற கிளிப்பும் எனக்கு மிகவும் பிடித்திருந்ததால் நைசாக அந்த கிளிப்பை எடுத்து எனது துப்பட்டாவின் நான் மறைத்து வைத்துக் கொண்டேன், என் தாத்தாவிடம் பச்சை நிற கிளிப்பிற்கு மட்டும் விலை கூறுங்கள் இது எவ்வளவு இது ஒன்று மட்டும் போதும் என்று கூறினேன் தாத்தா இருவது ரூபா தாமா எடுத்துக்கோ என்றார் நானும் 20 ரூபாயை பரிசிலிருந்து எடுத்து கொடுத்தேன்.

அந்த தாத்தா என்னிடம் பணம் வாங்கும் போது தான் தெரிந்தது. அவருக்கு ஒரு கையும் காலும் அசைவற்று இருக்கும் என்று மற்றொரு கையும் காலில் மட்டுமே அவர் வியாபாரம் செய்கிறார் என்று உணர்ந்தேன். எனது மனம் வலித்தது.

இவரிடம் இருந்தா நாம் திருடினோம், படித்தும் நமக்கேன் இவ்வளவு தரம் குறைவான புத்தி உள்ளது அவர் படிக்காத அந்த தாத்தா இந்த மாதிரி நிலையிலும் உழைத்து வாழ்கிறார் ஒரு சின்ன அல்பத்தனமான கீழ்த்தரமான விஷயத்தை செய்து விட்டோமே என்று என் மனம் மிகவும் வேதனைப்பட்டது தாத்தாவிற்கு ாமலேயே ஊதா கலர் கிளிப்பை எடுத்து அந்த வண்டியிலேயே வைத்து விட்டேன். தாத்தாவும் இதை கவனிக்கவில்லை, காரணம் கூட்டம் அதிகமாக இருந்ததால். அன்று கூட்டம் இல்லாமல் இருந்திருந்தால் நான் மாட்டி இருந்தால் எனக்கு மிகவும் அசிங்கமாக இருந்திருக்கும் மானமே போயிருக்கும். இதுவரை என் வாழ்நாளில் திருடியதே இல்லை என்று நான் செய்த தவறு என்னை மிகவும் வெட்கப்பட செய்தது இனி என் வாழ்நாளில் அந்த எண்ணமே எனக்கு தோன்றாது

பல வருடங்களாக யாருக்கும் தெரியாமல் ஏதாவது ஒரு பொருளை நைசாக எடுத்து விட வேண்டும் என்ற அல்ப புத்தி என்னிடம் இருந்தது இந்த நிகழ்வின் மூலம் என்னை விட்டு மறைந்தது இனி என் வாழ்வில் இந்த எண்ணமே எப்பொழுதும் தோன்றாது.

நான் செய்த தவறுக்காக என் மனதில் திராவிடம் மன்னிப்பு கேட்டுக் கொண்டே அந்த இடத்தை விட்டு மெல்லமாக நடந்து சென்றேன் இப்பொழுது என் மனதில் எந்த ஒரு கெட்ட எண்ணமும் இல்லாமல் பிருந்தாவனத்தைப் போல, என் வெளித்தோற்றம் மட்டுமில்லை என் மனமும் பூத்துக் குலுங்கி மகிழ்ச்சியாக இருந்தது நன்றி

இந்திய விடுதலைப் போராட்டமும் பெண்களும்

முனைவர் எஸ். சாந்தினிபீ
மேனாள் வரலாற்று பேராசிரியர்

இருநூறு ஆண்டுகள் அடிமைப் பட்டுப் போன இந்தியாவை மீட்டெடுக்கும் விடுதலைப் போரில் நம்நாட்டுப் பெண்கள் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டனர். முதல் நூறு ஆண்டுகள் கிழக்கிந்திய வர்த்தக நிறுவனத்திடமும் 1858 முதல் இங்கிலாந்து பேரரசின் ஆட்சியிலும் நாம் அடிமைத் தளைப் பூண்டிருந்தோம். பெரிய படை இல்லாமல் ஒரு வர்த்தக நிறுவனம் இத்துனைப் பெரிய நாட்டை முழுமையாக அடிமைப் படுத்தி எல்லாவகையிலும் அந்நிறுவனமும் இங்கிலாந்து பேரரசும் சுரண்டினார்கள். சொல்லில் அடங்கா துன்பங்களும் துயரங்களும் நம் முன்னோர்கள் அனுபவித்தனர். தேயிலை,காப்பி, கரும்பு போன்ற பணப் பயிர்களை வளர்க்க ஆயிரக்கணக்கானோர் தாய் நாட்டையும் வீட்டையும் உற்றார் உறவினரைத் துறந்து கப்பல்களில் விலங்குகளைப் போல் அடைத்து வேற்று நாடுகளுக்கு கொண்டுச் சென்று கொத்தடிமைகள் ஆக்கப்பட்டனர். மொத்தத்தில் பெரும்பாலானோர் இருட்டறையில் அடைக்கப் பட்டு மூச்சு முட்டும் ஒரு வாழ்க்கையைத்தான் வாழ்ந்தார்கள். நமக்குள்ளே இருந்த கருங்காலிகளும் அடிவருடிகளும் எத்தர்களும் இதற்கெல்லாம் துணைப் போனதே மிகப் பெரிய காரணம். நம் நாடு ஏன் எப்படி அடிமைப் பட்டுப் போனது என்பதே ஒரு தனி வரலாறு.

கிட்டத்தட்ட ஒரு நூற்றாண்டு காலம் சிறு சிறு போராட்டங்கள் நாட்டின் பல் வேறு பகுதிகளில் நடைப்பெற்றுக் கொண்டு தான் இருந்தது. எண்ணில்லாதோர் உயிர் தியாகம் செய்தனர். காந்திக்கு தென் ஆப்ரிக்கா ஒரு சோதனைக் களமாகவும் பயிற்சிகளமாகவும் உதவியது. மக்கட்சேவையை காந்தி துவக்கியது அங்கு தான். அவரின் கொள்கைகள் வெற்றியை தரும் என்ற மனத்தின்மையை தந்தவர்களில் தமிழர்கள் பெரும் பங்கு வகித்ததை அறிவோம். வள்ளியம்மையை மறக்க முடியுமா? இந்தியநாடு திரும்பியவர் 1920களில் இந்திய விடுதலைப் போரில் முழுமையாக இறக்கினார். இந்த அறப் போரை முன்னெடுத்து நடத்திச் செல்லும் பொறுமையும் மனவலிமையும் பெண்களிடம் விஞ்சி நிற்பதை தெளிவாக அறிந்து அவர்களுக்கான

அறைக்கூவலை விடுத்தார். பெண்கள் காந்தியின் நம்பிக்கையை உண்மையென நிரூபித்தனர்.

இந்திய விடுத்லைப் போரின் ஒவ்வொறு படிநிலையிலும் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே போனது. இதை எதிபார்க்காத இங்கிலாந்து ஆதிக்க அரசு சற்று நிலை தடுமாறினாலும் பின்னர் சமாளித்தது. எக்கட்டத்திலும் பெண்கள் மீதான தனது வன்முறையை தளர்த்தவில்லை. மாறாக பல புதிய கொடிய வகை துன்பங்களை பெண்கள் மீது செலுத்தியது.

வீட்டை விட்டு முதல் முறையாக சாலைகளில் வன்முறையற்ற அகிம்சா வழி அறப் போராட்டத்தில் நின்ற பெண்களை காவலர்களின் லாட்டித்தடிகள் பதம் பார்த்தன. குதிரைக் காவலர்கள் கமலா நேரு உட்பட எவரையும் விட்டுவைக்காமல் பிணைத்த கைகளோடு குதிரையைக் கொண்டு சாலைகளில் இழுத்துச் சென்றனர். உடல் மட்டுமே காயப்பட்டது. பெண்களின் உள்ளம் ஊனப்படவில்லை. மாறாக உருதிப் பட்டது. பெண் போராளிகள் தங்களை குழுக்களாகப் பிரித்துக் கொண்டனர். காவலர் ஒரு குழுவை தண்டித்து கலைத்தனர். ஆனால் அடுத்த ஒரு மணி நேரத்தில் அடுத்த குழு அதே இடத்தில் கூடி போராடியது. பெண்களின் இத்திட்டத்தினால் காவலர்களே சளைத்தனர் பணிப் பெருக்கத்தால். ஆனால் பெண்கள் படைத் தொடர்ந்தது.

போராளிகளகலைத்து சலித்த காவலர் பெண்களை சிறைகளில் அடைத்தனர். பெண்களுக்கான சிறைகள் போதுமான எண்ணிக்கையில் இல்லை. இருபது பேருக்கான ஒரு அறையில் ஐம்பது முதல் எழுபது பெண்கள் வரையிலும் அடத்தனர். இவர்களுக்கு ஒரு கழிப்பறை ஒரு குழியலறையே இருந்தது. சிறைக் கைதிகளுக்கான பணிகள் எனும் தண்டணைகள் அனைத்தும் இருந்தன. கூடுதலாக ஆண்கைதிகளுக்கு இல்லாத பல பணிகளும் இருந்தன. காலை மாலை இரு பொழுதும் சிறை வளாகத்தை சுத்தம் செய்தல், சமையல் பாத்திரங்களை கழுவுதல் கழிவறைகளை கழுவுதல் போன்ற பணிகள் இணைக்கப் பட்டன. மாதவிடாய் காலங்களிலும் எவ்வித சலுகையும் கிடையாது. இந்த இக்கட்டுகளை எப்படி சமாளித்தார்கள் என எவ்வித பதிவும் இல்லை.

கூடுதல் எண்ணிக்கையில் சிறிய அறைகளில் அடைக்கப் பட்டவர்களில் சில தாய்மார்கள் தங்கள் கைக்குழந்தையுடன் சிறைவாசம் மேற் கொண்டவர்களும் அடக்கம். ஆதிக்க அரசு எதற்காகவும் மனம் இறங்காது தண்டித்தது. ஒரு கட்டத்தில் பெண்கள் தங்கள் சிறை வாழ்வை ஆக்கப் பூர்வ பணிகளுக்கான காலமாக மாற்றிக் கொண்டமை அவர்களின் தத்திறமை. சிறை அறைகள் பள்ளிக்கூடங்களாக மாற்றுருப் பெற்றன. அடிப்படைக் கல்வி, வரலாறு, பூகோளம், பிள்ளை வளர்ப்பு குறிப்புகள், தூய்மை துப்புரவின் அவசியம், நன்மை, தேசபக்தி பாடல்கள், ராட்டைச் சுற்றும் பயிற்சி போன்றவற்றுடன்

முதலுதவி முறை குறித்த வாழ்க்கை நடைமுறைக்கு தேவையான அறிவுப் பகிர்விக்கும் சிறையறைகளை பெண்கள் பயன்படுத்திக் கொண்டனர்.

பெண்களின் எண்ணிக்கையை குறைக்கும் முயற்சியில் காவலர் சில முன்னெடுப்பு உக்திகளை பயன்படுத்தினர், அதில் ஒன்று சிறைச் சாலையில் பெண்களின் மீது கழிவு நீரை பாய்ச்சினர். மாற்றுச் சேலையும் இல்லாத நிலையில் பெருத்த அருவருப்புடன் துர்நாற்றத்துடன் கூடிய அதே ஆடையில் இருக்க வேண்டிய சூழல். பலர் நோய்வாய் பட்டனர். பலர் உயிற் கொடுத்த தியாகிகளாயினர்.

பல கட்டங்களில் போராளீப் பெண்களை வண்டிகளில் ஏற்றி வெகுதொலைவில், காடுகளில், நடு நிசி நேரங்களில் விட்டுச் சென்றனர். அடிப்படை தேவையான உண்வு, குடிநீர் இன்றி பரிதவித்தோர் பலர். இத்துனைச் சிரமங்கள் பட்டால் பெண்கள் போராட்டத்திற்காக வரமறுத்து பத்திரமாக வீட்டிலே தங்குவார்கள் என காவலர் தப்புக் கணக்கு போட்டார்கள். பல்வேறு துன்பக்களுக்குப் பின் தான் பெண்கள் அவரவர் வீட்டை அடைந்தனர். ஆனாலும் வீதிகளில் போராடினார்கள்.

'இந்தியன்-1' படத்தில் காட்டப் பட்டதைப் போல் பெண்களின் ஆடைகளை பறித்தும் பார்த்தனர். மனவியலாக பெண்கள் பாதிக்கப்பட்டால் அடுத்து முன்வரமாட்டார்கள் என்று எதிர்பார்த்து இத்தகைய மாறுபட்ட கூடுதல் துன்பங்கள் பெண்கள் மீது செலுத்தப் பட்டது. ஆனால் ஆதிக்க அரசே தோல்வியைத் தழுவியது. நாடு விடுதலைப் பெற்றது.

பெண்களைத் தடுக்க எவ்வித புதிய தண்டனைகளை கொடுக்கலாம் என தம் மூளையை கசக்கி, பிழிந்து ஆதிக்க அரசின் அதிகாரிகள் அல்லும் பகலும் அல்லலுற்றனர். அதில் ஒன்றாக ஒரே சிறை வளாகத்தில் தாயும் மகனும், கணவனும் மனைவியும் அடைக்கப் பட்டு ஆஙள் இறந்த போதும் பெண்கள் இறுதியாக ஒருமுறை அவர்களின் முகத்தைப் பார்க்கவும் அனுமதி மறுக்கப் பட்டது. இப்படி எல்லா உறவுகளையும் இழந்து துறந்து மறந்து உயிர் கொண்டு உலவும் உடல்கலாக விடுத்லைமட்டுமே தங்கள் உயி மூச்சென விடுதலைப் போரில் ஐக்கியமாயினர். அவ்வாறு கிடத்தது தான் இன்று நாம் சுவாசிக்கும் சுதந்திரக் காற்று.

இவர்களில் பெரும்பானவர்கள் குறித்த எந்த தகவலோ பதிவுகளோ இல்லை. அதிகாரப் பூர்வமான பதிவுகளை ஆதிக்க அரசு பதிக்கவில்லை. முகமற்ற அவர்களின் தியாகங்கள் அடுத்த தலைமுறைக்கு கடத்துவதும் நாம் மனதில் நிறுத்துவதும் தான் அவர்களுக்காக நாம் செலுத்தக் கூடிய நன்றியாகும்.-முற்றும்.

அகிலமெங்கும் ஆவுடை வழிபாடு

முனைவர் திருமதி செ. ராஜேஸ்வரி
மொழிபெயர்ப்பாளர், பதிப்பாளர், மதுரை

ஆதிமனித வரலாற்றில் குழந்தை பிறப்பு அச்சம் தந்ததால் குழந்தை பிறக்கும் வழியை]கருவாய்] மரியாதையுடன் வணங்கினர். மாத விலக்கு குருதியும் குழந்தைப பேற்றுக்கு காரணமானதாகக் கருதப்பட்டு அதுவும் போற்றற்குரியதாயிற்று. சிவப்பு நிறம் மனித வளத்துக்கும் பச்சை நிறம் வேளாண் வளத்துக்கும் உரிய குறியீட்டு வண்ணங்கள் ஆயின.

குழந்தை பிறப்பில் ஆணின் பங்கும் உண்டு என்பதை உணர்ந்து ஆண் ஆதிக்கம் தோன்றிய காலத்துக்குப் பிறகும் கருவாய் வணக்கம் அருகிவிடவில்லை. அது ஆணுறுப்புடன் இணைக்கப்பட்டு ஒரே வடிவமாக [லிங்க ரூபமாக] வணங்கப்பட்டது. இது மனிதநின் அறிவியல் வளர்வதால் ஆன்மிகக் கோட்பாடுகளில் ஏற்படும் வளர்ச்சி ஆகும். அகிலமெங்கும் பல் வேறு சமயங்களில் இவ்விரு உறுப்புக்களும் இணைந்த வடிவங்கள் செல்வாக்குப் பெற்றாலும் கருவாய் வழிபாடு மறைந்துவிடவில்லை. வெவ்வேறு பெயர்களில் மாறிக்கொண்டே வந்துள்ளது. சில பிரிவினர் தனியாக அதனை ஒரு சமயமாக வளர்த்தெடுத்து சாக்தம் என்று பெயரிட்டு அதில் தாந்திரிக மரபுகளைப் பின்பற்றி வந்தனர். தாந்திர்கம் என்பது பெண் தெய்வ வழிபாடாக பரிணமித்தது. கருவாய் வடிவம் பல எண்ணிக்கையுடன் வளர்ந்து ஸ்ரீ சக்கர உருவெடுத்தது. ஆண் வடிவம் பிந்து [விந்து] என்ற பெயரில் கருவாயின் நடுவில் ஒரு புள்ளியாக [துளியாக்] இடம்பெற்றது.

காமாட்சி அம்மனும் கருவாய் வழிபாடும்

இந்துமதத்திலல் ஆவுடை எனப்படுவது கருவாய் வணக்கத்தைச் சுட்டும், வடிவம் ஆகும் அதனால் காஞ்சி காமாட்சி அம்மன் கோயிலில் அது மட்டுமே வழிபடு பொருளாக அமைந்துள்ளது. திருவானைக்கா கோவிலில் இன்றும் மதியம் உச்சி வேளையில் கோ பூஜை என்ற பெயரில் காராம் பசுவுக்குச் செய்யப்படும் பூஜை நிதர்சனமான கருவாய் பூஜை ஆகும். உலகமெங்கும் அனைத்து கண்டங்களிலும் நாடுகளிலும் ஆதியில் ஆவுடை

வணக்கம் இருந்தது. ஐரோப்பாவில் கிறிஸ்துவ சமயத்தின் தோற்றத்துக்கு முன்பு பல்வேறு பெயர்களில் பகிரங்கமாக நடந்த இவ்வழிபாடு பின்னர் மேரி மாதா வழிபாட்டுடன் இணைக்கப்பட்டது. நேபாளத்திலும் கிழக்கு ஆசிய நாடுகளிலும் பவுத்தம் ஆவுடை வழிபாட்டை நவீனமாக்கிப பரப்பியது. ஆப்பிரிக்காவில் பல வாழ்வியல் சடங்குகளும் நம்பிக்கைகளும் ஆவுடை வழிபாட்டின் மிச்சங்களாக இன்றும் விளங்குகின்றன.

ஆதி சமயத்தில் தீமை நீக்கும் சக்தி

உடல் உறுப்புகளில் கருவாய் எனப்படும் பெண் உறுப்பு [யோனி] மறைசமயம் [பிறரறியாமல் பின்பற்றப்படும் சமயம்] எனப்படும் *occult* சமயத்தில் முக்கியப் பங்கு வகிக்கிறது. இவ்வுறுப்பைப் புனிதமானதாக மறை சமயமமும் சாக்தமும் கருதுகின்றன. [இதுவே ஆதி சமயத்தில் [primitive religion] தாய்த்தெய்வ வழிபாடாக உருவெடுக்க காரணமாயிற்று.] பிரபஞ்ச ரகசியங்களின் சின்னமாக இவ்வுறுப்பு நம்பப்பட்டது. தீய சக்திகளை விரட்டும் சக்தி இவ்வழிபாட்டுக்கு இருப்பதாக மக்கள் நம்பினர். திடிரென பருவ மாற்றத்தினால் வெப்பு நோய், மழைக்கால் நோய்கள், தாக்கும் பொது குறிப்பாக குழந்தைகளைத் தாக்கும் போது மக்கள் பெண் உறுப்பு வழிபாட்டை மேற்கொண்டனர்.

கருப்பு முக்கோணம்

கிரேக்கத்திலும் ரோமானிய தேசத்திலும் பெண் உறுப்பை சின்னமாகக் கொண்டு பல பெண் தெய்வங்கள் வணங்கப்பட்டனர் தெஸ்மொஃபோரிய வழிபாட்டில் கருப்பு முக்கோண வடிவில் எள்ளு மிட்டாயும் தேனும் கலந்து வைத்து வழிபாடு செய்து அதனை பிரசாதமாக் அனைவருக்கும் வணங்குவது மரபு. இவ்வழிபாடு செய்யும் பெண்கள் தங்கள் உறுப்பை பிறர் அறியக் காட்டுவதால் அந்நாட்டின் தீய சக்திகள் அஞ்சி அகன்று விடும் என்று கிரேக்கர்கள் நம்பினர்.



யோனி அடையாளச் சின்னங்கள்

ஐரோப்பாவிலும் இங்கிலாந்திலும்

இந்தியாவில் லஜ்ஜாவதி வழிபாடு போல இங்கிலாந்தில் ஷீலா னா கிக்ஸ் *[Sheela naGigs]* வழிபாடு நடந்ததற்கான சிற்பங்கள் இன்றும் காணப்படுகின்றன. இச சிற்பங்கலில் பெண்ணின்உறுப்புதனஇயல்பானஅளவைவிடமிகப்பெரியதாகக்காட்டப்பட்டிருக்கும். இவ்வளிபாடி பதினோராம் நுற்றாண்டில் ஸ்பெயின் மற்றும் பிரான்ஸ் நாடுகளில் பரவலாகக் காணப்பட்டது. பின்பு ஐரோப்பா முழுவதும் விரைந்து பரவியது. பெண்ணுறுப்பு தீய சக்திகளை அகற்றும் என்ற ஆழமான நம்பிக்கை இவ்வழிபாட்டின் முக்கிய அம்சமாகும். இதனால் சுமார் அறு நுறு ஆண்டுகள் ஷீலா ணா கிகஸ் வழிபாடு

ஐரோப்பாவில் செல்வாக்கு பெற்றுத் திகழ்ந்தது. அனைத்து நாட்டவரும் அவரவர் மொழிகளில் பல் பெண் தெய்வங்களை அவற்றின் பிறப்புறுப்பை வழிபடு பொருளாகக் கொண்டு வாங்கி வந்தனர். தாம் பயன்படுத்தும் காபி கோப்பை முதல் கொண்டு அனைத்து பொருள்களிலும் வி என்ற ஆங்கில எழுத்து [V] வடிவம் இருக்கும்படி செய்தனர். v என்ற வடிவம் வழிபடு சின்னமாக விளங்கியது. இன்றைக்கு ஓம், வேல், சூலாயுதம் ,சிலுவை போன்ற சமயச் சின்னங்கள் போல அன்று ஐரோப்பாவில் V என்ற ஆங்கில எழுத்து வடிவம் வழிபடு சின்னமாக விளங்கியது.

ஷீலா னா கிக்ஸ்

உறுப்பைத் திருகி எறிதல்

மனித வளமு மற்றும் பயிர் வளம் செழிக்க உதவும் சின்னமாக பெண்ணுறுப்பு அடையாளமும் வழிபாடும் சிறந்து விளங்கிய காலகட்டத்தில் பல்வேறு புராணங்களில் இதற்கான தொன்மங்கள் இடம்பெற்றன. ஹவாய் தீவுகளில் வழங்கி வந்த தொன்மக் கதைகளில் செழிப்புத் தெய்வமாக காபோ வணங்கப்பட்டாள். இவள் பாதி மனிதனும் பாதி பன்றியுமாக இருந்த ஒருவனை நோக்கி தன பெண்ணுறுப்பை திருகி எறிந்ததும் அவன் அதை கவர்ந்து கொள்ள பூமியின் இறுதி வரை ஓடினான்.

பெண்கள் தனது உறுப்பை கழட்டி எறிதல் என்பது சங்க இலக்கியத்திலும் சிலப்பதிகாரத்திலும் காணப்படுகிறது. 'ஒரு முலை இழந்த திருமா உன்னி' என்ற வரி சங்க இலக்கியத்தில் உண்டு. கண்ணகி தன இடது முலையை கையால் திருகி எறிந்ததில் தான் மதுரை தீப்பிடித்து எரிந்ததாக சிலப்பதிகாரம் கூறுகிறது. கேரளா நாட்டில் பெண்களுக்கு விதிக்கப்பட்ட முலை வரியை செலுத்த இயலாத பெண்ணொருத்தி தனது இரு மார்புகளையும் கத்தியால் அறுத்து வாழையிலையில் வைத்து வரி வசூல் செய்ய வந்த தண்டல்காரகளிடம் கொண்டு வந்து கொடுத்துவிட்டு இறந்துபோனாள். அவ்விடம் அவள் பெயரால் முலைப்பரம்பு என்று இன்றும் வழங்கப்படுகிறது. [தாயாதிக்க மரபுடைய கேரள நாட்டில் பெண்ணுக்கு மார்பு ஓர் மங்கல உறுப்பு என்பதால் அதை மறைக்க வேண்டியதில்லை என்று நம்பினர். அதை முலை முகம் என்று அழைத்துச சிறப்பித்தனர்]. நாக்கை பிடுங்கி கொண்டு சாகுதல் என்ற சொலவடை படி வைரமுத்து எழுதிய கருவாச்சி காவியத்தில் ஒரு பெண் தன் சேலை முந்தானையால் நாக்கில்

சுருக்கிட்டு வெடுக்கென்று பிடுங்கி கொள்வாள். ஆக தமது உறுப்பை திருகி எறிதல் என்பது காலங்காலமாக இருந்து வரும் ஒரு செயல்பாடாகும்.

வீரப்பெண் நாஞ்சிலி

ஷீலா னா கிகஸ்

ஷீலா னா கிகஸ் என்ற சிற்பத்தை 12ஆம் நுற்றாண்டில் ஹீர்ஃபோர்டுஷயர் என்ற ஊரில் கட்டப்பட்ட கில்பேக் தேவாலயத்தில் காணலாம். இக் கட்டிடத்தில் தமது பெண்ணுறுப்பைப பிறர் காணும் வகையில் பிறந்த மேனியாக நிற்கும் பல பெண் சிற்பங்கள் உள்ளன. இங்கிலாந்திலும் அயர்லாந்திலும் இத்தகைய சிற்பங்கள் ஏராளமாக [100+] உண்டு. சபையின் , பிரான்ஸ் போன்ற நாடுகளில் காலப்போக்கில் இவற்றில் சில மாற்றம் ஏற்பட்டு ஆண்களோடு இணைந்த நிலையில் [ரதி மன்மதன் போல] சிற்பங்கள் செய்து வைக்கப்பட்டன. பெரிய கட்டிடங்களில் கதவுகளில் உயர்ந்த கோபுரங்களில் மாடங்களில் பெண்ணுறுப்பு சின்னங்கள் இடம்பெற்றன. இச்சின்னம் இருந்தால் அந்த பகுதியில் பே பிசாசு, பில்லி, சூனியம், சாவு போன்ற அச்சுறுத்தல்கள் இருக்காது என்று மக்கள் நம்பினர்.

தேவாலயங்களில் ஷீலா னா கிக்ஸ்

புனித விலக்கு

யாரும் தொடக்கூடாத அளவுக்கு துய்மையானது என்பதை தூய விலக்கு அல்லது புனித விலக்கு என்பர். வேத னுள், பூஜை பொருட்கள் சாமி சிலைகள் போன்றன் இவ்வகையை சார்ந்தன. அது போலவே அன்று பாலுறுப்பு சின்னங்களும் புனிதமானவையாக கருதப்பட்டன. இவ்வாறு புனித விலக்கு *[[sacred taboo]* என்று கருதப்பட்ட பெண்ணுறுப்புச சின்னம் தெய்வ சக்தி உடையது என்று நம்பப்பட்டதால் குழந்தைகளுக்கு அரசிலை வடிவில் வெள்ளியில் செய்து அணிவிக்கும் பழக்கம் தமிழ்நாட்டிலும் உண்டு. இதனால் தீய சக்திகள் குழந்தையைத் தாக்காது இச்சின்னம் குழந்தைக்கு தற்காப்புச சின்னமாக விளங்கும் என்பது மக்களின் நீண்ட கால நம்பிக்கை.

தாமரை ஓர் பதிலி

பெண் உறுப்புவழிபடு பொருளாகக் காட்டப்படுவதற்கு பதிலாக தாமரை பூவை காட்ட தொடங்கினர். தாமரை யோனிக்குப பதிலியாக *[substitute]* கொள்ளப்பட்டது. வட

இந்தியாவில் பெண் உறுப்பை காண்பிக்கும் உருவில் உள்ள லஜ்ஜா கௌரி என்ற பெண் தெய்வம் வேதக் கடவுளாக அறியப்படுகிறது. முதலில் பெண் உறுப்பில் இருந்து புறப்பட்டு வரும் ஒரு கொடியில் தாமரை பூத்திருப்பது போன்ற வடிவங்கள் அமைக்கப்பட்டன. அதன் பிறகு அந்த இடத்தில் வெறும் தாமரையே இடம்பெற்றது. பின்னர் லஜ்ஜா கவுரியின் முகத்துக்குப பதிலாகவும் பெண் உறுப்புக்குப பதிலாகவும் தாமரையை வைத்து வடிவமைப்பது மரபாயிற்று. மக்களைக் காக்கும் ஒரே பெண் வேதக் கடவுள் லஜ்ஜாவதி ஆகும். இவளது சில உருவங்களில் பெண்ணுறுப்பு பெரிதாக திறந்திருப்பது போல அதாவது குழந்தை பெறும் நிலையில் இருப்பது *[birthing posture]* போல வடிவமைக்கப் பட்டிருக்கும். இந்து சமயப்படி ஆதி தாயான தேவ ஹூதி என்பவள் பெண்ணுறுப்பின் பெயரால் அழைக்கப்பட்டாள்



தாமரைக் கொடி

ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட மனித நாகரிகத்தில் பெண்ணுறுப்பு பெரியதாகக் காட்டப்படும் சிலைகள் வைத்து வணங்கப்பட்டதற்கான சான்றுகள் கிடைத்திருக்கின்றன. சிந்து சமவெளி நாகரிகத்தில் பெண்ணுறுப்பு வழிபாடு இருந்ததற்காக அகழ்வாய்வுச்

சான்றுகள் உண்டு. சில நூற்றாண்டுகள் கழித்து தென்னிந்தியாவில் கிடைத்த சிலைகளில் பெண் உறுப்புக்கு பதிலாக தாமரை வடிவத்தை வைத்து இவ் வழிபாடு நடந்துள்ளது. பெண்ணுறுப்பு தெரிவதாக இருக்கும் சிலைகளில் முகத்துக்குப் பதிலாக தாமரை இடம்பெற்றிருக்கும். பொதுவாக பெண்மையின் சின்னமாக தாமரை புரிந்துகொள்ளப்பட்டது. இந்து சமயத்தில் அமைதியான உருவம் கொண்ட சரஸ்வதி , இலட்சுமி போன்ற பெண தெய்வங்கள் தாமரையின் மீது அமர்த்தப்பட்டன.



ஆணாதிக்கப் புராணக் கதை

லஜ்ஜா கவுரிக்கென ஒரு புராணக் கதையும் புனையப்பட்டது. இவளை பற்றி தேவி மகாத்மியத்தில் எதுவும் சொல்லப்படவில்லை. எனினும் இவளையும் சிவனுடன் இணைத்து ஒரு கதை புனையப்பட்டது. ஸ்ரீ லீலா இயற்றிய தீர்த்த யாத்ரா பிரபந்தத்தில் இக்கதைகாணப்படுகிறது. சிவன்ஒருகனத்தபோர்வையைபார்வதியிடம்கொடுத்துவிட்டு

வெளியூர் சென்று விடுகிறார். ஒரு எலி அந்த போர்வையை கடித்துக் குதறிவிடுகிறது. பார்வதி ஒரு தையல்காரரை அழைத்து அந்தப போர்வையை தைத்துத் தரச் சொல்கிறாள். அவன் பார்வதியை அடைய விரும்புகிறான். போர்வை கிழிந்ததை அறிந்தால் கணவர் கோபிப்பாரே என்று அஞ்சிய பார்வதி தைத்தாக ஆக வேண்டிய சூழ்நிலையில் வேறு வழியின்றி தையற்காரனின் ஆசைக்கு இணங்கினாள். தையற்காரனாக வந்திருப்பது சிவன் என்பது அவளுக்குத் தெரியாது. அவள் தய்ராக் இருந்த நிலையில் சிவன் தன சுய ரூபத்தை காட்டி நீ இப்படியே இருக்க கடவாய் என்று சபித்துவிடுகிறார். அதனால் லஜ்ஜா கவுரி லஜ்ஜையின்றி பெண் உறுப்பு விரிந்து காணப்பட்ட நிலையில் காட்சி தருகிறாள். இது ஓர் ஆணாதிக்கச் சிந்தனை மலிந்த கதை ஆகும்.

லஜ்ஜா கவுரி சுதந்திர தேவி

ரிக் வேதத்தில் லஜ்ஜா கவுரி என்பவள் பிறந்த மேனிப் பெருந் தெய்வமாக சுதந்திர தேவியாக *[1. 89: 10]* போற்றப்படுகிறாள். இவளது முகம் தாமரை மலராக விளங்க பிறந்த மேனிக் கோலத்தில் நிறைய பொன் நகைகள் அணிந்து அலங்கார பூஷிதையாக காட்சி தருகிறாள். ஆனால் பெண் உறுப்பு பலரும் பார்க்கும்படி காணப்படும். வேதத்தில் சுட்டபப்ட்டிருக்கும் சில பெண் கடவுளரில் இவளும் ஒருத்தி என்பது குறிப்பிடத்தக்கது. வேதம் ஆதியில் வணங்கப்பட்ட பெண் உறுப்பையும் அதற்குரிய தாய் தெய்வ கோட்பாட்டையும் தன்னுள் பதிவு செய்துள்ளது.

பத்மம்

புத்த சமயம் தாமரையை பத்மம் என்று அழைத்தது. பத்மம் மணி ஹ்யும் என்ற மணிமந்திரம் ஆணும் பெண்ணும் இணைந்த வடிவத்தை மந்திரமாக உச்சாடனம் செய்தது. அனைத்து யந்திரங்களும் தாமரை இதழ் வடிவத்துடன் வரையப்பட்டன. அறுகோண யந்திரம் ஆணும் பெண்ணும் இணைந்த வடிவத்தை உணர்த்தின. மேல் முக்கோணம் ஆணையும் கீழ் நோக்கிய முக்கோணம் பெண்ணையும் குறித்தது. இது சம்போக நிலையில் அமைந்த அறுகோணச் சக்கரம் ஆயிற்று. தாந்திரிகத்தில் இருந்து வந்த தனி பெண் உறுப்பு வழிபாடு [யோனி வழிபாடு] மெல்ல மெல்ல சம்போக நிலை வழிபாடாக வளர்ச்சி பெற்றது. வைணவ சமயத்தில் நெற்றியில் இடும் திருமண் காப்பில் நடு கோடு சிவந்த நிறமாக் இருக்கும் இது இலட்சுமி தாயாரை குறிக்கிறது. இச்சிவப்பு கோடு இல்லாமல் திருமண் காப்பு என்னும் நாமம் இடக் கூடாது எனபது விதி. அங்கும் தாயாருக்கே அதிக முக்கியத்துவம் அளிக்கபப்டுகிறது. இலக்குமி பத்மாவதியாகவே தாமரை மலரில் அமர்ந்து அதனை கைகளில் தாங்கிக் காட்சி தருகிறாள்.

It consists in the worship of a picture of the female organ drawn in the centre of another consisting of a representation of nine such organs, the whole of which forms the *Sri Cakra*.



FIG. 7
Yantra



FIG. 8
Yantra



FIG. 9
Yantra



FIG 10
Sri-yantra

பூசாரிணிகள்

இந்தியாவின் பல மாநிலங்களில் தாந்திரிக வழிபாட்டு கோயில்களில் தாமரை முகம் கொண்ட லஜ்ஜாவதி தெய்வமாக வணங்கப்பட்டாள். சில ஆந்திராவில் நாகர்ஜுன கோண்டாவில் லஜ்ஜா கொவுரி சிலை முழு நிர்வாணப் பெண்ணுருவில் உண்டு. இங்கு பலர் பிள்ளை வரம் கேட்டு வந்து வணங்குகின்ர்னர். எல்லம்மா, மாதங்கி [மாது அங்கம்] கோதாரி, கோத் மாயி என்ற பெயர்களில் பெண்ணுறுப்பு வழிபாடு நடந்தது, கோயில்களில் பிறந்த மேனிப பெண் தெய்வங்கள் காணப்பட்டன. சில நூறு ஆண்டுகளுக்கு முன்பு வரை இக்கோயில்களில் பெண்களே பூசாரிகளாக இருந்தனர். இவர்களின் உறுப்புகள் வழிபடு பொருளாக விளங்கின. மக்கள் இவர்களை மனித தெய்வங்களாக கருதினர். அதனால் ஜோதி எனப்பட்டனர். இவர்களை எவரும் திருமணம் செய்வதில்லை. காலப்போக்கில் பூசாரி பெண்கள் தாசிகள் ஆகும் நிலைமைக்கு தள்ளப்பட்டனர்.

குமரி வழிபாடு

நேபாளத்தில் வஜ்ராயன் பவுத்த சமயத்தில் பெண்ணுறுப்பு வழிபாடு சிறப்பாக நடைபெற்றது. குமரி என்ற பெயரில் சிறுமி ஒருத்தி தெரிவு செய்யப்பட்டு

வழிபடப்படுவாள். இவள் பூப்படைந்ததும் கோயிலை விட்டு வெளியேற்றப்படுவாள். தினமும் இவள் பூஜிக்கப்பட்டதால் இவளுக்கு வேகமாக நடக்கவோ வேலை எதுவும் செய்யவோ தெரியாது. பூப்படைந்த பிறகு இவளை யாரும் வேலைக்கும் வைத்துக்கொள்ளமாட்டார்கள்; திருமணமும் செய்துகொள்ள மாட்டார்கள்.

குஜராத் மஹாராஷ்டிரா மாநிலங்களில்

குஜராத் மஹாராஷ்டிரா மாநிலங்களில் நாகநாதர் கோயில்களில் பெண்ணுறுப்பு வழிபாட்டுசசான்றுகள் கிடைக்கின்றன. முதலில் பெண்ணுறுப்பு வழிபாட்டு கோயில்கள் பின்னர் ஆணுறுப்பு வழிபாட்டுக் கோயில்களாகவும் மாறி அதன் பிறகு அவை நாகத்துக்கான கோயில்களாகிவிடுவது இயற்கை. அதன் பிறகு அங்கு அவுடையுடன் கூடிய லிங்கம் இடம் பெரும். பீஜப்பூர் மாவட்டத்தில், அமராவதி நகரில் இதற்கான சிற்ப ஆதாரங்கள் உள்ளன. இவ்வழிபாடு 2, 3 ஆம் நூற்றாண்டுகளிலேயே நடந்திருப்பதாக சான்றுகள் கிடைத்துள்ளன.

கர்நாடக மாநிலத்தில் உடுப்பி நகருக்கு அருகில், பர்கூரில், சித்தன்ன கோட்டையில் ஆறாம் நூற்றாண்டைச் சேர்ந்த பெண்ணுறுப்பு வழிபாட்டுச சிற்பங்கள் கிடைத்துள்ளன. பர்கூர் என்பது அலூபா அரசின் தலைநகராக விளங்கியது. அப்போது அலூபா அரசர்கள் இவ்வழிபாட்டைப பின்பற்றினர். அதற்காக கோயில் அமைத்திருந்தனர்.

அஸ்ஸாமில்

அஸ்ஸாமில் காமக்யா கோயிலில் பெண் உறுப்பு வழிபாடு சிறப்பாக நடைபெறுகிறது. பெண்களையும் அவ்வாறு அமர வைத்து பூ போட்டு கும்குமம் தடவி வழிபடும் மரபு உள்ளது. தாட்சியாயினி தன தந்தை தட்சன் நடத்திய யாகத்திற்கு தன கணவன் சிவனை அழைக்கவில்லை என்பதால் கோபப்பட்டு அந்த யாகத் தியில் விழுந்து உயிரை மாய்த்து கொண்டாள் அப்போது அவளது உடல் உறுப்புகள் பல்வேறு பகுதிகளில் தெறித்து விழுந்தன. அவளது பெண் உறுப்பு விழுந்த இடம் காமக்யா என்று நம்பப்படுவதால் இங்கு எந்தப பெண்ணுக்கு பூஜை செய்தாலும் அது பார்வதியின் உறுப்புக்கு செய்யப்படும் பூஜையாக கொள்ளப்படுகிறது.

ஆவுடை வழிபாடு

பவுத்த சமயத்தில் வஜ்ராயன பவுத்தம் பெண் உறுப்பு வழிபாட்டை கொண்டிருந்தது. இதனை காஞ்சிபுரத்தில் உள்ள காமாட்சி கோயிலில் காணலாம். காஞ்சி பவுத்த சமயத்தின் தலைமையகமாக இருந்தது. இங்கிருந்து சீனா சென்ற பல்லவ மன்னர் பவுத்த துறவி போதி தர்மர் அங்கு ஜென் பவுத்த சமயத்தை பரப்பினார். அது முதல் கிழக்கு ஆசிய நாடுகளில் பவுத்தம் பரவியது. அங்கு போதி தர்மர் ஒரு தெய்வமாக போற்றாப்டுகிறார். அவரே ஷாவொலின் மடங்களை திறந்தார்.

பெண் உறுப்பு வழிபாடு ஆதிகாலம் தொட்டு வருவதால் அதனை உள்வாங்கிக் கொண்ட பவுத்த சமயம் காமக் கோட்டம் என்ற பெயரில் இக்கோயில்களை எழுப்பின. காமத்ர்ச்சி கோயில் அவற்றில் ஒன்று. இங்கு ஆவுடை மட்டுமே வழிபடு பொருளாக விளங்கும். அவ்வாறு தோன்றியவை மதுரை மீனாட்சி கோயில், நாகப்பட்டினம் நீலாயதாட்சி கோயில் திருவானைக்கா அகிலாண்டேஸ்வரி கோயில் போன்றன்வாகும். மீனாட்சி அம்மன் கோயிலிலும் அகிலாண்டேஸ்வரி கோயிலிலும் பள்ளியறை அம்மன் சந்நிதியில் உண்டு. மீனாட்சி கோயிலில் பள்ளியறை பூஜை சிறப்பானது அது தெய்வ திருமணம் நடந்த திருத்தலம் . துவாத சாந்த பெருவெளி ஆகும். ஆணும் பெண்ணும் இணைந்து சம்போக தலம். ஆனால் அகிலாண்டேசவ்ரி கோயிலில் தாய் தனி தெய்வம்

ஆவாள் அவளுக்குப் பிடித்த தாழம்பூவும் அதன் மணமும் சிவனுக்கு ஆகாது; அங்குப் பள்ளியறை பூஜை கிடையாது. அங்கு அவள் வராகியாக நாக் ரூபிணியாக இருக்கிறாள்.

பூப்புக் குருதி வழிபாடு

அஸ்ஸாமின் காமாக்யா கோயிலில் தெய்வம் பூப்படையும் மூன்று நாட்களும் கோயில் பூட்டப்படும். இந்நிலை கேரளத்தில் உள்ள சில பகவதி கோயில்களிலும் உண்டு. அப்போது பகவதி உடுத்தியிருந்த உடையில் காணப்படும் சிவப்பு கறை பட்ட துணியில் இருந்து நூல் பிரித்து பிரசாதமாக வழங்குவர். அதற்கு பெரிய கிராக்கி உண்டு. எல்லோருக்கும் கிடைக்காது.

மந்திரசக்தி கொண்ட சுரப்புகள்

பெண் உறுப்பு வழிபாட்டில் பெண்ணின் சுரதமும் பூப்பு குருதியும் மந்திர ஆற்றல் உடையனவாக நம்பப்பட்டன. பழங்காலத்தில் இதனை சேகரித்து மந்திர செயல்களுக்கு வசியம் ஆகர்ஷணம் போன்றவற்றிற்கு தாந்திரிகர்கள் பயன்படுத்தினர். முட்டுத்துணியை புதிர வண்ணார் வெள்ளாவியில் வைத்து சூனியம் செய்வினை போன்றவை செய்தனர். பெண்ணின் சுரத நீர் சாண்டு [வலிமை அளிப்பது என்பது இச்சொல்லின் பொருள். கேரளாவில் சாண்ட பிள்ளை என்று பெயர் சூட்டுவது வலியவன்

என்பதைக் குறிக்கும். ஜண்டு பாம் என்ற மருந்தும் இப்பொருளில் தான் வழங்கப்படுகிறது.] என்ற பெயரிலும் பூப்பு குருதி தூமை என்ற பெயரிலும் பரிபஷைகளாக வழங்கப்பட்டன. இவை இரண்டும் மருந்துப பொருள்களாக விளங்கின. சைவ சமய எழுச்சிக்கு பிறகு பவுத்தம் முற்றிலுமாக ஒழிக்கப்பட்ட காலத்தில் பவுத்த துறவிகள் சிலர் சித்தர்களாக மலைக் குகைகளில் வசித்து வந்த போது சாண்டு, தஜூமை ஆகியவற்றைக் கொண்டு செய்வினை செய்தல் சூனியம் வைத்தல். ஏவல் செய்தல் போன்ற மாந்திரிகம மற்றும், இளமையைத் தக்க வைக்கும் மருந்து தயாரித்தல் போன்றவற்றில் ஈடுபட்டு வந்தனர். இதனால் பெண்கள் தமது தீட்டுத் துணிகளை பிறர் கண் படாமல் மறைத்து அப்புறப்படுத்தினர் அல்லது தீ வைத்துக் கொளுத்தினர். இன்று இப்பழக்கம் மாறிவிட்டது. அக்காலத்தில் சித்தர்கள் பரிபாஷையில் நூல்களும் இயற்றினர். பிற்காலத்தில் இச்சுரப்புகள் தமது மதிப்பை இழந்து வசைச் சொற்களாகி விட்டன.

ஆவுடையும் லிங்க பாணமும்

பெண் உறுப்பு வைபாடும் ஆண் உறுப்பு வழிபாடும் காலப்போக்கில் இணைந்து பல சமயங்களில் ஒரே வழிபாடாக மாறிவிட்டது. ஆவுடை பெண் உறுப்பைக் குறித்தது; அதன் மீது நிற்கும் லிங்க பாணம் ஆண் உறுப்பை குறித்தது,. இவை இரண்டும் இணைந்து சிவசக்தி சங்கமத்தைக் குறிப்பதாக சைவ சமய எழுசசிக் காலத்தில் புதிய கதைகள் தல புராணங்கள் தோன்றின. மக்கள் சிவ சக்தி வழிபாட்டில் நாட்டம் கொள்ளலாயினர். கோயில்களில் தனி சன்னதி சிவனுக்கும் அம்மனுக்கும் எழுப்பப்பட்டன. ஆயினும் சாமி இருக்கும் சந்நிதி கர்ப்ப கிருகம் என்றே பழைய பெயரில் அழைக்கப்பட்டது. கர்ப்ப கிரகம் அல்லது கரு அறை என்ப து பெண் உறுப்பு வழிபாட்டின் மறுபெயர் ஆகும்.

மேரி மாதா வழிபாடு

ஐரோப்பாவின் பல பகுதிகளில் பெண் உறுப்பை குறிக்கும் வகையில் மலை பிளவுகளுக்குள் சென்று அங்கு பெண் உறுப்பு சிலைகள், ஓவியங்கள சிற்பங்கள் வைத்து

இரவு முழுக்க இருந்து பிறந்த மேனிப பெருங்கடவுளை வணங்கி வந்தனர். இத்தெய்வங்கள் ஒவ்வொரு நாட்டிலும் இடத்திலும் பல் பெயர்களில் வழங்கப்பட்டன. பின்னர் கால மாற்றம் ஏற்பட்ட போது அனைத்தும் ஒன்றாக்கப்பட்டு மேரி மாதாவாக உருவாகிவிட்டது. அதன் பிறகு ஆங்காங்கே வணங்கி வந்த மேடோனா, ஆக்னெஸ், பெலிண்டா போன்ற பெண் தெய்வங்கள் அல்லது தாய் தெய்வங்கள் ரோம கத்தோலிக்க சமயத்தில் கலந்துவிட்டன. மக்கள் சென்று வணங்கிய மலை பிளவு ஒரு வழிபடு தலமாக அன்னை மேரி கோயில்களில் இடம்பெற்றுவிட்டது. இதனை கெபி என்பர். கோயிலின் முன்பாக ஒரு கெபி வடிவமைக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

இந்து சமயத்தில் பல் பெண் தெய்வங்கள் காலப்போக்கில் பேர் மாறி ஊர் மாறி மாரியமான் நேர பொதுப் பெயரில் வழங்கலாயின. கேரளாவில் இத்தாய் தெய்வங்கள் பகவதி என்ற பொதுப்பெயர் பெற்றுள்ளது. வங்காளத்தில் வணகப்பட்ட கங்குலி போன்ற தெய்வங்கள் இப்போது கொஞ்சம் கொஞ்சமாக வழக்கிழந்து துர்காவுக்குள் சங்கமமாகிவிட்டது.

தாமரை வடிவத்தில் அமைந்த பௌத்த கோயில்

இவ்வாறு பெண் உறுப்பு வழிபாடு என்பது பெண் தெய்வ வழிபாடாகி தாய்த் தெய்வ வழிபாடாகி சிவசக்தி வழிபாடு, அம்மன் வழிபாடு என உறு மாறி புராணிகத் தெய்வமாகிவிட்டது.

இன்னும் கொஞ்சம்...

நகரும் படிக்கட்டுகளில் தாவியோடி
ஏறி இறங்கியும் சில மணித்துளிகளில்
தவறவிட்ட கடைசி ரயில்...

பலநாள் பாடுபட்டு செதுக்கிய சிலையில்
இமைக்கும் நொடியில் இழைத்த தவற்றினால்
உருவம் சிதைந்த சிற்பம்...

இரவு முழுவதும் விழித்திருந்து
இடைவிடாது படித்தும் ஒரு மதிப்பெண்ணில்
தேர்ச்சியைத் தவறவிட்ட தருணம்...

எடுத்துச் செல்ல அன்னை கூறியும்
குடையை மறுத்த அந்நாளில்
முழுதாய் நனைந்த மழைக்காலம்...

நுழைவுத்தேர்வுக்காய் நுணுகிப் படித்தபோதும்
0.5 கட ஃபிப் மதிப்பெண்ணால்
தவறவிட்ட மருத்துவப் படிப்பு...

எட்டிப் பிடிக்கும் தூரத்தில் வெற்றியிருந்தும்
வேகம் குறைந்ததால்
தவறவிட்ட முதலிடம் ...

கண்ணாடியைக் கண்ணும் கருத்துமாய்
கவனமாகத் துடைத்தும்
கணப்பொழுதில்
கை தவறிவிட்ட காலம்.. .

அன்பைப் பொழிந்த உறவொன்று
தவறிச் சொன்ன ஒற்றை வார்த்தையால்
நிமிடத்தில் சிதைந்த உறவுகள்...

இப்படி தவறிய தருணங்களில்
தானாய் வரும் வார்த்தை
இன்னும் கொஞ்சம் முயன்றிருந்தால்...
இன்னும் கொஞ்சம் படித்திருந்தால்...
இன்னும் கொஞ்சம் கவனமாய் இருந்திருந்தால்...
இன்னும் கொஞ்சம் அக்கறையாய் இருந்திருந்தால்...
இன்னும் கொஞ்சம் பொறுமையாய் இருந்திருந்தால்...
இப்படி இன்னும் கொஞ்சம்
என்ற நிலை இனியேனும்
எதிர்கொள்ளாதிருக்க
முயல்வோம் இன்னும் கொஞ்சம்...

– தனலட்சுமி மதனகோபால்

.. தீபாவளியும், தோசையும்

அரீஷா

அந்த இரவு, உள்ளுக்குள் ஒரு கனத்த பாரத்தைத் தாங்கிக் கொண்டிருந்தது. பசியும், என்னவென்றே பிடிபடாத ஒரு வெறுமையும் மனதை ஆட்டிப் படைக்க, கடிகாரம் ஒன்பதரை மணியைத் தொட்டிருக்க வேண்டும். நம்பி வந்த காரியமும் கைநழுவிப் போக, வேறு வழியின்றி கிளம்பினேன். வெளியே, தீபாவளியின் ஆரவாரம் காற்றில் மிதந்தது சப்தம் மட்டுமல்ல; குதூகலம் உடலெங்கும் பரவி, ஒருவித நமைச்சலாய் ஊரெங்கும் அரித்தது.

என் 'பல்ஸர்' வண்டி, வழக்கம்போல் எதையோ முணுமுணுத்துக்கொண்டே இருளில் இறங்கியது. இது சந்தேகமேயில்லை, சென்னை தான்.

மழை வந்துபோன ஈரமும், வெடித்து அடங்கிய மத்தாப்பின் கந்தக வாடையும் கலந்து, காற்றில், புழுக்கத்தின் ஒருவித அடர் நாற்றமாய்ச் சுழன்றது. மேகத்தின் கருப்புச் சேலைக்குள் எங்கோ, ராக்கெட் ஒன்று வானை அண்ணாந்து பார்த்துச் சிதறியது. அந்த ஒளியில், சாலையின் சகதியும் சேறும் ஒரு கணம் வெளிச்சம் பெற்று, மறு கணம் மறைந்தது. இந்தப் பெருநகரத்தின் அசிங்கம், அழகுக்கும் சத்தத்திற்கும் நடுவே இப்படி ஒளிந்திருப்பது சாபம்.

என் வயிறு, உள்ளுக்குள் என்ன பாடுபட்டது என்பதை நான் ஒருவன் மட்டும்தான் அறிவேன். அது ரணம். ஓர் அமைதியான ரணம். உள்ளே எங்கோ, ஒரு கவளம் சோற்றுக்காக, குடல்கள் பின்னிக்கொண்டு, தாளப்பிழை கொண்ட மிருதங்கமாய் மெல்லியதாய் இரைந்தன. 'வாய்க்கும் வயிற்றுக்கும் போட்ட சண்டையில் ஒரு வாய் உள்ளே போனால் போதும்!' என்று நாக்கு, ஒரு தாயிடம் கெஞ்சுவது போலக் கெஞ்சியது.

வண்டியை ஓட்டுவதே ஒரு விசித்திரமான நாட்டியமாய் இருந்தது. மூடப்படாத பாதாளச் சாக்கடை திறப்புகளையும், தண்ணீரைத் தேக்கி வைத்த பள்ளங்களையும் கண்டால், இரும்புக் குதிரை ஓட்டிகள் தங்கள் இரண்டு கால்களையும் தூக்கித் தூக்கிச் செல்லும் காட்சி, மழைக் காலத்தின் அவஸ்தையான களியாட்டம்போலல்லவா இருகிறது, அரும்பாக்கம் மெட்ரோ நிலையப் பகுதியில், மண் அள்ளும் இயந்திரங்களின் சத்தம், என் மண்டைக்குள் ஆதிவாசித் தாளம்போல், ஒலித்தத்து. உள்ளிருந்த பசியின் ஓசையை மேலும் கூட்டியது போலிருந்தது.

எங்கேனும் ஒரு பரோட்டா அல்லது மலிவான ஒரு தோசைக் கடை கண்ணில் படாதா என்று மனம் சஞ்சலப்பட்டது. வண்டியைச் சாய்த்தும், விலக்கியும் ஓட்டினேன்.

பூந்தமல்லி ஹைவே ரோடைத் தாண்டி, சிக்னலில் நின்றபோது, சுற்றிலும் கூட்டம். சத்தம். புளித்துப் போன நாற்றம். இந்த மூன்றும் ஒருசேர மோதித் தாக்க, உள்ளே ஓர் அனல் எழுந்து, கண்கள் சற்றே கூசின.

அந்த இருட்டில், மேம்பாலத்தின் அடியில் ஓரமாய் ஏதோ சில அசைவுகள் தட்டுப்பட்டன.

அப்போது தொலைபேசி அலறியது. "இல்லை... வந்த ஒரு வேலையும் நடக்கல.... நா வீட்டுக்குத் தா போறேன். போய்ப் பேசுறேன்."

.....

"இல்ல... இன்னும் சாப்ல... அதுக்குத்தான் ஒர்ரு கடய தேடிட்டு ருக்கேன். வீட்டுக்குப் போய்ப் பேசுறே. இப்ப போன வை ," என்று ஒருவித கடுகடுப்புடன் சொல்லி நிறுத்தினேன்.

அங்கே, மரக் கட்டைகளின் நிழலில் ஒதுங்கி நின்றிருந்த பெண் ஒருத்தி, என் அருகே வந்தாள்.

"என்ன சார்... தனியா நின்னுண்டிருக்கீங்க?"

நான் வாய் திறப்பதற்குள், அவள் மெதுவாகப் பேசத் தொடங்கினாள். தன் குரலை லேசாகத் தாழ்த்திக்கொண்டாள்; அதில் ஓர் அனுசரணை இருந்தது. "ரெண்டாயிரம் ரூவா குடுங்க. ஒரு மணி நேரம்... நீங்க எது வேணா பண்ணலாம்."

என் திகைப்பைக் கவனித்தாள். "நான் ஒண்ணும் அது இல்லைங்க... பொம்பளைதான். பயப்படாதீங்க." சட்டென்று என் அருகில் குனிந்து, என் முகத்தை உற்றுப் பார்த்தாள்.

"ஆனா... நீங்க...

.....

குடிச்சிருக்கீங்களா? பார்த்தா அப்படித் தெரியலை. குடிச்சிருந்தா எனக்குக் கஷ்டம். அது மட்டும் எனக்குப் ஒத்து வராது."

அவள் அழுத்தம் கொடுக்கும்போது, அவள் முகத்தில் ஒருவித சலிப்பும் துயரமும் நிழலாடியது. சலிப்பு, அது ஏமாற்றத்தைக் காட்டிலும் ஆழமானது.

என் உடலில் ஒரு நடுக்கம் ஓடியது. 'யப்பா!' பெருமூச்சுடன் பல்ஸரை உதைத்தேன். பல உதைகளுக்குப் பிறகு, இருமலுடன் மெல்ல உயிர்பெற ஆரம்பித்தது. என்னை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தவள், அவளுடைய சலிப்பின் ஏமாற்றத்தைக் கண்களில் தேக்கி, முகத்தைத் திருப்பிக் கொண்டாள். அவளுடைய துயரம், என் பசியின் துயரத்தைவிடப் பெரிதாய் இருக்கக்கூடும் என்று ஒரு கணம் தோன்றியது.

சேத்துப்பட்டு சிக்னலை நெருங்கும்போது, சுழல் கொஞ்சம் மெல்ல மாறியது. இருட்டுக் காட்சிகள் மெல்ல மறைய, ஹாரிங்டன் ரோட்டில் என் வண்டி திரும்பும்போது, கண்ணைக் கூசும் விளம்பரப் பலகைகள் பளீரென்று கண்ணில் அறைந்தன.

சிக்னலின் கம்ப நிழலில், வேறு சில நிழல்கள். ஒருத்தி முன்னால் வந்தாள். மெல்லிய நைலான் சேலை. தலையில் பிச்சி மல்லி சேர்த்த பூச்சரம் சுற்றிய, பெரிய கொண்டை .

''மச்சான்... அழைத்துக் கொண்டே, அவள் முன்னே வந்தாள். அந்தக் குரலில், அவள் யார் என்று சொல்லியது. அவளுக்குச் சற்று அப்பால், விளம்பரப் பலகையின் மங்கலான மூலையில், ஒருவன் அப்படியே குப்புறப் படுத்துக் கிடந்தான். குடியால் கெட்டவனோ, பிச்சைக் கோலமோ... அல்லது வேறு எந்தக் கோளாறோ! அவனுடைய ஜீவன், அந்தக் கம்பிகளின் தடுப்புச் சட்டங்களுக்கு நடுவே, யாருமற்ற ஒளியற்ற இருட்டில் நசுங்கிப் போயிருந்தது. நான் அவசரமாய் அந்தக் கூசும் ஒளியைத் தாண்டினேன். மீண்டும் பசி வயிற்றைக் கிள்ளியது.

மேம்பாலத்தின் உள்ளே நுழைந்து, சூளைமேடு நெடுஞ்சாலையைத் தொட்டிருந்தேன். தெரு விளக்கின் வெளிச்சத்தில், நான்கு தள்ளுவண்டிக் கடைகள் வரிசையாய் ஆவி பறக்கக் காத்திருந்தன. இட்லி, தோசை, ஆப்பம்.

வண்டியை நிறுத்தி, உற்றுப் பார்த்தேன்.

அந்தக் கடைகளின் முன்னால், வெடித்த சரவெடியின் சிவப்புத் தாள் குப்பைகள் இறைந்து கிடந்தன. சமையல் செய்து கொண்டிருந்த மனிதனின் அரைக் கைச் சட்டை, எண்ணெய் பிசுக்கால் கருமை ஏறியிருந்தது. அவர் எதிரே வைத்திருந்த, கை கழுவும் பிளாஸ்டிக் வாளியின் நீர், தேநீர்ச் சாயம் போலக் கறுத்திருந்தது. அதன் விளிம்புகளில் படிந்திருந்த கறை, என் பசியைத் தாண்டிய ஒரு அருவருப்பைக் கிளப்பியது.

'சாப்பிட வேண்டாம்' என்று மனம் அரை குறையாக முடிவு செய்தது. இந்த அருவருப்புக்கு நடுவில், அந்தத் தோசை என் தொண்டைக்குள் எப்படி இறங்கும்? பசிக்கும், கொஞ்சம் சுத்தம் இருக்கக் கூடாதா?

''ச்சே!" என்று சலித்துக் கொண்டு, கொஞ்சம் தூரத்தில் தெரிந்த 'நியூ உடுப்பி கேபே'-யை நோக்கி வண்டியைத் திருப்பினேன். அங்கேனும் நிம்மதி இருக்கும். உள்ளே நுழைந்தேன். பளிங்குத் தரை. ஏ.சி. குளிர். வெளியே இருந்த சகதியும், சத்தமும் இங்கே இல்லை. இது சொர்க்கமல்ல; ஆனால், பசியை மறக்கடிக்கும் ஒரு வெள்ளை உலகம்.

ஆர்டர் கொடுத்தேன்: "ஒரு மசால் தோசை மட்டும்."

வெயிட்டர் சிறிய பில் புத்தகத்துடன் வந்தார். "நூற்று எழுபது ரூவா ஸார்."

''என்னாது! வெறும் மசால் தோசையா?''

அவர் சிரித்தார். "ஆமாம் ஸார். ஜி.எஸ்.டி. எல்லாம் சேர்த்து"

நூற்று எழுபது ரூபாய். பர்ஸில் வெறும் இருநூறு ரூபாய்தான் இருந்தது. என் மூளையில் ஒரு சிறிய கணக்குப் போட்டேன். நூற்று எழுபது ரூபாய்க்குக் கிடைத்திருக்க வேண்டிய முழுச் சாப்பாட்டை, இந்த ஓர் ஏ.சி. கடை ஒரு ஒற்றைத் தோசையாக மாற்றி வைத்திருந்தது.

பசியை ஏமாற்றும் இந்த பகட்டான அமைதியை நான் வெறுத்தேன். என் உடலில் இருந்த அத்தனை சோர்வும் ஒரு கணம் கோபமாக மாறியது. "வேண்டாம் ஸார்." நான் அப்புறம் வர்றேன்,'' என்று என் இருக்கையைச் சத்தமில்லாமல் நகர்த்தி, விருட்டென்று எழுந்து வெளியே வந்துவிட்டேன்.

வெளியே மீண்டும் தீபாவளிச் சத்தம். ராக்கெட்டுகள் வெடித்துச் சிதறின. என் உதடுகள் மெலிதாகச் சிரித்தன. பசி, பணம், சுத்தம், இந்த மூன்றுக்கும் நடுவே அலையும் ஒரு சாமான்யப் பிறவி நான்.

பல்ஸரை உதைத்து வண்டியைத் திருப்பினேன்.

அப்போது என் கண்ணுக்கு எதிரே, குவியல் குவியலாய் வெடித்துச் சிதறிய சரவெடியின் சிகப்புத் தாள் குப்பைகள் கிடந்தன. சற்றே முன் நான் நூற்று எழுபது ரூபாய்க்கான தோசையைத் துறந்து வந்தேன்.

ஆனால், இந்த ஒரே ஒரு சிகப்புத் தாள் குவியலில் மட்டும், என் மூன்று நாள் சாப்பாட்டுக்கான காசு கருகிப் போயிருக்கும்.

தீபாவளி என்பது இப்படிப்பட்ட ஒரு கொண்டாட்டமோ? எரியும் காசுக்கும், எரியும் பசிக்கும் நடுவே ஒரு மெல்லிய கோடு.

வண்டியை அப்படியே சுழற்றி, சூளைமேடு நெடுஞ்சாலையை நோக்கித் திரும்பினேன். இப்போது என் மனதில் தயக்கமோ, அருவருப்போ இல்லை. ஒரே ஒரு எண்ணம்தான்: அசிங்கமும் அழகும் இந்த இரவில் ஒன்றுதான். பசி தீர வேண்டும்!

அந்தத் தள்ளுவண்டிக் கடைகள் வரிசையாய் ஆவி பறக்கக் காத்திருந்தன. வண்டியை நிறுத்தினேன். நிதானமாக ஹெல்மெட்டைக் கழற்றி, பக்கவாட்டில் வைத்தேன்.

மெதுவாகக் கடைக்காரரைப் பார்த்தேன். "ஸார்... ரெண்டு தோசை போடுங்க. சூடா."

அவர் சலிப்பில்லாத முகத்துடன் என்னை நிமிர்ந்து பார்த்தார்.

"இங்கே மசால் தோசை இருபது ரெண்டு நாப்பது ரூபா."

நான் பர்ஸைத் திறந்து நாற்பது ரூபாயை கொடுத்தேன்.

வானில் ஒரு ராக்கெட், ஒருவித விசித்திரமான நாதத்துடன் வெடித்துச் சிதறியது. அதன் சிவப்பு, பச்சை ஒளிக்கீற்று, ஒரு நொடி மட்டும், அந்த எண்ணெய் பிசுபிசுத்த சமையற்காரரின் முகத்திலும், கீழே கிடந்த சரவெடிக் குப்பைகளிலும் பட்டு மறைந்தது.

நான் குனிந்து சாப்பிட ஆரம்பித்தேன்.

நூல் அறிமுகம்

ரூமியும் நானும்

வித்யா மனோகரீ
புதுவை

நூல்: ரூமியும் நானும்
ஆசிரியர்: ஈரோடு தமிழன்பன்
வெளியீடு: ஒருதுளிக் கவிதை (புதுச்சேரி)
விலை: 150
நூல் பெற: 7810098433

மகாகவி ஈரோடு தமிழன்பன் அவர்கள், சிறந்த ஆசிரியர், கவியரங்கக் கவிஞர், மரபில் ஊறிய புதுக்கவிதைக் கவிஞர், சிறுகதை, புதின ஆசிரியர், நாடகாசிரியர், இலக்கியப் படைப்பாளி, வாழ்க்கை வரலாற்று ஆசிரியர், திறனாய்வாளர், கட்டுரையாளர், ஓவியர், சொற்பொழிவாளர், திரைப்பட இயக்குனர், பாடலாசிரியர் என்று பன்முகம் கொண்டவர். தமிழ் இலக்கிய உலகிற்கு புதுப்புது வகைமைகளை அறிமுகப்படுத்திக் கவிதைகளின் தரத்தை உயர்த்திக் கொண்டிருப்பவர்.

அவர்தம் ஆழ்ந்த ஞானத்தில் விளைந்திருக்கும் கவிதைகளைப் படித்துணர்வது எல்லையற்ற ஆனந்தத்தை அள்ளித் தரும் என்பதில் ஐயம் இல்லை.

மகாஞானி ரூமியின் சொற்களைப் புரிந்து கொள்ள வேண்டுமெனில் நாம் அச்சொற்களோடு வாழ வேண்டும். அவற்றின் அடியாழத்தைத் தொட முயற்சி செய்ய வேண்டும். ஆன்மீக அனுபவங்களைச் சிக்கல் இல்லாத சித்தாந்தமாகவே விளக்குவார் ரூமி. அவர் சொற்களில் கருணை குடியிருக்கும். காதல் கனிந்திருக்கும்.

ரூமியும் நானும் என்ற இந்நூலில் மகாகவி

தமிழன்பனார், மௌலானா ரூமியை அவரின் கவிதைகளிலிருந்து படைத்துக் கொண்டு, ரூமியோடு கொனியா தெருக்களில் நடந்து, உரிமையோடு வினாக்கள் தொடுத்து, அவர் இல்லத்திற்கும் சென்று உரையாடிய அனுபவத் தெளிப்புகளாக

இக்கவிதைகளை அமைத்துள்ளார். இவையெல்லாம் ரூமியின் கவிதைகள் கொடுத்த ஒளிபடைத்த பெருவெளியில் நிகழ்ந்தவையே.

புதுச்சேரி ஒருதுளிக் கவிதை வெளியீடான இத்தொகுப்பில் 60 கவிதைகள் உள்ளன.முகநூலில் பிறந்த இக்கவிதைகள், தமிழன்பன் ஐயாவின் கவிதை மகன் அகன் அவர்களால் நூல் வடிவம் பெற்றுள்ளன.

நாகூர் ரூமி என்னும் பேராசிரியர். முகமது ரஃபி, சூஃபியக் கோட்பாடுகளில் ஆழம் கண்டவர்.

அவர் அளித்துள்ள அணிந்துரை மற்றும் கவிஞர். நிஷாமன்சூர் அவர்கள்

மிர்தாவின் புத்தகம், குணங்குடி மஸ்தான் சாகிப் பாடல்கள் ஆகியவற்றை மேற்கோள் காட்டி அளித்துள்ள அணிந்துரையும் அற்புதமான இந்நூலுக்குப் பொருத்தமாக அமைந்துள்ளன.



தமிழன்பன் ஐயா தன்னுடைய அறிமுக உரையில்,

“நான் ஓர் எளிய மனிதனாகவே வாழ்ந்து வருகிறவன். ஆன்மீகத்தேடல், இறையியல் தெளிவு, மதநெறிப் பிடிப்பு ஏதும் அற்றவன். தத்துவம் என்றாலே இவ்அடிப்படைகளைச் சார்ந்திருக்க வேண்டும் என்னும் அடிப்படைகளை நம்பாதவன். ஆயினும் வாழ்க்கை என்னும் வாய்ப்பு அளித்துள்ள எல்லாத்

திசைகளிலுமான திரைகளை விலக்கிச்செல்லும் பயணத்தை மதிப்பவன்" என்று எழுதியுள்ளார். ஆழ்ந்த கருத்துகளை உள்ளடக்கிய இக்கவிதைத் தொகுப்பை எப்படி வாசிக்க வேண்டும், அணுக வேண்டும் என்ற தெளிவை இவ்வரிகள் மூலம் பெறலாம். அதனை இறுகப் பற்றிக் கொண்டு கவிதைக்குள் நுழையலாம்.

ரூமியின் செருப்பு, நீண்ட தலைப்பாகை, மேலும் புல்லாங்குழல், மீன், தண்ணீர், இறப்பு, காதல் இவற்றை மையப்புள்ளிகளாகக் கொண்டு கவிதைகள் நகர்கின்றன.

ஒரு கவிதையில்,

''நான் போன
நேரம்
ரூமி செருப்பில்
ஆணி அடித்துக்கொண்டிருந்தார்.
வலிக்காதா? என்றேன்.
ஆணிக்கும்தான் வலிக்கும்
சுத்திக்கும்தான் வலிக்கும்
கைக்கும்தான் வலிக்கும்
வலியில்லாமல்
என்னதான் நடக்கும்?

என்றார் ரூமி".

செருப்புக்கு வலிக்காதா? என்று கேட்க குழந்தையால் மட்டுமே முடியும்.

அறிவிலும், அனுபவத்திலும், கவித்துவத்திலும் உயர்ந்த நிலையில் இருக்கும் நம் மகாகவி, உண்மைக்கு மிக அருகில் சென்று உள்ளத்தால் எதையும் பார்க்கும் குழந்தையினிடத்தில் நின்று கேள்வி கேட்பதும், அதை மகாஞானி ரூமி குழந்தைத்தனம் என்று தள்ளாமல் பதில்களை அடுக்குவதும் ஞான வாயிலின் திறவுகோல் என்றே நான் உணர்கிறேன்.

வலியில்லாமல் என்னதான் நடக்கும்?

என்று கடைசி வரியில் வாழ்க்கைத் தத்துவத்தை சாறாகப் பிழிந்துத் தந்துள்ளார்.

வலி குறித்து கலீல் ஜிப்ரான்

கூறுகையில், வலி எந்த அளவிற்கு ஆழமாக உன்னைச் செதுக்குகிறதோ அந்த அளவிற்கு நீ மேன்மையுறுவாய் என்ற கருத்தையே வலியுறுத்துகிறார்.

''உளி தாங்கும் கற்கள் மட்டுமே சிலையாக மாறுமல்லவா!? ''

நாம் வலியில் இருக்கும் நேரம் ரூமியின் வரிகள் நம்மை ஆற்றுப்படுத்துகின்றன.

"காயம்தான்
வெளிச்சம் உனக்குள்
நுழையும் இடம்"

"உன்னைப் புண்படுத்துவது எதுவோ
அதுவே உன்னை வாழவைக்கும் "

"மகிழ்வின் கதவைத்திற
உனக்குள் பற"

என்றெல்லாம் அறிவுக் கண் திறக்க வார்தைகளில் ஒளியேற்றி வழிகாட்டியாக உடன் வருகிறார்.

அடுத்தொரு கவிதை இப்படி வருகிறது....

"படுத்துக் கொண்டிருந்தார்
ரூமி
செருப்புகளைத்
தலைக்கு வைத்திருந்தார்.
தலையணையைக் கால்களுக்கு
வைத்திருந்தார்
கேட்டேன்.
ஏன் கால்கள் மட்டமானவையா?
என்றார்".

வாழ்க்கைத் தத்துவம் இதில் அடங்கியுள்ளது.

ஏற்றத்தாழ்வுகள், மேலானது கீழானது போன்ற வரையறைகள் எல்லாமே சார்புநிலைத் தோற்றங்களே!

உயர்வு தாழ்வு நிலைகளை எல்லாம் உடைத்தெறிகிறது இக்கவிதை.

தலை எந்த அளவுக்கு முக்கியமோ அதே அளவிற்கு காலும் முக்கியம் என்று எளிதில் புரிவதைச் சொல்லி, நாமாக புரிந்து கொள்ளுதற்கு பலவற்றை அளித்துள்ளார் கவிஞர்.

இன்னொரு கவிதை...

''ரூமி
செருப்புக்கு
மெருகேற்றிக்கொண்டிருந்தார்
நான் போனபோது.
ஏன் புதிதாக வாங்கிக்கொள்ளலாமே
என்றேன்.
சளிப் பிடிக்கிறது தும்முகிறது
அறுபது ஆண்டுகளாச்சு
புது மூக்கு எங்கே கிடைக்கும் சொல்
என்றார்".

நாம் பொருள்களைப் புதிதாக வாங்க நினைக்கிறோம். ஆனால் நாம் மட்டும் பழையபடியே இருக்கிறோம் என்ற உட்கருத்தை இவ்வரிகள் உணர்த்துகின்றன. நம் எண்ணங்களைப் புதுபித்துக் கொள்ளவும், உயிர்ப்புடன் நாம் இயங்குவதற்கும் இதுபோன்ற கவிதை வரிகள் நமக்குத் தேவைப்படுகின்றன.

இன்னொரு கவிதை:

''இசைக் கருவிகளிலேயே
புல்லாங்குழல் தான்
சிறந்தது
ஏனெனில்
உதடுகள் தொடும் பேறு
வேறு எதற்கும் இல்லை
என்கிறீர்கள் ரூமி
பாதங்கள் தொடும் செருப்பு
எப்படி ?

ஆஹா மண்ணின்
மார்புத் துடிப்பை அதுவல்லவா
அறிய முடிகிறது!
ரூமி சொன்னார்".

அற்புதமான இக்கவிதை என்ன சொல்கிறது!? உதடு தொடும் புல்லாங்குழலும், பாதம் தொடும் செருப்பும் அதனதன் பயன்பாட்டு முக்கியத்துவம்

பேசப்படுதலே முறையாகும். மண்ணின் மார்புத் துடிப்பை உணரும் செருப்புகள் பேறு பெற்றவையே.

தத்துவார்த்த கண் கொண்டு பார்க்கையில் சில சமூக அவலங்கள், மேலோர், கீழோர் பாகுபாடுகள், உயர்ந்தோர், என்று ஒரு சாராரைக் கொண்டாடுவது, இழிந்தோர் என்று முத்திரையிட்டுச் சிலரின் வாழ்வாதாரங்களைப் பறிப்பது... இவையெல்லாம் இன்னும் அரங்கேறிக்கொண்டிருப்பதைக் மறைபொருளாகக் காணலாம்.

நந்தனை எரிச்ச நெருப்பின் அனல் இப்படியான சில கவிதைகளில் இன்னமும் தகிக்கிறது என்றே நான் உணர்கிறேன்.

''நான் போனபோது
ரூமி கையில்
ஒரு ரோஜா. இதன் சாரம்
எங்கிருக்கிறது?
கேட்டார்...
எனக்கென்ன தெரியும்
என்றேன்.
முள்களில் தான் என்றார் .

முள்கள் தான்
உங்களுக்குப் பிடிக்காதே
பிடித்திருந்தால்
எதற்குச் செருப்பு என்றேன்
பதில் சொன்னார்
ஏன்
என் செருப்புக்கு
முள்கள் பிடிக்கும்
எனக்கு ரோஜா பிடிக்கும்".....

பொருட்செறிவும், கவித்துவமும் நிறைந்துள்ள கவிதை இது. விருப்பும், வெறுப்பும் யாவர்க்கும் பொதுவான உணர்வுகளே. அதை உணரும்போது வாழ்வு அழகாகும்.

ஒரு மாலை நேரத்தில் ரூமி கண்ணாடியை அழுந்தத்துடைத்துக் கொண்டிருக்க, அப்போது அங்கு வந்த தமிழன்பனாருக்கும் ரூமிக்குமான உரையாடலாக படைக்கப்பட்டிருக்கிறது ஒரு கவிதை....

''அது
அழுக்கில்லாமல்தானே
இருக்கிறது
அப்புறம் என்ன? என்றேன்.

பார்த்தால்
எந்தப் பிம்பமும்
தெரியக் கூடாது.
அதுவரை துடைத்துக்கொண்டே
இருக்க வேண்டும்
ரூமி சொல்கிறேன் கேள்!

'என் வீட்டிலும் ஒரு கண்ணாடி
இருக்கிறது
நாளை கொண்டு வருகிறேன்
துடைத்துக் கொடுங்கள்'
சொல்லி முடிக்கவில்லை நான்
ரூமி சொன்னார்
'சரி!
நடையைக் கட்டு'....

இறுதி இரு சொற்களில் கவிதை தான் சொல்ல வந்ததை ஆணித்தரமாக சொல்லி விடுகிறது. அவரவர் வேலையை அவரவரே செய்ய வேண்டும் .....

உலகை மாற்ற நம்மால் இயலாதெனினும் , அக அழுக்குகளை அகற்றி நம் உள்ளத்தை தூய்மையாக வைத்திருத்தல் நம்மால் இயலும். பிம்பங்களே இல்லாதவாறு கண்ணாடியைத் துடைத்துத் துடைத்து சுத்தப்படுத்துவதைப் போல மன விகாரங்களைத் துடைத்தெறிதலின் அவசியம் பற்றி இக்கவிதை பேசுகிறது.

கடிதம்
எழுதுகிறேன்
என்ற ரூமி,

''காதலிக்கு எழுதினாலும்
கடன்காரனுக்கு எழுதினாலும்
கைப்பட அவரவரே தான்
எழுத வேண்டும்"

என்று ரூமியின் கூற்றாக தமிழன்பனார் எழுதியுள்ளார்.

இதில் புதைந்திருக்கும் மறைபொருள் யாதெனில், ஞானம் பெற வேண்டுமெனில் அதை நோக்கியப் பாதையில் நாமே பயணப்படும் வேண்டும்.

“உனது தீபத்தை
நீயே ஏற்று"

“உனது இதயம்
சமுத்திரம் போல் விரிந்து
மறைந்துள்ளது.
ஆழங்களை நீயே கண்டுணர்வாய்".

என்ற ரூமியின் வரிகள் இவ்விடத்தில் பொருந்துவதை உணரலாம்.

தாகம் கொண்ட மீனொன்றில் ரூமி இப்படி எழுதியிருப்பார்.

“எனது ஆன்மா வட்டமிடும் வான்வெளி நீ காதலுக்குள் பொதிந்திருக்கும் காதலும் நீ நான் உயிர்த்தெழும் இடமும் நீ .

நான் உன்னைப் பிரிந்திருந்த போது இவ்வுலகு இருக்கவில்லை வேறு எவ்வுலகும் கூட...

எவையெல்லாம் நான் தேடினேனோ அவையெல்லாம் என்றென்றும் நீயாகவே இருந்திருக்கிறாய்".

அதுபோலவே இத்தொகுப்பில்,

“உன்னோடு நான் இருக்கும் போது நம் காதல் என்னை உறங்க விடுவதில்லை நான் உன்னை பிரிந்திருக்கையில் கண்ணீர் என்னை உறங்க விடுவதில்லை"

“ஆர்ப்பாட்டமில்லாத ஒரு பெண் ஒரே ஓர் ஆணின் மீது செலுத்தும் காதல் ததும்பும் பார்வை தான்

ஆன்மீகம்"

இப்படிப் பளிச்சென்று சொல்வதற்கு எத்தனை ஆழ்ந்த ஞானத்தெளிவு வேண்டும்!!??

இரசிப்பதற்கும், சிந்திப்பதற்கும் ,

கொண்டாடுவதற்குமான கவிதைகளைக் கொண்ட இத்தொகுப்பில் என் மனத்தை உலுக்கிய ஒரு கவிதை இதோ உங்களுக்காக.

(கவிதை: 54)

பழைய சட்டை கேட்டவனுக்கு புதிது தர எண்ணிய உள்ளம், புதியதை ஏற்காதவன் மனநிலை, சூஃபிகள் கருணை மனம் இவையெல்லாம் மனத்திரையில் காட்சிகளாவதைத் தடுக்க இயலவில்லை.

இப்படியே ஒவ்வொரு கவிதையும் ஒவ்வொரு கோணத்தில் சமூக ஏற்றத்தாழ்வுகளையும், காதலையும், அழகியலையும், குறியீடுகள் வழியாக பேசிக்கொண்டே இருக்க,.... ஞான வெளிக்குள் மனம் பறந்து திரிவதை, இத்தொகுப்பை வாசிக்கும் போது நீங்களும் உணரலாம். குல்லா இல்லாமல் வெளியே போய் வருவோர் மத்தியில் தலையைக் கூட வீட்டில் வைத்துவிட்டு கடைவீதி வரும் ரூமியை தரிசிக்கலாம்.

பார்த்தால் எந்த பிம்பமும் தெரியாத கண்ணாடியாக மாற வேண்டும் என்ற எண்ணம் எழலாம்.

காற்றில்
வனத்தின் ஒவ்வொரு கிளையும்
ஒவ்வொரு விதமாக
நகரும்.
ஆனால் அவை
அசையும்போது வேர்களில்
இணைந்து கொள்ளும்.

இதைப் போலவே மகாகவி இன்னொரு கவிதை எழுதியுள்ளார்.

‘‘ஒவ்வோர் இலையிலும் மரம்
வாழ்கிறது
ஒவ்வோர் தளிரும் இலையும்
காயும் கனியும்
மரத்துக்கு நன்றாகத் தெரியும்

எதன் வளர்வும் முதிர்வும் உதிர்வும்
அதற்குத் தெரியாமல்
நடப்பதில்லை.

எதையும்
வளர்த்துப்பார்த்த அனுபவம்
இல்லாத காற்று
வெயிலின்போது
மரக்கிளை
அடர்த்தியில் தங்குகிறது

மழையின்போது
இலைகளைக் குடைபிடித்து
ஊஞ்சல் ஆடுகிறது

சும்மா போகாமல் இலைகளைச் சிலநேரம் கண்டபடி
சூறையாடுகிறது

காலத்தின்
ஆணையில்லாமல்
தளிர்களைப் பிஞ்சுகளைப்
பொறுப்பில்லாத விளையாட்டுப்
பிள்ளைபோலக் காற்று
கிள்ளி எறிவதை யார் கண்டிப்பது?

எனினும்
காற்று இல்லாதபோது
எதையோ பறிகொடுத்ததுபோல் உம்மென்று
முகத்தை வைத்துக் கொள்கிறது
மரம்."

இக்கவிதைத் தொகுப்பில் உள்ள கவிதைகள் ஞானத்தில் வேரூன்றியவை. அகக் கண்களைத் திறந்து வாசித்தால், தத்துவக் கால்கள் கொண்டு கவிதைகளுக்குள் நுழைந்தால் , மெல்லிய குரலில் பாடிக்கொண்டு சூஃபிகள் நிகழ்த்தும் சுழல் நாட்டிய நுட்பங்களை விளக்கிக் கொண்டிருக்கும் ரூமியை நீங்கள் காணலாம். தன் ஞானத்தாலும், கவித்துவத்தாலும், பேரன்பினாலும் ரூமியை அவர் கவிதைகளிலிருந்து படைத்துக்கொண்டு , ரூமியைக் காணச் செல்கையில்

"வீட்டுக் கதவுகளைத் தட்டிக் கொண்டே இருப்பேன். திறப்பவரைப் பார்த்ததும் திரும்பி விடுவேன்".

என்று கூறும் தமிழன்பனாருக்குள் சூஃபி ஞானியைக் காணலாம் அதுவே இத்தொகுப்பின் வெற்றி எனலாம்.

நன்றி. மீண்டும் சந்திப்போம்.

சின்னா

இரம்யாநடராஜன்
*

"சின்னா.உன் பொண்ணு உன்னவிட நல்லா அச்சாங்கல்லு ஆடுறா பாரு.."

செல்லம்மாவின் இந்த குரல் மனமெங்கும் ஒலித்துக்கொண்டே இருந்தது. பதினாறு வயதில் வாழ்க்கைப்பட்டு இந்த ஊருக்கு வந்த புதிதிலிருந்து அவள் தான் தோழி,சகோதரி,சமயத்தில் அம்மாவும். அவள் வாழ்க்கை ஆரம்பிக்கையிலேயே முடிந்ததில் ராசியற்றவள் என்ற முத்திரையோடு அக்கம்பக்கம் அண்டி வந்து உதவி செய்து வாழ்க்கை ஓட்டியவள். மற்றதுக்கெல்லாம் ராசி பார்க்கும் மக்கள் அவள் சமையலுக்கும் குழந்தை வளர்ப்புக்கும் வீட்டு வேலைக்கும் ராசி பார்ப்பதில்லை. அவள் அதற்காகவே பிறந்தவள் என்ற தீர்ப்பு அவர்களுக்கு. வடுக்கென்று ஒரு வார்த்தை சொன்னாலும் அரைமணியில் மறந்துவிட்டு வளைய வருவாள்.

அவளைப்பற்றிய எண்ணங்களே சூழ அமர்ந்திருந்தவளிடம்,"குடிக்க தண்ணி கொண்டா" என்று ஒரு தொணியில் சொன்னார் அவள் கணவர். அசைவற்று இருக்கும் அவளின் முகம் அருகே கை சுண்டிவிட்டு "ஏய் உன்னத்தான் என்ன பகல் கனவு..போ போயி தண்ணி கொண்டா..தாகமா இருக்கு". அவர் குரலுக்கு பணிந்த அவளின் அனிச்சை "ஆங்..இதோ கொண்டுவர்ரேங்க" என்று உள்ளே ஓடிச்சென்று தண்ணீர் கொண்டுவந்து கொடுத்தாள். "என்ன சின்னா..ஏதோ நினப்பா இருக்க. என்ன விஷயம்"என்றார் தண்ணீர் குடித்தபடி. "அது நம்ம செல்லம்மா நியாபகமா இருக்கு. முடியாம கிடக்கா அதான் மனசு அடிச்சிக்குது". "சரி சரி. பசிக்கற மாதிரி இருக்கு.. சூடா எதாவது செஞ்சு கொடு" என்று கால் மேல் கால் போட்டுக்கொண்டு சேரில் சாய்ந்தார்.

கண்ணில் நீர் கொப்பளிக்க, உடல் அவர் இட்ட கட்டளையை மேற்க்கொள்ள ஆயத்தமானது. சின்னா சின்னா என்று வந்துவந்து மோதியது செல்லம்மா குரல். எப்படியும் அவளை பார்க்கப்போக வேண்டும். கோவில் தவிர எதற்கும் அவரிடம் கேட்காமல் சென்றதில்லை. அப்படி அவர் மறுப்பவரும் இல்லை. இதில் மட்டும் இந்த இறுக்கம் ஏன் என்று புரியாமல் தவித்தாள். தன் மகளுக்கு தொலைபேசி அழைத்தாள். தன் மனத்தாங்கலை சொல்லிக்கொள்ள இருந்த ஒரு இடம் அதுதான்.

"அம்மா இன்னும் எத்தனை நாளைக்கு இப்படி இருப்பீங்க மா. பேரன் பேத்தியே எடுத்தாச்சு. இன்னும் எல்லாத்துக்கும் அவரைக் கேக்கனுமா. செல்லம்மாக்கு நீ ன்னா உசுரு மா. அவங்க என்ன நூறு மைல் தூரத்திலயா இருக்காங்க. அடுத்த ஊரு. அரைமணி ஆட்டோல. போய் பாத்துட்டு வாங்கம்மா". அவளும் தான் எப்போதும் சொல்லிப் பார்க்கிறாள். சின்னாவுக்கு தான் அவரை மீறும் திறமை இல்லை. "அவளே சீக்கா கிடக்கா நீ அங்க போயி என்னத்த பண்ணப்போற. அதெல்லாம் உயிர்பொழைக்காதுன்னு தான் சொல்றாங்க. இங்க இருந்த வரைக்கும் நம்மால ஆனது குடுத்தாச்சு. நீயெலாம் போக வேண்டாம் அங்க. இவ்வளவு தான் அவர் சொன்னது. மறுபேச்சு பேசி குரல் உயர்த்தி பேசவும் தோன்றாமல் கிடந்து தவித்தாள்.

விடுமுறைக்கு வீட்டுக்கு வந்த மகள், "அப்பா அம்மாவ கூட்டிட்டு செல்லம்மா அக்கா பாக்க போயிட்டு வர்ரேன் ப்பா". "அதெல்லாம் அங்க போக வேண்டாம். அன்னைக்கே சொல்லிட்டேனே. என்ன உங்க அம்மா தூது விடறாளா". "அப்பா எனக்கும் தான் ப்பா பாக்கனும் என்னை தூக்கி வளர்த்தவங்க...இப்பவோ அப்பவோன்னு இருக்காங்க. கண்டிப்பா அம்மாவ தேடும் அவங்க கண்ணு. இப்ப என்ன, வேலைலாம் முடிச்சாச்சு ஒரு மணி நேரம் தான் ஆகும் வந்துடுவோம் ப்பா. ஆட்டோ சொல்லிட்டேன்". ஏதோ செய்யக்கூடாத செயல் பற்றி காதில் விழுந்தது போல வெகுண்டார்.தான் அமர்ந்திருந்த நாற்காலியை காலால் எட்டிவிட்டு கடுகடுவென் எழுந்தார்,

"என்னது ஆட்டோ சொல்லிட்டியா. என்னடி போனாபோகுது பெத்த பொண்ணாச்சேன்னு பாத்தா என் கிட்டயே எதிர்த்து நிக்கற. உன் பட்டண புரட்சிலாம் அங்க வச்சிக்கோ. இங்க நடக்காது. அவ நான் சொன்னது தான் கேட்பா கேட்கனும். வந்தோமா அம்மா வீட்டுல தின்னோமா மூட்டையா கட்டினோமான்னு இருக்கனும். அவ்வளவு தான் உனக்கு இங்க உரிமை சொல்லிட்டேன்".

"என்னப்பா ரொம்பத்தான் பேசுறீங்க. கட்டிக் கொடுத்துட்டா உரிமை போயிடுமா. இது என் வீடு நீங்க அப்பா அம்மா இது இந்த பொறப்புக்கு அப்டி தான் அதெல்லாம் விட்டுக் கொடுக்க முடியாது.ஏன் ஏன் இப்ப அம்மா போயி செல்லம்மாவ பாத்தா என்ன. எவ்வளவு உதவி பண்ணிருக்காங்க. சின்னா சின்னா அம்மா பின்னாடியே இருப்பாங்க. போன வருசம் அம்மாவுக்கு கண் ஆபிரேஷம் பண்ணிட்டு வந்தப்ப நீங்களா பாத்திங்க. இதோ இதே அதிகார தோரணைல கண்ணாடி போட்டு தோச சுட்டு குடுன்னீங்க. செல்லம்மா க்கா இருந்துச்சோ அம்மா உடம்பு பொழைச்சுது. இதெல்லாம் உங்களுக்கு புரியாது ப்பா. எப்பவும் உங்கள பத்தி தான் யோசிப்பீங்க.."மகள் பேச பேச அவரின் பற்கள் நறநற ஓசையும் கண்ணில் தெறிக்கும் அனலும் சின்னாவை படுத்தியது.

"நிறுத்தும்மா..அப்பா கிட்ட பேசற கண்ணு. குரல் உயர்த்தாத. இதை இப்படியே விடு. எனக்கு யாரையும் பாக்க போக வேண்டாம். உள்ள வா கண்ணு. வம்பு வளக்காது..வா டீ"என்று தன் மகளை இழுத்துக்கொண்டு உள்ளே சென்றாள் சின்னா.

"அம்மாடி கண்ணு. இதோ பாரு உங்க அப்பா நல்லவரு மா. அவருக்குன்னு ஒரு இது இருக்கு. அதுல தான் நானும் இருக்கனும்னு நினைக்கறாரு. மத்தபடி கொடூரன் இல்லமா. நீ பேச பேச அவரு சங்கடப்படுவாரு கண்ணு. அப்பா மக சண்டைலாம் வேண்டாம் மா. அவருக்கு இந்த உணர்ச்சிவச படறது வராது. அவரு அப்டி தான். உங்களை எப்டிலாம் வளர்த்திருப்பாரு. படிக்க வச்சு நல்ல இடமா பாத்து உங்களுக்கு சொத்தும் வச்சு தன் சொந்த கால்ல நிக்கறாரு. நீ அவர இப்படி ஏசி பேசக்கூடாது கண்ணு".

"அம்மா நான் அவர திட்டல மா. நீயும் மனுஷி தான. உனக்கும் ஒரு மனசு அதுல ஒரு ஆசை இருக்கும் தான. நியாமா பாத்தா செல்லம்க்கா நம்ம பாத்துக்கனும் மா. நல்ல மருத்துவம் கொடுக்கனும். வியாதி வந்ததும் விரட்டி அனுப்பிட்டா என்ன நன்றி நமக்கு இருக்கு. இதெல்லாம் கேக்கலையே. போய் பாத்துட்டு வந்துட்டா என்ன ஆகிடும். நீயும் திருந்தமாட்ட அவரும் திருந்தமாட்டாரு போ". உண்மை தான். மனிதாபிமானம் தாண்டி நன்றி கடனும் உண்டு. எத்தனை அன்பு எத்தனை தியாகம் எவ்வளவு கவனிப்பு அக்கறை. உபயோகம் தீர்ந்ததும் தூக்கி எறியப்பட்டவள் செல்லம்மா. நினைக்க நினைக்க சின்னாவின் நெஞ்சுக்குழி அடைத்தது.

அன்று கோவிலுக்கு கிளம்பிக்கொண்டிருந்தாள் சின்னாவும் அவள் கணவரும். "சின்னா சின்னா.."குரல் கேட்டு வீட்டு வாசலில் வந்தாள் சின்னா. "வாங்க மதனி என்ன இந்த பக்கம். எப்டி இருக்கீங்க". "வெளிய எங்கயும் கிளம்பறையா சின்னா". "ஆமா மதனி. குலதெய்வம் கோவிலுக்கு தான். பசங்க நேரா அங்க வந்துடுவாங்க. இங்க கார் அனுப்பிருக்காங்க. போயிட்டு நாளை இராத்திரி வந்துருவோம்". "சரி நீங்க பாருங்க. அப்பறம் வரேன்". "என்ன ஏதோ சொல்ல வந்துட்டு சொல்லாம போறீங்க. சொல்லுங்க" என்றாள் சின்னா. "அது வந்து நம்ம செல்லம்மா செல்லம்மா... இன்னைக்கு விடிகாலைல தான் சின்னா". கேட்டுக்கொண்டிருக்கும் போதே நிலநடுக்கம் வந்தது போல உணர்ந்தாள் சின்னா. பின்னால் இருந்த அவள் கணவர் "வா வா மணி ஆச்சு".

"ஏங்க..செல்லம்மா ங்க".விக்கி வெடித்து வார்த்தையை முழுங்கினாள். "அவ விதி முடிஞ்சு அவ போயாச்சு. நீ வா வந்து வண்டி ஏறு மணி ஆச்சு. வந்து விசாரிக்கலாம். வா வா" என்று அவசரப்படுத்தினார். அவரின் குரலுக்கு இசைந்து அவளும் அவர் பின்னாலையே சென்று வண்டியில் ஏறினாள். "ஏய் இத பாரு. அங்க வந்து எல்லார் கிட்ட சொல்லி சொல்லி புலம்பாத. போறது சாமி கோவிலுக்கு. அமைதியா கும்புட்டு ஊரு வந்து சேரனும். புரிஞ்சதா. முக்கியமா உம்பொண்ணுக்கிட்ட எதுயும் பேசாத. சொல்லிட்டேன் ஆமா".

ஏதோ கனவில் கேட்டது போல இருந்தது அவரின் குரல். சன்னலோரம் சாய்ந்து வெளி காற்றுடன் பேசிக்கொண்டும் மனதால் புலம்பிக்கொண்டும் வந்தாள் சின்னா.

"சின்னா சின்னா..".வாசலில் ஒரு குரல். ஊருக்கு சென்று வந்தது இருந்து மனச்சோர்வும் உடல் சோர்வும் சேர்ந்தாற்போல் சின்னாவை ஆட்கொள்ள மெல்ல எழுந்தாள். "அம்மா இருங்க நான் பாக்கறேன் நீங்க உக்காருங்க".என்று வாசலைத் திறந்த அவள் மகளுக்கு காத்திருந்தது பேரதிர்ச்சி.

"என்ன அத்த சொல்றீங்க செல்லம் க்கா ...எப்போ அத்த..அய்யோ அம்மா சொல்லியே..இதோட தான் கோவிலுக்கு வந்தாளா. அதான் அப்படி வாயடைச்சு உக்காந்திருந்தாளா. அய்யோ..அம்மா..அம்மா..என்னம்மா பண்ணிட்டிருக்கீங்க. அம்மா பேசுங்க மா. துக்கத்த எப்டி மூடி இருக்கீங்க ம்மா. நல்லது இல்ல மா. அம்மா அம்மா இங்க பாருங்க செல்லம்மாக்கா உனக்கு கொடுக்கச் சொல்லி கொடுத்திருக்கு பாருங்க ம்மா. கடைசில உன் பேர தான் சொல்லுச்சாம் அக்கா..அம்மா பாருங்க".

கையில் வாங்கிய சின்னா வெறிக்க வெறிக்க பார்த்துக் கொண்டிருந்தாள். குட்டைப் பாவாடை காற்றில் மிதக்க கை இருண்டும் விரித்து தலைமுடி காற்றில் பறக்க சின்ன வாயில் புன்னகையுடன் இருக்கும் ஒரு சுட்டிப்பெண்ணின் குட்டி சிலை.

'சின்னா..நீ பாக்க தான் பெரிய பொம்பள..உள்ளுக்குள்ள ஒரு குட்டி பொண்ணு தான். இது எனக்கு நல்லா தெரியும். ஒரு நா உனக்கு பாவாட சட்ட போட்டு ரெட்ட பின்னல் போட்டு நான் அழகு பாக்கறனா இல்லையா பாரு...எனக்கு ஒரு ஆச சின்னா உன்ன மாதிரியே ஒரு பொண்ணு பெத்துக்கனும்னு..இப்ப முடியாது..அடுத்து பிறப்பேன்ல உனக்கு முன்னாடி பொறந்து நீ வரும்போது என் வயத்துல வாங்கிக்கப்போறேன்....சின்னா சின்னா..இந்தா பாரு ஆறுக்கு போனேனா அங்க உனக்காக கூழாங்கல்லு பொறுக்கிட்டு வந்தேன். என் சீல தலப்புல இவ்வளவு தான் கொண்டுச்சு..நாம மட்டும் பாவட சட்ட வயசுல இருந்தோம் பாவாடை நிறைய பொறுக்கிட்டு வந்திருக்கலாம்'.

வீடெங்கும் செல்லமாவின் சிரிப்பும் பேச்சும் எதிரொளித்தது. "ஆஆஆஆ... ஆஆஆஆஆ...ஆஆஆஆஆ"என்று அனத்தத் தொடங்கினாள் சின்னா. சத்தம் கேட்டு வெளியில் வந்த அவள் கணவர் "ஏய் என்ன.. கையில என்ன அது..".படக்கென்று புடுங்க முயற்சித்தவருக்கு கையை இறுக்கி மூடிக்கொண்டாள் சின்னா. ஏதோ ஒரு உந்துதல் பேரில் அவள் கையிலிருந்து பலவந்தமாக இழுத்தார். அங்கு ஒரு மௌனப்போராய் இது போய்க் கொண்டிருக்க.."இப்ப சந்தோசமா ப்பா உங்களுக்கு. அந்த அக்கா போயாச்சு. அந்த துக்கத்த கூட வெளிப்படுத்த முடியாம அம்மாவ பொம்ம மாதிரி கோவிலுக்கு கூட்டிட்டு வந்திருக்கீங்க. மனசே இல்லப்பா உங்களுக்கு. கடைசி கடைசியாகவாவது அக்காவ பாக்க விட்டிருக்கலாம்ல. என்ன புத்தி ப்பா உங்களுக்கு". அழுகையும் கேவலுமாக தன்னை சாடிக்கொண்டிருக்கும் மகள் மேல் வந்த கோபத்தில் சின்னா கையிலிருந்த அந்த பொம்மையை வேகமாக புடுங்கி தரையில் தொப்பென்று போட்டார். தலை தனியாக விழுந்தும் சிரித்துக்கொண்டே இருந்த அந்த பொம்மையை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த சின்னா..

படபடவென தரையில் விழுந்து "செல்லம்மா..செல்லா..செல்லா..போயிட்டியா டி.... ஏன் டி...என் மேல கோபமா செல்லா..அய்யோ..செல்லா..செல்லம்மா..."என்று வீடே அதிரகதறி புரண்டு அரட்டிக்கொண்டிருந்த சின்னாவை கண்டு பயம் தொற்றிக்கொள்ள எதும் பேசாமல் நின்றார் அவள் கணவர்.

அம்மாவின் மன பாரம் குறையட்டும் என்றே அவள் மகளும் அமைதியாக கண்ணீர் விட "செல்லா செல்லம்மா செல்லம்மா..என் அம்மா...எங்கடி போன... மன்னிச்சிருடீ மன்னிச்சிரு டீ..நான் பாவி டி...அய்யோ இனி எப்டி டி பார்க்கப்போறேன்...என்னடி பண்ணப்போறேன்..என் செல்லா..செல்லம்மா என்று அந்த உடைந்த பொம்மையை கட்டிக்கொண்டு கதறினாள் சின்னா. நேரம் செல்ல செல்ல அவள் அழுகை குறைந்து தேம்புதல் ஆனது. மெல்ல எழுந்து கண்களைத் துடைத்துக் கொண்டாள். புடவையை சரி செய்துக்கொண்டு..."அம்மாடி என்ன ஆறுக்கு கூட்டிட்டு போறியா ம்மா" என்றாள். என்ன செய்வது என்று புரியாமல் தன் அப்பாவை பார்த்தாள் அவள். "கண்ணா கூட்டிட்டு போடா..தயவு செய் டா"கண்கள் கலங்க தன்முன் நின்று கைகுவித்த அம்மாவை பார்த்து அதிர்ந்தாள். "அய்யோ அம்மா என்னம்மா..வாங்க மா கூட்டிட்டு போறேன்" என்று அம்மாவின் கையை பிடித்துக்கொண்டு சென்றாள் அவள்.

உடைந்த பொம்மையை ஒரு கையில் வைத்துக்கொண்டு மறு கையில் தன் மகளைப் பற்றிக்கொண்டு திரும்பி தன் கணவரை பார்த்தாள் சின்னா. அந்த பார்வையில் ஆயிரம் இருந்து ஒன்றும் புரியாமல் மலங்க மலங்க விழித்துக் கொண்டிருந்தார் அவர். நீரில்லா ஆற்றில் இறங்கிய சின்னா தன் கைகளால் ஒரு குழி பறித்து அந்த உடைந்த பொம்மையை புதைத்து மூடினாள். "செல்லா...செல்லம்மா... உடைச்சிட்டேன் டி..உன்கிட்ட இருக்கும் போது நல்லா இருந்திருக்கும்..நான் உடைச்சிட்டேன் டி..செல்லா..." மௌனமான விசும்பலுடன் அங்கு அமர்ந்தாள் சின்னா.

தூரத்தில் சில சிறுமிகள் தங்கள் பாவாடையில் கூழாங்கல் பொறுக்கிக் கொண்டிருந்தார்கள்.அவர்களின் துடுக்கான விளையாட்டில் செல்லா தெரிந்தாள். "அம்மா இருட்டுது வீட்டுக்கு போலாமா" மகளின் குரல் கேட்டு திரும்பினாள். "ம்ம்ம்" என்ற சின்னாவை வியப்புடன் பார்த்தாள் அவள். "அம்மா நீங்க சமாதாமா இருக்கீங்க தான..இல்லனா இன்னும் கொஞ்ச நேரம் இருக்கலாம் மா. அவசரம் இல்ல".

"இனி என்ன மா. மணி ஆச்சு. வீட்டுல வேலை கிடக்கு. முடிக்கனும். போலாம் கண்ணு" என்று எழுந்து சென்றாள். தன் அம்மா எதை புதைத்தாள் என்ற கேள்வியுடனேயே பின்னால் சென்றாள் அவள். சிறிது தூரம் சென்றதும்..திரும்பி கல் பொறுக்கிக் கொண்டிருக்கும் சிறுமியரைப் பார்த்தாள் சின்னா. அவசர அவசரமாக கற்களை அள்ளிக்கொண்டு ஓடும் அச்சிறுமிகளின் பாவாடையிலிருந்து சில கற்கள் நழுவி விழுந்துக் கொண்டிருந்தது.

Hindu lady டாக்டர் ருக்மா

சுரேஷ்குமார்
தமிழாசிரியர் , அரசுப் பள்ளி, தேனி

*1864*ல் மகராஷ்டிராவின் மராத்தி குடும்பத்தில் பிறந்தவர் ருக்மா. அப்பா ஜனார்த்தனன் பாண்டுரங்கன். ஆசாரி குடும்பத்தை சேர்ந்தவர்..அம்மா ஜெயந்திபாய்..ஓரளவு வசதியான குடும்பம்.அப்பா சிறு வயதில் இறந்து போக, அம்மா ஜெயந்தி குடும்ப சொத்துகளை மகள் ருக்மா பேரில் எழுதி வைத்துவிட்டு மனைவியை இழந்த சக்ராம் அர்ஜுன் என்ற மருத்துவரை திருமணம் செய்து கொள்கிறார்.

11 வயதில் அந்த கால முறைபடி தன்னை விட *9* வயது மூத்த தாதாஜி பிகாஜி என்பவருக்கு ருக்மா திருமணம் செய்து வைக்க படுகிறார். ஆனாலும் கணவன் வீட்டுக்கு போகாமல் ஸ்டெப் பாதர் அர்ஜுன் ,தாய் ஆகியோருடன் வசித்து வருகிறார்.

அருகில் இருந்த கிறிஸ்துவ மிஷன் லைப்ரரியில் வாசிப்பு .அம்மாவும் பெண்ணும் ஆரிய சமாஜ கூட்டங்களுக்கும் போகிறவர்கள். ருக்மாவின் மாமியார் இறந்து போக, தாதாஜி ருக்மாவை தன்னுடன் வாழ அழைக்கிறார்.. ருக்மா தனக்கு விருப்பமில்லை என்று மறுக்கிறார்.அவர் இரண்டாவது தந்தை அர்ஜுன், ருக்மாவின் கருத்தை ஆதரிக்கிறார்.

தாதாஜி ருக்மாவின் பேரில் இருக்கும் சொத்துக்காக, அர்ஜுன் ருக்மாவை தன்னுடன் வாழ அனுப்பவில்லை என்று வக்கீல் நோட்டிஸ் அனுப்புகிறார்..

ருக்மா தான் தாதாஜியுடன் வாழ விரும்பவில்லை என்று கோர்ட் ஏறுகிறார். *1885* ல் *dadaji vs rukmabai* வழக்கு சட்ட அறிஞர்கள் *Payne,Gilbert,sajam*, தலைமையில் வழக்காகிறது.. கோர்ட் ஹிந்துதிருமண முறைக்கும், ஆங்கில

சட்ட முறைக்கும் இடையில் அல்லாடுகிறது..அறியா பருவத்தில் ருக்மாவின் நடந்துள்ளது என்று நீதிபதி *Robert hill pinley* தீர்ப்பு சொல்ல, வழக்கு பரபரப்படைகிறது..

ருக்மா பாய் திருமணம்

ஹிந்து அமைப்புகள் ஆங்கில சட்டம் ஹிந்துக்களின் புனித தன்மைக்கு எதிரானவை என்று குற்றம் சாட்டினர். பாலகங்காதர திலகர் தன் பத்திரிக்கையில் நீதிபதியை கடுமையா விமர்சிக்கிறார். இங்கிலாந்தில் ராணிக்கு நீதிபதி குறித்து கண்டனம் அனுப்பப்படுகிறது.

. இந்திய வரலாற்றில் முதன் முதலாக ருக்மா வழக்கு அப்பிலுக்கு போகிறது. பெண்ணுரிமை அமைப்புகள் ருக்மாவுக்கு ஆதரவாக களம் இறங்கின..

ருக்மா கணவருடன் வாழ வேண்டும் அல்லது 3 மாதம் சிறை தண்டனை என்று தீர்ப்பளிக்க, தான் இன்னும் அதிக பட்ச தண்டனை கூட ஏற்க தயார். ஆனால் கணவருடன் வாழ மாட்டேன் என்று கோர்டில் ரிட்டர்ன் சப்மிட் செய்கிறார்.



கணவருடன் ருக்மா பாய்

வழக்கு மேலும் பரபரப்பாகிறது. ருக்மாவுக்கு ஆதரவா *Eva macmulan ,Walter macmulan , shivajirao , behramji malabari* போன்றவர்கள் போராட தத்துவவாதி மேக்ஸ் முல்லர் எலிஸபத் ராணிக்கு நீண்ட வேண்டுகோள் ஒன்றை அனுப்புகிறார்.

ஹிந்து திருமண அமைப்பு பெண்களுக்கு எதிராக உள்ளது.ருக்மா நல்ல புத்திசாலி. அவர் படிக்க வைக்கப்பட வேண்டும்.திருமண வயது குறித்து சட்டம் இயற்றப்பட வேண்டும் என்று எழுதுகிறார். ருக்மா டைம்ஸ் ஆப் இந்தியா பத்திரிக்கையில் *Hindu lady* என்ற புனை பெயரில் தொடர்ந்து பெண்ணுரிமைக்காக எழுதினார்.

1888 ல் ருக்மாவிற்கு எதிரான வழக்கு டிஸால்வ் செய்ய படுகிறது. தாதாஜிக்கு நஷ்ட ஈடு கொடுத்து, ருக்மா திருமணம் செல்லாது என்று அறிவிக்கப் படுகிறது.அன்றிலிருந்து ருக்மா வெள்ளை புடவை உடுத்த நிர்பந்தப்படுத்த பட்டார்.

ருக்மா தான் மருத்துவராக விருப்பம் தெரிவித்தார்...பல பெண்ணுரிமை அமைப்புகள், கிறிஸ்துவ மிஷனரிகள் பெக்ரம் மலபாரி போன்ற தனிநபர்கள் நிதி சேர்த்து தர *1889* லண்டனில் டாக்டராக படிக்க போகிறர்.

இங்கிலாந்த் ராணி முயற்சியால் *1891* ல் *age of consent act* கொண்டுவரப் படுகிறது. பெண் குழந்தைகளின் பால்ய விவாகம் தடை செய்ய படுகிறது .

ஆனந்தி பென் ஜோஷிக்கு முன்னதாக படிப்பை முடுத்து விட்டு டாக்டராக பணிசெய்ய ராஜ்கோட்டில் சேர்கிறார். *1930* வரை மும்பையில் டாக்டராக சேவை செய்தார் ருக்மா.. *Purdah - the needs for its abolition* என்ற சேவை மையத்தை தொடர்ந்து செயல்படுத்தினார்..

ஹிந்து மதம், இங்கிலாந்து அரசு ,ஆணாதிக்க சமுகம்.உறவுகள் என்று நாலா புறமும் தொடர்ந்து எதிர்த்த போதும் தன் உரிமைக்காக விடாது போராடி வெற்றி பெற்றார்.

அமெரிக்கத் தமிழப் பெண் ஆளுமைகள்-12

கவிஞர் டெய்சி ஜெயப்பிரகாஷ், கலிஃபோர்னியா

மேனகா நரேஷ்

கணினியாளர், கவிஞர், எழுத்தாளர், சமூக ஆர்வலர் என்று பல்வேறு தளங்களில் பயணித்துக் கொண்டிருக்கும் கவிஞர் டெய்சி அவர்களை "சக்தி" இதழ் வாசகர்களுக்கு அறிமுகப்படுத்துவதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். அவரது பேட்டி இதோ உங்களுக்காக!

1. தங்களைப் பற்றிய அறிமுகத்தை எங்கள் வாசகர்களுக்காகக் கூறுங்கள்.

என் பெயர் டெய்சி ஜெயப்ரகாஷ். நான் தஞ்சை மண்ணில் இருந்து வந்தவர். கடந்த 28 வருடங்களாக கலிஃபோர்னியாவில் என் இரு மகன்களுடனும் கணவருடனும் வசிக்கிறேன். நான் ஒரு கணினியாளர். தமிழ் எனது மூச்சு. நான் அரசியல் மற்றும் சமூக நல ஆர்வலர், மற்றும் பேச்சாளர். கவிஞராய் இருப்பதைப் பேறாகக் கருதுகின்றேன்.

2. உங்களுக்கு மிகவும் பிடித்த எழுத்தாளர் யார்?

எழுதுபவர் எழுத்தாளர் என்று கொண்டால் திருவள்ளுவரே எனக்கு பிடித்த எழுத்தாளர் எனலாம். வாழும் வழிமுறைகளை அவரிடமிருந்து கற்றுக்கொண்டேன்.

3. உங்கள் எழுத்து மூலம் நீங்கள் மாற்ற விரும்பும் சமூகக் கருத்து எது?

தமிழின் மேன்மையை, தொன்மையை மேலும் உலகினுக்கு உரைப்பது. சமூக நீதியின் அவசியத்தை மக்களிடம் கொண்டு சேர்ப்பது.

4. இன்றைய சமூக ஊடகங்கள் தமிழ் இலக்கியத்தில் ஏற்படுத்தும் தாக்கங்கள் பற்றி உங்கள் கருத்து என்ன?

தமிழின் தொன்மை குறித்த கருத்துகள், அரசியல் காரணங்களால் வெளிவராதவை கூட வெகுஜன மக்களை எளிதாக சமூக ஊடகங்கள்

மூலமாக சென்றடைகின்றன. பல்வேறு வலைதளங்களில் தமிழ் இலக்கியங்கள் படைக்கப்படுவது, படிப்பதற்கும், கேட்பதற்கும் சிறப்பாக உள்ளது.

இருந்த போதும் பொய்யான கருத்துகளும் எளிதில் மக்களை சென்றடையும் அபாயமும் இதில் உள்ளதை மறுப்பதற்கு இல்லை.

5. வாழ்க்கை அனுபவங்கள் உங்கள் எழுத்தின் மீது எவ்வகையான தாக்கத்தைப் ஏற்படுத்துகின்றன ?

அனுபவம் என்று சொல்வதற்கு இல்லை என்றாலும், படித்தறிந்த சமூகநீதி கருத்துகள் என் எழுத்தின் எல்லா கோணத்திலும் மேம்பட்டு இருப்பதை உணர முடிகின்றது.

6. அயலகத்தில் நீங்கள் ஆற்றிவரும் தமிழ்ப்பணிகள் என்ன?

பல ஆண்டுகளாக தமிழ் பள்ளியில் தன்னார்வலராக சிறார்களுக்கு தமிழ் கற்பிக்கிறேன். தொடர்ந்து பட்டிமன்றங்கள் மற்றும் கவியரங்குகளில் பங்கு பெற்று வருகிறேன். தமிழ் வானொலியிலும் பல்வேறு தளங்களில் தன்னார்வலராக பணியாற்றி உள்ளேன்.

7. நீங்கள் இதுவரை எத்தனை நூல்கள் எழுதி இருக்கிறீர்கள்?

இதுவரை ஒரு நூல்தான் அச்சில் வந்துள்ளது. 'செம்மொழியே தமிழ் மொழியே, நீ வாழி' என்பது அதன் தலைப்பு. இரு புத்தகங்கள் எழுதப்பட்டுக் கொண்டுள்ளன.

8. நீங்கள் பெற்ற விருதுகளைப் பற்றிக் குறிப்பிடுங்கள்?

தமிழன்பன்80 - வருதையும், சிறந்த ஊடகவியலாளர் என்ற விருதையும் பெற்றுள்ளேன்.

9. பெண் எழுத்தாளராக இருப்பதில் உங்களுக்கு எந்த விதமான சவால்கள் இருக்கின்றன?

இளமை காலங்கள் முழுவதும் அலுவலக கணினிப் பணி, குழந்தைகள் மற்றும் குடும்பத்தை பேணும் பணி என்று ஓடிக் கொண்டு இருந்த வாழ்க்கையில் இன்னும் எழுத்தாளராக முழுமையாக ஈடுபட இயலவில்லையே என்ற சிறு வருத்தம் எனக்கு உண்டு.

குடும்பத்தை பாதிக்கா வண்ணம் நமது செயல்பாடுகளை சுருக்கி கொள்ள வேண்டிய சில சொல்லப்படாக் கோடுகள் இன்றளவும் சமுதாயத்தில் நிறைந்தே உள்ளன.

10. சமூகத்தில் பெண்களின் கருத்துகளையும் குரலையும் வெளிப்படுத்துவதின் முக்கியத்துவத்தை நீங்கள் எப்படி பார்க்கிறீர்கள்?

யாரால் எல்லாம் முடியுமோ அவர்கள் எல்லாருமே தங்கள் குரலை சமூகத்தில் நேர்மையாய், பிறரின் நலனுக்காய் பதிவு செய்யலாம். ஒரு ஆணாய் இருந்து பெண்களின்

வாழ்வுக்காய் குரல் கொடுத்த பெரியாரே எனக்கு சிறந்த உதாரணமாக தோன்றுகின்றார். ஆண், பெண் என்ற பேதம் இல்லை. கற்ற பெண்கள் சமூகத்தில் தங்கள் கருத்துகளை துணிந்து பதிவு செய்ய இயலும். அதுவே கல்வியின் பயனும். பெண்களுக்கு கல்வி வேண்டும் கல்வியை பேணுதற்கே என்ற பாரதிதாசனின் பாடல் வரிகள் உற்று நோக்க வேண்டிய கருத்தாகும்.

11. உங்களது எதிர்கால திட்டங்கள் என்ன?

எதிர்கால திட்டம் என்பது எல்லாம் மிகப் பெரிய வார்த்தை. "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்ற பொது மறையை நம்புகின்றேன்.பிறக்கும் போது மக்கள் அனைவரும் சமமே என்ற சமூக நீதி எங்கும் தழைக்க சிறு துரும்பாய் என் எழுத்துக்கள் பயன்பட வேண்டும் என்பதே எனது சிறிய ஆசை.

அயலகத்தில் தமிழை வளர்க்கும் கவிஞர் டெய்சியின் தமிழ்ப்பணி சிறக்க மனமார்ந்த வாழ்த்துகள்!

-பேட்டியாளர்- மேனகா நரேஷ்

மரணத்தின் வேர்கள்

முதிர்ந்த இலைகளின்
பழுத்துதிர்தலை
இயல்பெனக் கானம்
இசைக்கிறது காடு.

அடர் பச்சை இலைகளும்
இளம் பச்சை துளிர்களும்
உதிர்கையில்

மரணத்தின் வேர்களைத்
தேடித்துழாவுகிறது மரம்

இயல்பாகவே இயங்கிக்
கொண்டிருக்கிறது காடு.

அ.ஈடித் ரேனா.

1.

தைரிய லக்ஷ்மி

வை.மு.கோதைநாயகி அம்மாள்

தேற்றியும் தட்டிக் கொடுத்தும் சமாதானப்படுத்தினாள். அவளை யறியாத ஒரு பெருமூச்சு வந்தது. இதைக் கண்ட சுப்ரமணியம், நாகலக்ஷ்மீ! நீ என்னமோ என்னைத் தட்டிக் கொடுத்து தாஜாபண்ணுவதில் உபயோகமில்லை. அந்தப் பெண் இம்மா மாதிரி துடுக்காக நடந்துகொண்டது ஏதோ பெரிய விபரீதத்திற்குத்தான் வழியாகிவிட்டது என்று எனக்குத் தோன்றுகிறதேயன்றி நல்லதாக முடியும் என்று மனத்தில் படவே இல்லை நான் இப்போதே அந்த ஊருக்குப்போய் ஹாஸ்டல் தலைவியையும் காலேஜ்ப்ரின்ஸ்பாலையும் கண்டு பேசி நந்தினியைக்கண்டித்துவிட்டு தான் வரப்போகிறேன். எனக்கு இன்னொரு சந்தேகங்கூடத் தோன்றுகிறது. அதாவது நந்தி னிக்கு இத்தனை உணர்ச்சியுடனும் அழகான வசீகரமான பதங்களுடனும் கதை எழுதத்தெரியுமா என்ன! அல்லது நடிக் கத்தெரியுமா! இரண்டும் அவளுக்கு எப்படி வந்தது என்று எனக்குப்பெரிய சந்தேகமாகவே இருக்கிறது. அதோடு உடம் பில் கொஞ்சமும் பயமே இல்லாமல் நந்தினி வைத்தியநாதன் என்று நாகரீகமுறையில் பெயரைத் துணிச்சலாகப் போட்டுக் கொண்டு கவர்னர் முன்னிலையில்தான் கூத்தாடிபோல்நடித்து இப்படிச்செய்வதென்றால் அதுபிறருடைய போதனையும் சூழ்ச் சியுந்தானிருக்கவேண்டும்!உறத்த குரலில் பேசியறியாத பெண் ணுக்கு கண்களில் நீரைக்கக்கவைக்கும்படி சுடச்சுட எப்படி எழுதவும் பேசவும் தெரியும்? இம்மாதிரி செய்துவிட்டதால் பெத்த பிதாவாகிய என் மனமே கோபமடைகிறதென்றால் அவர்களும் இந்த அலங்கோலத்தைப் பாராதிருப்பார்களா? நாடகக்காரி எங்களுக்கு வேண்டாம் என்று சட்டமாகச் சொல்லிவிட்டால் என்றுமே விமோசனமில்லாத வாழாவெட்டி என்கிற போர்வைக்குள்ளல்லவா அவள் உலாவ நேரும். இதை யோசிக்கவேண்டாமா! என்று கத்துகிறார்.

இவைகளைக் கேட்டுக்கொண்டேவந்த மருமகள் சிரித்தபடி மாமா! உறத்துப் பேசத்தெரியாதவளுக்கு உணர்ச்சியுடன் பேசவருமா! எழுதவருமா? என்று கேட்கிறீர்கள். சில மாத காலமாய் நேசி என்கிற பத்திரிகையில் உத்திரா என்கிற பெயருடன் ஒருத்தி எழுதியிருந்த கதைகளை நீங்கள் வெகு ஸ்வாரஸ்யமாய்ப் படித்துப் புகழ்ந்து பேசிவருகிறீர்களே ! அது யாருடைய கதை தெரியுமா ! தெரிந்தால் நந்தினிக்குக் கிடைத்த பெயர்தான் எனக்கும் கிடைக்கும். இக்காலத்தில் புனைப்பெயர் தாண்டவம் தான் பெரிதாக இருக்கிறதே. அதைப்போல் நானும் எனது நக்ஷத்திரத்தின் பெயரை வைத்துக்கொண்டு தானே எழுதிவருகிறேன். ஏதோ பத்தி ராதிபர் கொடுக்கும்

சன்மானத்தினால் நம் குடும்பத்தின் சிலவுக்கு சற்று சகாயமாயிருக்கிறது. இதை நீங்கள் இனி யாவது நம்புகிறீர்களா...

என்று மருமகள்சொல்வதைக்கேட்டதும் சுப்ரமண்யமும் நாகலக்ஷ்மியும் ப்ரமித்துப்போனார்கள். நாகலக்ஷமி மருமக ளைச்சேர்த்துக் கட்டியணைத்து முத்தமிட்டாள்... என்னுடைய சந்தோஷம் கரைபுரண்டுபோகிறது. உணர்ச்சியும், வேகமும் ததும்பும் கதைகளை எழுதிய உன்னைக்கூட அப்பா சந்தேகிப் பாரோ என்னவோ ! உள்ளத்தில் பொங்கிவரும் அனுபவம், பார்க்கும் அனுபவம், கேட்டும்படித்தும் முதலிய எத்தனையோ விதத்தில் மனிதர்களின் மூளை விசாலத்தை அடைகிறது. எந்த வித்தையிலாகட்டும், பிறக்கும்போதே தேர்ச்சிபெற்று அனுபவத்துடன் பிறந்துவிடுகிறார்களா! இதென்ன பேச்சு? நந்தினி நீர்பூத்த நெருப்புப்போன்று சகல உ உணர்ச்சிகளையும் தன்னிதயத்திலேயேவைத்து மூடி இருப்பவள். எப்படியும் தள்ளிவைத்தது வைத்தாகிவிட்டது; இனி சேர்த்துக்கொள் ளாவிட்டால் புதியமோசம் ஒன்றுமில்லை. தனது உணர்ச்சியை – தன்னிதயக்கொதிப்பை – அந்த முட்டாள்களும் ஊரும் நாடும் நன்கறியட்டும். இனியாவது வரதக்ஷிணைக் கொடுமை யின் பயங்கரத்தை யாராவது ஒருவரேனும் உணர்ந்துபயந்து அந்தப் பேயை ஓட்டித் தலைமுழுகட்டும் என்று அதீதமான போக்கில் மனதுடைந்துபோய்தான் துணிந்து எழுதியிருக் கிறாள். வைத்தியநாதன் என்கிற பெயரைவைத்துக்கொள் ளக்கூடாது என்று எந்தச்சட்டத்தினாலும் அவளைக் கட்டுப் படுத்த முடியாது. தாராளமாய் அக்கினி சாக்ஷியாய்ப் பலர் அறிய பெற்ற உரிமையைக் கையாள அவளுக்கென்ன பயம். ஏன் பின்னடையவேண்டும். அவள்செய்தது மிகவும்போற்றத் தக்கது என்று நான் பெருமைப்படுகிறேன். என்னுடைய பெண்ணும், நாட்டுப்பெண்ணும் சிறந்த எழுத்தாள திலகங்க ளாகி ப்ரகாசிக்கப்போவதைப்பற்றி நான் பரம சந்தோஷ மடைந்து பூரிக்கிறேன். உலகத்தில் செல்வ நிலைமைக்கு தரித்திரம் தாண்டவமாடுகிறதேயன்றி கற்பனை ஊற்றுச்சுரக்கும் அழியாத செல்வத்திற்கும் அனுபவ செல்வத்திற்கும் பஞ்சமில்லாது பகவான் வைத்து ரக்ஷிக்கட்டும்! என்று உத் ஸாகமேலீட்டால் சொல்லும்போது தபால்காரன் ஒரு கடி தத்தைக்கொடுத்தான். அது நாகலக்ஷக்ஷ்மியின் பேருக்கு இருந்த தால் அவளே உடைத்துப் படிக்கவாரம்பித்தாள்.

அம்மாவுக்கு நந்தினி நமஸ்காரம். உபயகுசலம்.

நான்இக்கடிதம் எழுதுவதற்கு முன்பே விஷயமறிந்து என்னைஅப்பாத்திட்டிக்கொண்டு இருக்கலாம்... ஒருக்கால் நீயும் அவருடன் சேர்ந்து திட்டினாலும் திட்டலாம்... முன்ன றிதெய் வங்களின் திட்டுக்களை நான் ஆசீர்வாத மொழிகளாக எண்ணி மகிழ்கிறேன். என்னுள்ளத்தில் பொங்கிக் கொந்தளிக்கும் உணர்ச்சியின் வேகம் ஆத்திரத்தின் அனல் ஏக்கத்தின் எதி ரொலி எல்லாம் ஒன்று சேர்ந்து அந்த நாடகமாய் என்னை யறியாத உத்ஸாகத்துடன் உருவாகி நடிப்புக் கலையிலும் ஒரு படிக்கட்டு உயர்த்திவிட்டது. என் மனமறிய இது குற்றமல்ல என்பது என் துணிபு. என்னைக் கைவிட்டுவிட்டபி றகு இனி எனக்கு அவர்களைப் பற்றிக்கவலையும் இல்லை. எதிர்பார்க்கவும் இல்லை. எனக்குப் பிழைக்க பகவான் வழி வகுத்துக்கொடுக்க இந்த நூதன முறையைக் கொடுத்திருப்பதாக

நான் சந்தே ஷப்படுகிறேன். இந்த சம்பவத்தின்மூலம் மற்றொரு புதிய நல்ல சமாசாரமும் சந்தோஷச்செய்தியும் உங்களுக்குத் தெரிவிப்பதற்காகவே இதை எழுதுகிறேன்.

அதாவது எனக்கு நந்தினிவைத்யநாதன் என்றபெயரைப் போட்டுக்கொள்ளும் உரிமையை அக்கினி சாக்ஷியாய் இரண் டாயிரம் ரூபாயும் சீரும்சிறப்பும் கொடுத்து கல்யாணமென்கிற கடையில் வாங்கினீர்களே ! அதே மனிதர் என் கதையைத் தங்கள் காலேஜில் நடிக்கவேண்டும் என்று என்னுடைய ப்ரின் ஸிபாலுக்கு எழுதிக் கேட்டிருக்கிறார்: இது நன்மைக்கோ! தீமைக்கோதெரியாது; என்ப்ரின்ஸ்பால் கட்டாயம்கொடுக்கும் படிசொல்லியதால் ஒப்புக்கொண்டேன்; இனிமேல் தான்அனுப் பப்போகிறேன். இது முக்யமானவிஷயமல்ல; எனினும் எழுதக்கடமைப்பட்டிருக்கிறேன்.

நிற்க, என்னுடைய அந்தக் கதையைப் பாராட்டிப் பல பேர்கள் என்னுடைய தலைவிக்குக் கடிதங்கள் எழுதியிருக் கிறார்கள். அதைத் தவிர ஒரு சினிமாக்காரர் இதேகதையைப் படமாகப் பிடிக்கவேணுமாம்; 5 ஆயிரம்ரூபாய் எழுதியவருக் கும் 5ஆயிரம்ரூபாய் எங்கள் காலேஜ்-இலவசச்சம்பள நிதிக்கும் என்கொடையாகவும் கொடுப்பதாக நேரில் வந்து என் ப்ரின்ஸ் பாவிடம் கேட்கிறார்கள். ‘‘இம்மாதிரி ஒரு அதிர்ஷ்டத்தை தானாக வலியவரும்போது நீ தடுக்காதே! ஒப்புக்கொள்ளு என்று ப்ரின்ஸ்பால்சொல்கிறார். வற்புறுத்துகிறார். ஆகையால் நான் இது விஷயமாய் யோசனையே செய்யப்போவதில்லை. அப்பாவின் கஷ்டத்திற்கு இந்த மகத்தான உதவியைக் கொடு த்துள்ள பகவானை இதய பூர்வமாக வணங்கி ஒப்புக்கொண்டு விட்டேன். இந்தப் பணத்தை நான் என் மாமனாரின் பேரா சைக்குக் கொடுப்பதற்கு இசையப்போவதில்லை. இது விஷயத் தில் நீங்களும் வற்புறுத்தவேண்டாம். அந்தக் கதையின் மூலம் என்காலேஜுக்கும் என்முன்னறிதெய்வங்களுக்கும் உதவி கிடைத்ததே, அதுவே போதும்! நிலங்கள் சில வீணாகக் கட னில் மூழ்கிவிட்டதை நினைத்து நினைத்து நான் கண்ணீர் விடு வது கொஞ்சநஞ்சமல்ல. அதை மீட்டுக்கொண்டால் நமக்குச் சாப்பாட்டிற்குச்சற்றும் கஷ்டமின்றி தானியலக்ஷ்மி தாண்டவ மாடுவாள். ஆகையால் அப்படியே செய்யும்படிக்கோருகிறேன். என் ப்ரின்ஸ்பால் அந்தப் பணத்தை அனுப்புவார்கள். எல்லோருக்கும் என் வந்தனங்கள் தெரிவிக்கவும்.

இங்ஙனம் நந்தினி

இதைப் படிக்கையில் நாகலக்ஷ்மியின் கண்களில் ஆனந்த பாஷ்பம் பெருகிய து. கடிதத்தை உறக்கவே படித்ததால் சுப்ரமணியம் கேட்டு வியப்புக் கடலாடி ஆனந்த பாஷ்பத் தைப் பெருக்கினார் என்றால் மிகையாகாது.

இயற்கை எழில்

காலையில் கதிரவன் கன்யாகுமரியில் தோன்றலும் அழகே!
மாலையில் கதிரவன் மேற்கில் மறைதலும் அழகே!
வானில் இயற்கை வரைந்த கோலமும் அழகே!
முழுநிலவில் வட்டமான வெண்ணிலா ஒளிர்வதும் அழகே!
விண்மீன்கள் மின்மினியென கண்சிமிட்டலும் அழகே!
முகில்கூட்டம் பஞ்சுப் பொதியென குவிதலும் அழகே!
வானவில் அழகிய வண்ணங்களில் தோன்றலும் அழகே!
அருவிகள் மலையிலிருந்து தடதடவென்று வீழ்வதும் அழகே!
எரிமலை வெடித்து தீக்குழம்பாய் பாய்வதும் அழகே!
வெந்நீருற்று நீராவியுடன் சேர்ந்து வேகமாக பீறிட்டு வெளியேறுவதும் அழகே!
ஆறுகள் சலசலவென்று வளைந்து ஓடுவதும் அழகே!
நீர்சுழிகள் வெள்ளிக்காசுகளாய் மின்னுதலும் அழகே!
கடலில் அலைகள் சுழன்று நீந்தி வருவதும் அழகே!
கரையில் முத்துக்களெனத் தோன்றும் சிப்பிகளும் அழகே!
குடங்குடமாய் மழை கொட்டுவதும் அழகே!
பனி பொலபொலவென்று வீழ்வதும் அழகே!
உறைபனி வைரட்டிகையென கூரையிலிருந்து தொங்குவதும் அழகே!
பசும்புல்லில் பனித்துளி வைரக்கற்களெனத் தோன்றுவதும் அழகே!
சோலையில் குயில்கள் கூகூவென்று கூவுதலும் அழகே!
மயில்கள் வண்ணத்தோகை விரித்தாடுவதும் அழகே!
மரஞ்செடிகொடிகளில் கொத்துக் கொத்தாக மலர்கள் மலர்வதும் அழகே!
மரங்கள் நிலமகளுக்குப் பொன்னாடை போர்த்துவதும் அழகே!
செந்தாமரை செங்கதிர் கண்டு சிரிப்பதும் அழகே!
பட்டுப்பூச்சிகள் பட்டுச்சிறகடித்துப் பறப்பதும் அழகே!
இயற்கை எழிலுக்கு எல்லையும் உண்டோ?

– கலைச்செல்வி கோபாலன்

அதிரனின் 'அம்மாவின் பூனை' - நூல் அறிமுகம்

நெல்லை. G. சோமசுந்தரி
கவிஞர், எழுத்தாளர்,தொல்லியல் ஆர்வலர்

ஒரு கவிதை என்ன செய்யும் என்ற கேள்விக்கு ஒரு அழகான பதிலைத் தருகிறது அம்மாவின் பூனை. எந்த மேற்கோள் கொண்டும் அடங்கி விடாத சொற்களுக்குள் மனம் சுதந்திரமாய் பாடும் ஒரு பாடலாகவும், மனிதர்களின் அகம் சார்ந்த மௌனத்தின் முடிச்சுகளை மெதுவாகக் கட்டவிழ்க்கும் அதிசய பெட்டகமாகவும், பரிணமித்து நிற்பவை கவிதைகள்..அந்த வகையில் , அம்மாவின் பூனை இதன் வரிகளைப் படிக்கும் போதே , அவை நம்மை என்ன செய்யப் போகிறது ? வாருங்கள் அவற்றோடு கொஞ்சம் பயணிக்கலாம்.

"எட்டி எட்டிப் பார்க்கிறாள்
தண்டவாளத்தை
இன்னும் வரவில்லை"

"முதல்" என்ற தலைப்பில் வெளிவந்துள்ள இந்த "முதல் கவிதையின்" மூன்று வரிகளை நாம் படிக்கும் போது எந்த வயதாக இருந்தாலும், ரயில் பயணம் என்றாலே மனம் குதூகலிக்கும் தானே செய்யும். அப்படியாக, கவிதை வரிகளில் "அவள் பார்க்க நினைத்த முதல் ரயிலுக்காக" எனக் கவிஞர் முடிக்கும் போது, குழந்தைப் பருவத்தில் நாம் முதன் முதலாக அதிசயமாய் பார்த்து, அதிர்ந்து பின் லயித்த நம்முடைய ரயில் பயணத்தை நினைத்துப் பார்த்து மனம் ஏக்கம் கொள்கிறது. மேலும், பள்ளி காலங்களில் படிக்கும் போது இயற்பியல் ஆசிரியர் சொல்லிக் கொடுத்த "டாப்ளர் விளைவு" என்னும் ஒரு அறிவியல் கோட்பாட்டில் ஒலி அலைகளின் சுருதியில் ஏற்படும் மாற்றத்தை இக்கவிதையின் வரிகள் அப்படியே பதிவு செய்வதாக எனக்குத் தோன்றியது.

பிம்பம் என்கிற தலைப்பில்,

வலியையும் வறுமையும்
கடைசி வரை
எந்த ஒரு கண்ணாடியும்
பிரதிபலிப்பதாய் இல்லை.

என்பதாகச் சாலை ஓரத்தில் முகம் பார்க்கும் கண்ணாடி கடை வைத்திருக்கும் ஒரு ஏழை தொழிலாளியின் ரசம் போன வாழ்வியலை தன் வரிகள் மூலம் நம் மனதிற்குள் தைக்கிறார் கவிஞர். அதே போல "பாடுகள்" என்ற தலைப்பில் உள்ள இந்த கவிதை

மற்றவர்கள் அவரவர் பாடுகளுக்கு
யாரிடமோ யாசிப்பதற்கு
கடந்து செல்கிறார்கள்

இதில் ஒரு அழகிய முரணாய் நடைபாதையில் பாட்டுப் பாடி யாசிக்கும் பார்வை புலனற்ற தம்பதியரை, நான்கு பேரைத் தவிர மற்றவர்கள் யாரும் கவனிக்கவில்லை என்பதை வெகு நுட்பமாக சுளீரென்று சாட்டையடியால் மனித மனம் இயந்திரம் ஆகிவிட்டது என்பதை மட்டும் அல்லாமல் அவரவர் பாடுகளுக்கு யாரிடமோ யாசிப்பதற்குக் கடந்து செல்கிறார்கள் என இரண்டு பாடுகளையும் ஒப்பீட்டு யாசிப்பு என்பது ஒன்றுதான் கோணம் தான் வேறு என யோசிக்க வைத்து ஒரு நிமிடம் நம்மைக் கழட்டிப் போடுகிறார். மற்றொரு இடத்தில், எம்ஜிஆர் அவர்களை நினைத்து ஏக்க பெருமூச்சு விடும் பாட்டியின் உணர்வுகளை "நினைவுகள்" என்ற தலைப்பில் வெகு இயல்பாகப் படிக்கும் நம்மிடம் பலாச்சுளை இனிப்பைக் கடத்துகிறார்.

"விலைபோன பூர்வீக வீடு" நீண்டநாட்களுக்குப் பின் வந்து, இப்போது பார்க்கும் போது முற்றிலும் தடம் மாறி வேறொன்றாகக் கண்கள் முன்னே நிற்கிறது. இருக்கப் பிடிக்காத அந்த வீட்டிலிருந்து வெளியேற நினைக்கும் போது பரணில் கிடைத்த ஒரு பழைய டைரியை, புதியதாக வாங்கிய வீட்டின் எஜமானி அம்மா தருகிறார்கள். அத்தனையும் அம்மாவின் கையெழுத்தில் சமையல் குறிப்பாக, அதன் பக்கங்களைத் திருப்ப, மனம் அம்மாவின் நினைவுகளை மணமாக்குகிறது. இப்போது வாசம் மாறாத அந்த வீட்டை எடுத்துக்கொண்டு வாடகை வீட்டிற்குக் கவிஞர் செல்வதாக ஒரு உணர்வு குவியலை நம்மிடம் கனமாய் சமைக்கிறார். இது கிராமத்தில் பூர்வீக வீட்டை விட்டு விட்டு நகரத்தில் வாடகைக்குக் குடியேறும் மனிதர்களின் மனதை அப்படியே பாரமாய் அழுத்தி நிற்கிறது. அடுத்து "காணுதல்" என்னும் தலைப்பில் உள்ள இறுதி வரிகள் நம்மை ஜென் நிலைக்கே இழுத்துச் செல்கிறது.

இன்னும் ஒரு இடத்தில் "அம்மாவின் பூனை" எனும் தலைப்பில் உள்ள இந்த கவிதையைப் படிக்கும் போது இதுதான் புத்தகத்தின் தலைப்பாக நம்மிடம் உயிர்ப்பாய் பேசுகிறது . "பூரணம்" எனத் தொடங்கும் அந்த பூனையின் பெயர் கவிஞரின் அம்மாவிற்கும், அப்பூனைக்கும் இருக்கும் வெளிப்படுத்த இயலாத ஒரு அன்பின் பிணைப்பை அவர்கள் பேசிக்கொள்ளும் "மியாவ்கள்" பாஷைகளின் மூலம் உணர்ந்து கொள்ள முடிகிறது. பாரதி சொன்ன "அன்பின் உயர்நிலை" மிகவும் அழகாக அந்த அம்மாவிற்கும், பூனைக்குமான உறவினில் வெளிப்படுகிறது இது ஒரு கவிதையாக இல்லாமல் நடந்த ஒரு நிஜத்தின் பிரதிபலிப்பாக வரிகள் நம்மிடையே கதையாயாடுகிறது,

மெல்ல அவள் மடி சாய்ந்த பூரணம்
பின் எந்த அசைவும் இன்றி.....பரிபூரணமானது

கவிஞர் அதிரன்

இறுதியில், அம்மாவின் மடியிலேயே அந்த பூனை ஒரு நாள் அசைவின்றி மரணிக்கிறது. அதை அழுத்தமாய் அதன் அன்பியலை "பரிபூரணமானது" எனும் ஒற்றைச் சொல்லில் கவிஞர் முடித்து விடுகிறார் அதற்குப் பின்பு தான், படிக்கும் வாசகனின் மனதை வேறு உலகிற்குத் திருப்பி பயணிக்க வைக்கிற இந்த கவிதை மனதின் உள்ளே அடர்த்தியை அழுத்தமாக்குகிறது.. "அந்த அறையில் யாரும் இல்லை" அப்படியே மூத்த கவிஞர் நகுலன் அவர்களின் கவிதையைப் படித்தால் என்ன உணர்வு இருக்குமோ அப்படிப்பட்ட ஒன்றை நம்மிடம் மனதில் வரிகளாய் பின்னுகிறார் கவிஞர். .

இது மட்டுமல்ல அவசர உலகில் நாம் படித்துச் செல்லும் இரண்டு அல்லது நான்கு வரிகளுக்குள், உணர்வுகளின் குவியல்களைக் குறுங்கவிதையில் மிக எளிதாக வரிகளாய் விதைக்கிறார். அதில் ஒன்று ,

பெருமை கொள்
நீ பாரதியின் செல்லம்மாள் என்றேன்
உண்மை சொல் நீ பாரதியா? என்றாள்
எங்கோ வலித்தது
எனக்கு!

அவருக்கு மட்டும் அல்ல படிக்கும் நமக்கும் தான் மனதை என்னவோ செய்கிறது

.

"மெல்ல விழுங்கையில்" எனும் வரும் தலைப்பில் சோன்பப்படிக்காரனின் மணி ஓசை கேட்கும் போதெல்லாம் ரீங்காரத்தில், கவிஞர் மட்டுமல்ல நமக்கும் துள்ளிக் குதித்துத் துளிர்க்கும், மனதிற்குள் தூர்ந்து போன பால்யத்தின் ஏதோ

ஒன்றைக் கொஞ்சம் மனதில் நினைக்க வைத்து வரிகள் நெகிழ வைக்கிறது. இதே போல் எத்தனையோ கவிதைகள் அன்றாடம் எல்லோரும் கடந்து செல்லும் சிறு நிகழ்வின் அனுபவங்களை, மிகவும் யதார்த்த உணர்வுடன் கொஞ்சம் நின்று படித்துவிட்டு, நம்மைக் கொஞ்சம் கடந்த கால உலகிற்கு இழுத்துச் சென்று ஈர நினைவுகளில் நனைய வைக்கிறது.

கரை முழுவதும்
நிறைந்து கிடக்கின்றன
மலை பற்றிய
நதி எழுதிய
ஹைக்கூக்கள்

என்ற வரிகளை வாசிக்கும் போது தலைப்புக்கு ஏற்ப வாழ்வின் அனுபவங்கள் ''கூழாங்கற்களாய்'' நம்மையும் நகர வைக்கிறது.

ஒருவருக்கொருவர் பேசாமலே நகரும் தொழில்நுட்ப உலகின் ''மாற்றம்'' மனிதர்களின்மனஉணர்வுகளைமிகவும்சுருக்கிவிட்டதுஎன்பதாகஇத்தலைப்பை வாசிக்கும் போது, ஆமாம் நிதர்சனம் தானே என நம்மைக் கவிஞர் தலையாட்டவைக்கிறார். இப்படி வழியெங்கும் அனுபவத்தின் சாரல்களை விரல்களைப் பிடித்து மிக அழகாக வரிகளில் தூவி இருக்கிறார் . கவிதைகளால் இத்தனை அழகாக எதார்த்த வரிகளில் உள்வாங்கி வாசிப்பவர்களை உறைய வைக்க முடியுமா என்ற கேள்விக்கு இவரின் கவிதைகள் படிக்கும்போது பதில்களாகத் தருகிறது. இதில் இன்னும் நிறைவாக, நிறையக் கோணங்களில் கவிதைகளைப் பிரவேசித்துள்ளார். அத்தனை வரிகளிலும் நானே எழுதி விட்டால் புத்தகத்தில் படிப்பதற்கு உங்களுக்கு மிச்சம் வேண்டும் அல்லவா அதைப் புத்தகத்தில் படித்துப் பாருங்கள்

இதற்கு அணிந்துரைஎழுதியமதிப்பிற்குரியடாக்டர்வ. வே. சுப்பிரமணியன் அவர்கள் தமக்குரிய அழகிய ரசனைகளில் வரியாகத் தந்து நம்மிடம் பேசுகின்றார் . மதிப்பிற்குரிய பாலசுந்தரம் அவர்களும் வண்ண பார்வைக்குள் வரிகளை நமக்குக் காட்சியாக்குகிறார். அதிரன் என்கிற கவிஞரின் மன இயக்கங்களின் ஊடே மின்மினிப் பூச்சிகளின் ஒளிர்தலாய், கவிதையின் வரிகள் நம்மிடம் அழகாக மிளிர்கின்றது, இந்த புத்தகத்தை குவிகம் பதிப்பகம் வெளியிட்டுள்ளது. மிக அழகான அட்டைப்படம் கனலி என்கிற ஓவியரால் மிக நேர்த்தியாக வண்ணமாகி உள்ளது. இதுதான் கவிஞருக்கு முதல் புத்தகம் என்பதைப் பார்க்கும் பொழுது அந்த கவிதைகளில் இருக்கக்கூடிய ஒவ்வொரு கருவின் வரிகளும் வாசிக்கும் போது, அடர்த்தியாக நம்ப முடியாமல், நம்மைப் பிரமிக்க வைக்கிறது.

மாயக்கோல் ஒன்று கேட்கும்!

அவள் அழகில் கிறங்கி
அவளவன் கொடுக்கும் முத்தம்
கற்பாறைகளையும் புரட்டும்
பிரையோடு நீரை விழுங்கினாலும்
அடங்காத பெருந்தாகம் அவனுள்
எதற்கும் அசையாத அவளது
சிறு சலனத்தினால்
அழகை வரையறுப்பது அவன் கண்களே!
அதை தீர்மானிப்பது அவள் நெஞ்சமே!

உண்டு களிக்காத கனியும்
உண்ண உண்ண திகட்டாத தித்திப்பும்
உள்ளத்தில் சம்மனமிட்டு அமர்ந்து கொள்ளும்
பாஷைகளற்ற பார்வைகளின் மௌ னங்கள் கூட
பேரார்ப்பரிப்பை அவனுள் ஏற்படுத்தும்

தாகம் தீர்ந்த பின்னும் தவிப்புடன்
அலையும் நெஞ்சம்
பிரபஞ்சத்தின் இயக்கத்தை
நிறுத்தச் சொல்லும்
இருவரின் இருப்பை
வளர்க்கச் சொல்லும்
மாயக்கோள் ஒன்று கேட்கும்!
மாயக் கோள் ஒன்று கேட்கும்!
விரும்புவதை மட்டும் உயிர்ப்பிக்க
இருவரின் பிணைப்பை நீட்டிக்க!

– சக்தி சுரேஷ்

கடமையைச் செய்யாத கணவர் இறந்ததற்கு சமம்

கணவர் உயிரோடு இருக்கும்போது விதவை பென்ஷன் வாங்கிய பெண் எடுத்துரைத்த நியாயத்தினால் கணவனை ஏழாண்டுகள் பிரிந்து வாழும் மனைவியருக்குப் புதிய நலத்திட்டம் கேரளாவில் நடைமுறைக்கு வந்தது

தலைசிறந்த இயக்குனரும், ஐ.ஏ.எஸ். அதிகாரியுமான ஞான ராஜசேகரன் தனக்கு நேர்ந்த அனுபவங்களைப் புத்தகமாக எழுதி வருகிறார்.. அதில் இருந்து சில பகுதிகளை முக நூலிலும் தந்து வருகிறார். சமீபத்திய பதிவு இது...

தமிழ்நாட்டு மக்கள் அரசாங்கத்தை அணுகுவதற்கும் கேரள மக்கள் அரசாங்கத்தை அணுகுவதற்கும் மிகப் பெரிய வித்தியாசம் இருக்கிறது. கேரளாவில் பாமர மக்களுக்கு இருக்கின்ற பொது அறிவு நம்மை வியப்பில் ஆழ்த்தி விடும்.

நான் 1985 இல் பாலா சப் கலெக்டராக இருந்தபோது ஒருநாள் ஒருவர் என்னை அவசரமாகப் பார்க்க வேண்டுமென்று என் ஆபீசுக்கு வந்திருந்தார். நான் அவரை உள்ளே வரச் சொன்னேன்.

‘என்ன விஷயம்?’ என்று கேட்டேன். அவர் பதற்றத்தோடு விவரித்தார். "நான் தலையோலப்பறம்பு கிராமத்தில் இருந்து வருகிறேன். அங்கே ஒரு மிகப்பெரிய தவறு நடந்திருக்கிறது. அந்த ஊரில் விதவையே ஆகாத ஒரு பெண்ணுக்கு விதவைப்பென்ஷன் சாங்ஷன் செய்யப்பட்டிருக்கிறது. அந்தப் பெண்ணோட பேரு தங்கம்மா" இப்படி அவர் சொன்னதும், நான் கேட்டேன் "நீங்க யாரு? உங்களுக்கு இந்த விஷயம் எப்படித் தெரியும்?" என்று.

அவர் மிகவும் சாதாரணமாகச் சொன்னார் "அந்தத் தங்கம்மாவின் கணவரே நான்தான்" என்று. எனக்குத் தூக்கி வாரிப் போட்டது.

கணவர் உயிரோடு இருக்கும்போது அவர் இறந்து விட்டார் என்று பொய் சொல்லி ஒரு பெண் விதவை பென்ஷன் வாங்குவது அரசாங்கத்தை ஏமாற்றும் வேலை இல்லையா? இது ,ஒரு சமூக நலத் திட்டத்தைக் கேலிப் பொருளாக்குவது இல்லையா? உடனே தாசில்தாரை வரவழைத்தேன்.

அவர்தான் விதவைப் பென்ஷன் சாங்ஷன் செய்த அதிகாரி. அவரும் பதறிப் போய் விட்டார். தலையோலப் பறம்பு வில்லேஜ் ஆபீசரின் விசாரணை ரிப்போர்ட்டின் அடிப்படையில்தான் சாங்ஷன் செய்ததாக அவர் சொன்னார்.

தவறாக ரிப்போர்ட் கொடுத்த வில்லேஜ் ஆபீசரை உடனே சஸ்பெண்ட் செய்ய ஆணை பிறப்பித்தேன். ஒரு குறிப்பிட்ட தேதியில் புகார் செய்த கணவர், தங்கம்மா ,வில்லேஜ் ஆபீசர், தாசில்தார் அனைவரையும் வரச் சொன்னேன்.

அந்தத் தேதியும் வந்தது .சம்பந்தப்பட்ட எல்லோரும் வந்திருந்தார்கள். அந்த தங்கமாவும் வந்திருந்தாள். குட்டு வெளிப்பட்டு விட்டதே என்ற குற்ற உணர்வோடு தொங்கிய முகத்துடன் வருவாள் என்று எதிர்பார்த்த எனக்கு அவள் தைரியமாக என் முன் வந்து நின்றது ஆச்சரியத்தைத் தந்தது.

தங்கம்மாவின் மீதுள்ள குற்றச்சாட்டின் அடிப்படையே புகார் கொடுத்தவர் அவள் கணவரா? இல்லையா ?என்பதுதான். அதை முதலில் அறியவேண்டும் என்று தீர்மானித்த நான், அந்தப் பெண்மணியிடம் கேட்டேன் "இவர் உன் கணவர்தானே ?'' தங்கம்மா எந்த தயக்கமும் இல்லாமல் பதில் சொன்னாள் " ஆமாம்" .

நான் சற்று உணர்ச்சிவசப்பட்டுப் பேசத்தொடங்கினேன்."ஏம்மா நான் தமிழ்நாட்டில் இருந்து .வந்திருக்கிறேன் . எங்கள் கிராமத்தில் பெண்களிடம் அவர்களது புருஷன் பெயரைக் கேட்டால் நேரடியாகப்பதில் சொல்ல மாட்டார்கள். புருஷன் பெயர் முருகன் என்றால் ஜாடை மாடையாக மயில் மேல இருக்கிறவர்னு சொல்வாங்க.அப்படிப்பட்ட ஊரில் இருந்து நான் வருகிறேன் . புருஷன் உயிரோடு இருக்கும் போது வெறும் 75 ரூபாய் கிடைக்கிறதுக்காக அவர் செத்துவிட்டார் என்று சொல்வதற்கு எப்படிம்மா மனசு வந்தது ?முதல்ல அதை எனக்கு விளக்குங்க!" உருக்கமாக நான் கேட்டேன் .

தங்கம்மா யாதொரு கலக்கமும் இன்றி என்னைக் கேட்டாள் "அரசாங்கம் ஏன் இந்த விதவைப் பென்ஷன் கொடுக்கிறது? விதவைன்னா என்ன அர்த்தம்? நிராதரவான பெண் என்பதுதானே? நான் ஒரு நிராதரவான பெண்தான்" என்று சொல்லிச் சற்று நிறுத்திவிட்டு மேலும் தொடர்ந்தாள்.

"எப்படின்னு கேட்கிறீங்களா? இந்த ஆள் என்னை விட்டுவிட்டுப் போயி எட்டு வருஷம் ஆகுது கோழிக்கோட்டில் ஒரு பெண்கூட எட்டு வருஷமாக இந்தாள் வாழ்ந்து கொண்டிருக்கிறார் எங்கள் ஊருக்கு வருவது கிடையாது. என் குழந்தைகளைப் பார்க்கிறது கிடையாது அதனால என்னைப் பொறுத்தவரையில் இந்த ஆளு செத்துப் போனவன் தானே? நான் நிராதரவான பெண்தானே? சொல்லுங்க சார் சொல்லுங்க" தங்கம்மாவின் கேள்விகள் ஒவ்வொன்றும் ஆணித்தரமாக வெளிவந்தன.

புகார் கொடுத்த ஆள் அப்போது நெளிவதை நான் கண்டேன். அதற்குப் பிறகு தங்கம்மாள் ஒரு கேள்வி கேட்டாள், என்னை நேரடியாகப் பார்த்து," உங்கள் சட்டம் என்ன சொல்லுது? ஒருவன் ஏழு வருஷம் காணாமல் போனால்அவனை செத்தவனாகக் கருதலாம்னு சொல்லுது .

இல்லையா? அதனால சட்டப் பிரகாரம் இவன் எனக்குச் செத்துப் போனவன்தான்.நான் விதவை தான் சார்" என்று பேசி முடித்தாள்.

எனக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. ஒருவன் ஏழு வருஷம் காணாமல் போனால் அவனைச் செத்தவனாகச் கருதலாம் என்று எவிடென்ஸ் ஆக்ட் சொல்கிறது .அந்த சட்ட விதிகள் எல்லாம் தங்கம்மாவை எப்படியோ சென்றடைந்து இருக்கிறது. வேறு எந்த மாநிலத்திலாவது இப்படி ஒரு சாமானியப் பெண்மணி சட்டவிதிகளைச் சொல்லி புருஷன் உயிரோடு இருக்கும் போதே அவன் செத்ததற்குச் சமம் என்று வாதிட்டு இருக்க முடியுமா?

தங்கம்மாவின் வாதம் எனக்கு நியாயமாகப் பட்டது. ஆனால் அப்போதுள்ள பென்ஷன் விதிகளின்படி நான் தீர்ப்பு எழுதினால் அது தங்கம்மாவுக்குச் சாதகமாக அமையாது. அவளது விதவை பென்ஷனை நான் ரத்து செய்தாக வேண்டும்.

அது மனிதாபிமானத்துக்கு எதிராக இருக்கும் என்று நான் உணர்ந்தேன். எனவே பென்ஷன் விதிகளில் மாற்றம் செய்ய அரசாங்கத்துக்கு ஒரு கடிதம் எழுதினால் என்ன என்று தோன்றியது.

தங்கம்மாவின் சூழ்நிலையை விவரித்து விட்டு "இவரைப் போன்ற பெண்களுக்கு ஆதரவு கொடுத்தால் தான் விதவைப் பென்ஷன் ஏற்படுத்தியதன் உண்மையான பலன் கிடைக்கும். அதற்கு விதவைப் பென்ஷனுக்கான விதிமுறைகளில் சில மாற்றங்கள் செய்ய வேண்டும். யாரெல்லாம் விதவையாகக் கருதப்பட வேண்டும் என்கிற விதிமுறைகளில் ஒரு பெண்ணின் கணவன் ஏழு வருடங்களுக்கு மேல் காணாமல் போயிருந்தால் அந்தப் பெண்ணும் விதவையாகக் கருதப்பட வேண்டும் என்பதையும் சேர்த்து தங்கம்மாவைப் போன்ற நிராதரவான பெண்களுக்கும் விதவைப்பென்ஷன் அனுமதிக்கப்பட வேண்டும்" என்று அரசாங்கத்திற்கு கடிதம் எழுதினேன்.

கேரள அரசாங்கத்தின் சிறப்பு என்னவென்றால் இதுபோன்ற மனிதாபிமான விஷயங்களில் அனுகூலமான முடிவுகளை உடனுக்குடன் எடுப்பதுதான். என் கோரிக்கை ஏற்கப்பட்டு விதவைப் பென்ஷன் விதிமுறைகளில் மாற்றத்தை அரசாங்கம் அறிவித்தது.

அரசாங்கம் விதிமுறைகளில் மாற்றம் கொண்டு வந்ததால் தங்கம்மாவுக்கு பென்ஷன் தொடர்ந்து அளிக்கப்பட்டது. எதிர்காலத்தில் தங்கம்மா போன்று நிராதரவான நிலைக்குத் தள்ளப்படும் பெண்களுக்கும் விதவை பென்ஷன் உறுதி செய்யப்பட்டதுதான் எனக்கு மனநிறைவைத் தந்தது.

அதிகாரியாகப் பணிபுரியும் போது நம் முயற்சியால் ஆதரவற்றவர்களுக்கு ஏதேனும் நன்மை கிடைக்குமானால் அதை விட நமக்கு மகிழ்ச்சி அளிப்பது வேறு இருக்க முடியாது. கண்ணகி தன் கணவன் கோவலன் கொல்லப்பட்ட போது கையில் சிலம்புடன் வந்து பாண்டிய மன்னனிடம் நீதி கேட்டாள்.

தலையோலப் பறம்பு தங்கம்மா கணவன் உயிரோடு இருக்கும்போதே அவனைச் இறந்தவனாக ஏன் கருதக் கூடாது என்று அரசாங்கத்திடம் நீதி கேட்டாள்.

டாடா மெமோரியல் புற்றுநோய் ஆராய்ச்சி அறக்கட்டளை நிறுவிய பெண்

இந்த படத்தில் உள்ள பெண்ணின் கழுத்தில் அணிந்திருக்கும் பெரிய வைரம் 254 கேரட் ஜூப்ளி வைரம் ஆகும். இது உலகப் புகழ்பெற்ற " கோஹ் - இ - நூர் " வைரத்தின் அளவு மற்றும் எடையிலும் இரட்டிப்பாகும்.

இந்தப் பெண் மெஹர்பாய் டாடா , அவர் ஜாம்ஷெட்ஜி டாடாவின் மூத்த மகன் சர் டோராப்ஜி டாடாவின் மனைவி.

1924 இல் உலகில் மந்த நிலை ஏற்பட்டு டாடா நிறுவனம் (டிஸ்கோ) ஊழியர்களுக்கு சம்பளம் கொடுக்க பணமில்லாத போது , மெஹர்பாய் இந்த விலைமதிப்பற்ற ஜூப்ளி வைரத்தை இம்பீரியல் வங்கியில் ரூ 1 கோடிக்கு அடமானம் வைத்துள்ளார்.

இதனால் ஊழியர்கள் தொடர்ந்து சம்பளம் பெறுவதற்காகவும், மேலும் நிறுவனம் தொடர்ந்து இயங்குவற்காகவும், அடமானம் வைக்கப்பட்டது. மெஹர்பாய் டாடா இரத்த புற்றுநோயால் பாதிக்கப்பட்டார். சரியான சிகிச்சையின்றி மரணமடைந்தார். அவரது அகால மரணத்திற்கு பிறகு , சர் டோராப்ஜி டாடா இந்தியாவில் புற்றுநோயாளிகளுக்கு

சிறந்த சிகிச்சை அளிக்க எண்ணி இந்த வைரத்தை விற்று டாடா மெமோரியல் புற்றுநோய் ஆராய்ச்சி அறக்கட்டளை உருவாக்கினார்.

நன்றி - கன்னியாகுமரி தென்றல்

தமிழ் பெண்ணின் ஆளுமை வரலாற்றில் பெண்ணின் நிலை

மு.ஜன்னத்துல் பிர்தௌஸ்
பி.எஸ்சி.,பயோடெக்னாலஜி,, முதலாம் ஆண்டு
வேகானந்தா கலை மற்றும்,அறிவியல் மகளிர் கல்லூரி திருச்செங்கோடு

வரலாற்றில் பெண்ணின் நிலை:

பெண் என்பது சமுதாயத்தின் அடித்தளமும், உயிரின் தோற்றத்தின் மூலமும் ஆகும். அவள் இல்லாமல் உலகம் இயங்காது என்று சொல்லலாம். வரலாற்றின் ஒவ்வொரு கட்டத்திலும் பெண் தனக்கென ஒரு தனி இடத்தைப் பெற்றிருந்தாள். சில காலங்களில் உயர்ந்த மரியாதையையும் அதிகாரத்தையும் பெற்றிருந்தாள்; சில காலங்களில் பின்தள்ளப்பட்டு அநீதிகளுக்கும் சமத்துவமின்மைக்கும் ஆளானாள். இருந்தாலும், அவள் தன்னுடைய ஆளுமையாலும் துணிவாலும் சமூகத்தில் நிலையான தடத்தை விட்டுச் சென்றிருக்கிறாள்.

சங்க காலத்திலிருந்து ஆரம்ப காலம் வரை:

தமிழ் சங்க இலக்கியங்கள் பெண்களின் இடத்தை உயர்வாக எடுத்துரைக்கின்றன. அக்காலத்தில் பெண்கள் கல்வியில் சிறந்து விளங்கினர். மடல்வாணன், அவ்வையார், காக்கைப்பாடினியார் போன்ற பெண்கவிஞர்கள் சமூகத்தில் புகழ் பெற்றவர்கள். அவ்வையார் எழுதிய நன்னூல்கள் இன்று வரை சிறுவர் கல்வியில் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளன. இது சங்க காலத்தில் பெண்ணின் இடம் எவ்வளவு உயர்ந்தது என்பதை நிரூபிக்கிறது.

வேதகாலத்திலும் பெண்கள் சம உரிமையுடன் இருந்தனர். கார்கி, மைத்ரேயி போன்ற பெண்கள் தத்துவம், யாகங்கள், வேதங்கள் குறித்து ஆண்களுடன் விவாதித்தனர். அந்தக் காலத்தில் பெண் குருகுலத்தில் கல்வி கற்று, சமூக விவாதங்களில் பங்கேற்கும் நிலையை பெற்றிருந்தாள்.

நடுத்தர காலத்தில் பெண்ணின் நிலை:

நடுத்தர காலத்தில் பெண் சமூகத்தில் பின்தள்ளப்பட்டார். சமூகக் கட்டுப்பாடுகள், குழந்தை மணம், கல்வியறிவு மறுப்பு போன்றவை பெண்களை முன்னேற்றத்திலிருந்து தடுத்தன. ஆனால், சிலர் மட்டுமே தங்களின் ஆற்றல் மற்றும் திறமையால் வரலாற்றில்

பெயரைப் பெற்றனர். உதாரணமாக, சங்கிலியாராணி கற்பகவள்ளி வீரத்தையும், ராணி வேலு நாச்சி சமூகப் போராட்டத்தையும் முன்னெடுத்தவர்கள். இவர்கள் பெண்களின் வலிமையும் தைரியத்தையும் வெளிப்படுத்துகின்றனர்.

சுதந்திர போராட்டத்தில் பெண்களின் பங்கு:

இந்திய சுதந்திரப் போராட்டத்தில் பெண்கள் மறக்க முடியாத பங்கு வகித்தனர். ராணி லட்சுமிபாய் ஆங்கிலேயர்களுக்கு எதிராக வீரமாக போராடி "சாரகாரி" வீராங்கனை என போற்றப்பட்டார். அன்னி பசந்த், சரோஜினி நாயுடு, கஸ்தூரிபாய் காந்தி போன்றோர் சுதந்திரப் போராட்டத்தில் முன்னிலை வகித்தனர். தமிழ்நாட்டில் வேலு நாச்சி, உய்யக்கொண்டான் பந்தியராணி, சுப்ரமணிய பாரதியாரின் சிந்தனையால் ஊக்கமடைந்த பல பெண்கள் சுதந்திரத்திற்காக குரல் கொடுத்தனர்.

பாரதியாரின் பார்வையில் பெண்

பாரதியார் "பெண்ணின் இடம் சமத்துவத்தில் தான் இருக்க வேண்டும்" என்று வலியுறுத்தினார். அவர் பெண்ணை "படைப்பின் துணைவர்" என்று வர்ணித்தார். பெண்ணின் கல்வியும் சுதந்திரமும் சமூகத்தின் முன்னேற்றத்திற்கு அவசியம் எனக் கூறினார். பாரதியார் சிந்தனைகள் இந்தியப் பெண்கள் சமூகத்தில் முன்னேறுவதற்கு அடித்தளமாக அமைந்தன

சுதந்திரத்திற்குப் பிந்தைய காலம்:

சுதந்திரம் கிடைத்த பின்பு பெண்கள் பல துறைகளில் முன்னேற்றம் அடைந்தனர். அரசியல், கல்வி, மருத்துவம், அறிவியல், தொழில்நுட்பம், விளையாட்டு, கலாசாரம் எனப் பல துறைகளில் பெண்கள் தங்கள் ஆளுமையை வெளிப்படுத்தினார்கள். இந்தியாவின் முதல் பெண் பிரதமராக இந்திரா காந்தி, முதல் பெண் ஜனாதிபதியாக பிரதிபா பாடில், முதல் விண்வெளி வீராங்கனையாக கல்பனா சாவ்லா, சுனிதா வில்லியம்ஸ் ஆகியோர் உலகளவில் இந்தியப் பெண்களின் இடத்தை உயர்த்தினர்.

இன்றைய பெண்களின் இடம்:

இன்றைய பெண்கள் உலகம் முழுவதும் கல்வி, வேலை, அரசியல், விளையாட்டு, ஆராய்ச்சி போன்ற துறைகளில் தங்கள் திறமையை நிரூபித்து வருகின்றனர். ஒலிம்பிக் போட்டிகளில் பி.வி. சிந்து, மேரி கோம், மிராபாய் சானு போன்றோர் நாட்டின் பெருமையை உயர்த்தினர். தொழில்நுட்ப துறையில் பெண்கள் தலைமைப் பொறுப்புகளில் அமர்ந்து நிறுவனங்களை வழிநடத்துகின்றனர்.

அதே சமயம் பெண்கள் இன்னும் பல சவால்களைச் சந்தித்து வருகின்றனர். பாலின சமத்துவமின்மை, பாதுகாப்பு பிரச்சினைகள், வேலை இடங்களில் பாகுபாடு போன்றவை நீங்காத பிரச்சினைகளாக இருக்கின்றன. இருப்பினும், தன்னம்பிக்கையுடனும்

துணிவுடனும் பெண்கள் தங்கள் உரிமைக்காக குரல் கொடுத்து சமூகத்தில் முன்னேற்றம் அடைந்து வருகிறார்கள்.

முடிவுரை:

வரலாற்றில் பெண்ணின் இடம் பல்வேறு காலங்களில் பல்வேறு மாற்றங்களை எதிர்கொண்டுள்ளது. சில காலங்களில் உயர்ந்த மரியாதை பெற்றிருந்தாலும், சில காலங்களில் அநீதிகளுக்கும் ஆளானாள். இருந்தாலும் பெண் எப்போதும் தன்னுடைய திறமை, துணிவு, தியாகம், அன்பு ஆகியவற்றின் மூலம் சமூகத்தில் தன் இடத்தை நிலைநிறுத்தியிருக்கிறாள். இன்று கல்வியும் தன்னம்பிக்கையும் பெண்ணை மேலும் வலிமையாக்கி, சமூகத்திலும் உலகத்திலும் முன்னேற்றம் பெறச் செய்கின்றன.

பெண்ணின் இடம் வரலாற்றில் மட்டும் அல்ல, எதிர்காலத்திலும் உயர்ந்த நிலையில் இருக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

மழை

வகைமை: கட்டளைக் கலித்துறை
மண் ணில் எழுந் த
மரங் கள் செடி களும்
மண் டிட வே

வின் ணின் கொடை யென
வீ ழும் துளி கள்
விழை கிற தே!

தண் மை அளிப் பதால்
தா வரம் ஈண் டு
தழைக் கிற தே!

உண் டிட காக் து
உழ வோர் உரு ரி
உயர்த் துவ ரே!

கவிஞர் மாலதி இராமலிங்கம், புதுச்சேரி.
நாள்: 19-11-2025

பெண்ணின் பெருந்தக்க யாவுள . . .

முனைவர் தேமொழி
சான் பிரான்சிஸ்கோ

பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மை உண்டாகப் பெறின் (54)

இல்வாழ்க்கையில் கற்பு என்னும் உறுதி நிலை இருக்கப் பெற்றால், பெண்ணைவிடப் பெருமையுடையவை வேறு என்ன இருக்கின்றன? என்று இக்குறளுக்குப் பொருள் விளக்கம் தருகிறார் மு.வரதராசன்.

கற்பென்பது ஒருத்திக்கு ஒருவன் என்று வாழும் இல்லற வாழ்வைக் குறிப்பதாகப் பொருள் கூறப்படும். ஆனால் ஆணுக்குக் கற்பு என்ற கட்டுப்பாடு இல்லை என்பது இன்றுவரை நடைமுறை வழக்கு. கைம்பெண் ஆனவள் வேறு ஆணுடன் இல்லறம் தொடரும் நிலை ஏற்படக்கூடும் என்ற அச்சத்தில், அவளை இறந்த கணவனுடன் சேர்த்து உடன்கட்டை ஏற்றிக் கொல்லும் முறை முன்னர் இருந்தது. ஆங்கிலேயர் ஆட்சியில் கடுமையான சட்டத்தை அவர்கள் இயற்றும் வரை இந்தியாவின் பல பகுதிகளில் 'சதி' என்ற இந்தக் காட்டுமிராண்டி சடங்கு வழக்கமாகவே இருந்தது.

சென்ற நூற்றாண்டில் பெண்ணுரிமைக்குக் குரல் கொடுத்த புரட்சியாளர்களான பெரியார், பாரதியார் போன்றோர் பெண்களுக்கு மட்டும் கற்பை வலியுறுத்துவதை ஏற்றவர்கள் இல்லை. கற்பை இருபாலருக்கும் பொதுமைப் படுத்தினார்கள்.

''கற்பு நிலையென்று சொல்லவந்தார் இரு
கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்"

என்று முழங்கினார் பாரதி. "சந்திரிகையின் கதை" என்று அவர் எழுதிய புனைகதை மூலம் விசாலாட்சி என்ற இளம் கைம்பெண் ஒருத்திக்கு மறுமணம் குறித்தும் எழுதி இருப்பார். அதற்கும் முன்னர் ஆரியப் பண்பாட்டின் தாக்கமாகப் பெண்கள் கற்பு என்பது குறித்து மூளைச் சலவை செய்யப் பட்டார்கள் என்பதை இக்கால 'இசட் தலைமுறை' (Generation Z) அறிந்திருக்க மாட்டார்கள். கற்பு என்பதை 'பதிவ்ரதாத்வம்' அல்லது பதிவிரதம் என்று சாத்திரங்களில் விளக்கினார்கள். "பதிவ்ரதாத்வம் - நாரீணாம் - ஏதத் -ஏவ - ஸநாதனம்" என்று மகாபாரதம் அனுசாஸனிகபர்வம் 249ஆவது அத்தியாயம் 12ஆவது சுலோகம் கூறுகிறதாம்.

ஆண்கள் மேலோகம் செல்ல வேண்டுமானால் (உத்தம கதி அடைதல்) அவர்களுடைய ஊனக்கண்ணுக்குத் தெரியாத கடவுளை சாத்திரங்கள் கூறுவது படி மனதில் உருவகித்துக்

கொண்டு மனதை ஒருநிலைப்படுத்தி கடவுளை வணங்க வேண்டும். ஆண்கள் கவுளை வழிபடுதல், வேள்வி செய்தல், யக்ஞம், தானம் என்ற பல செய்தே கடவுள் அருளைப் பெற வேண்டி இருக்கிறது.

ஆனால் பெண்களுக்கு இத்தகைய கவலையே இல்லை. அவர்கள் தங்கள் கண்ணெதிரே காட்சி தரும் கணவனையே தெய்வம் என வழிபாடு செய்து சொர்க்கம் போகலாம் என கடவுளின் ஆணையான சாத்திரங்கள் கூறுகின்றனவாம். கணவனைத் தெய்வமாக மதித்து அவனுக்குப் பணிவிடை செய்தாலே எளிதாகச் சொர்க்கம் போகலாம். அக்கணவன் கேடு கெட்டவனாக இருந்தாலும் கூட கடவுள் அவன் வழியே மனைவிக்கு அருள் தந்து அவளைக் கடவுள் கடைத்தேற்றுவாராம். அதாவது மற்றவர்களைவிட பதிவ்ரதாஸ்தரீகளே எளிதில் கடைத்தேறும் பாக்கியம் பெற்றவராகி யிருக்கிறவர்கள் என்று சாத்திரம் பெண்களுக்கு வழி காட்டுவதாகக் கூறப்படுகிறது.

"பெண்டிர்க்குப் பதியே தெய்வம்; வேறு புகலிடம் இல்லை" என மகாபாரதம் அனுசாஸனிகபர்வம் 250ஆவது அத்தியாயம் 25ஆவது சுலோகம் குறிப்பிடுவதாகத் தெரிகிறது. உடலை வருத்தி மிகுந்த துன்பங்களுடன் ஓர் ஆண் அல்லது கணவன் அடையும் பயனை, கணவனை வணங்கி பூஜை செய்வதினாலேயே பெண்ணானவள் எளிதில் அடைந்துவிடுவாள் என்று அதற்கு அடுத்து வரும் மகாபாரத அனுசாஸனிகபர்வம் பர்வம் 250ஆவது அத்தியாயம் 26ஆவது சுலோகமும் கூறுகிறதாம்!!!

பெண்களுக்கு ஏதோ சிறப்புச் சலுகை அளிப்பது போல ஆசை வார்த்தைகள் எல்லாம் காட்டி, மனைவியைக் கணவனுக்குக் குற்றேவல் செய்ய வைத்து ஆண்கள் எவ்வாறு சுகமாக வாழ்ந்திருக்கிறார்கள், அதற்குச் சாத்திரங்கள் எவ்வாறு உதவுகின்றன என்று சிந்தித்தால் பெண்கள் ஏமாற்றப் பட்ட நிலை கண்டு நொந்து கொள்வதைத் தவிர வேறு என்ன செய்வது என்று புரியவில்லை.

மணமான பெண்கள் கணவனையே தெய்வமாகத் தொழ வேண்டும் பணிவிடை செய்ய வேண்டும் என்பதுதான் பதிவிரதம் அல்லது கற்பு. இந்நிலை மேன்மை அடையும் பொழுது மனதில் மனதில் முதிர்ச்சி ஏற்படுகிறது மனம் ஒருமைப் படுகிறது. அப்போது கடவுளின் அருளால் பெய் என்றால் மழை பெய்யக் கூடிய சக்தி கிடைக்குமாம். அதாவது, பெய்யெனப் பெய்யும் மழை. பெரிய யோகிக்கும் கூட பெரிய முயற்சி மூலம்தான் கிட்டும் இந்தச் சக்தி பதிவிரதைக்கு எளிதில் கிட்டிவிடுகிறதாம். அடேயப்பா ?? என்ற வியப்புதான் வருகிறது. ஏமாற்றுவதற்கும் ஓர் எல்லை இல்லையா ? மனம் கூசாமல் இதை எல்லாம் சாத்திரம் என்று கூறுபவர்கள் மீது மோசடி வழக்குதான் போட வேண்டும்.

மாதம் மும்மாரிப் பெய்கிறதா என அக்காலத்துத் தெருக்கூத்து, நாடகங்களில் அரசர் அமைச்சரைக் கேட்பதாகக் காட்சிகள் வரும். பராசக்தி படத்தில் அது ஓர் எள்ளல் காட்சியாக "மந்திரி நமது- மாநகர் தன்னில்- மாதம் மும்மாரி மழை பொழிகிறதா?" என்ற வசனம் இடம் பெறுவதை நினைவு கூரலாம்.

"வேதமோதிய வேதியர்க்கோர்மழை,

நீதிதவறா நெறியினர்க் கோர்மழை,
காதல்கற்புடை மங்கையர்க்கோர் மழை,
மாதம் மும்மழை பெய்யெனப் பெய்யுமே"

என மூன்று மழைகளில் ஒரு மழை பெண்களின் கற்புடன் தொடர்பு படுத்தி இருப்பதைக் காணலாம். நாட்டில் வறட்சி என்றால் பெண்களிடம் கற்பில்லை என்று பழி போடக்கூடிய இக்கட்டும் இதனால் உள்ளது அல்லவா?

மழைபொழிதல் குறித்து சுற்றுச்சூழலியல், அறிவியல் பாடங்களில் அறிந்ததைப் பெண்கள் வாழ்வில் தொடர்புப்படுத்தி தாங்கள் ஏமாற்றப்படுவதை உணர்ந்து கொள்ள வேண்டிய தேவை இருக்கிறது.

கட்டுரைக்கு உதவிய நூல்: ஸ்ரீ ஜகத்குரு காஞ்சி காமகோடி பீடாதிபதிகளான ஸ்ரீசங்கராசார்ய ஸ்வாமிகள் அனுக்ரஹித்த திவ்ய ஸ்ரீமுகத்துடன் கூடிய "திருக்குறள் நூற்றெட்டு" என்ற தலைப்புடன் 1950ஆம் ஆண்டு ஸ்ரீ காமகோடி கோசஸ்தானம் வெளியிட்ட நூல்.

கண்ணுக்குள் நிலவு

தனிமையின் வேர்கள்
பின்னிப் பிணைய
ஓடியாடத் தெம்பின்றி
அடங்கிப்போகிறது மனம்
சலனமின்றிக் கரையும்
மணித்துளிகளில்
நிச்சலனமின்றி விழுக்கிறது
ஞாபகங்கள்
மூச்சின் இடைவெளிகளை
நீக்கமற நிரப்பி
இதயத்துடிப்பாகிறது
ஒரேயொரு பெயர்
நெஞ்சின் ஆழத்திலிருந்து
மீண்டும் பிறப்பிக்கிறேன் உன்னை
இருள் கவிந்த மனதில்
நட்சத்திரத் தூவலாகிறது
உறவாடியக் காதல்
கண்ணுக்குள் நிலவாகிறது
உன் முகம் .

– மேனகா ஈரேஷ்

பீஷ்மரை வென்ற பெண் - அம்பை

முனைவர் சைலஜா சக்தி
சென்னை

காசி மன்னன் காஷ்யருக்கு அம்பை, அம்பிகை, அம்பாலிகை என்ற மூன்று மகள்கள் இருந்தனர். இவர்கள் மூவருக்கும் திருமணம் செய்ய விரும்பிய மன்னன் சுயம்வரத்திற்கு ஏற்பாடு செய்தார். பல நாட்டு மன்னர்களுக்கும், இளவரசர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டது.

அம்பை, சால்வ நாட்டின் மன்னன் சால்வனைக் காதலித்தாள். சுயம்வரத்தில் சால்வனின் கழுத்தில் மாலையிடுவதாக அம்பை வாக்களித்தாள். அனைவரும் சுயம்வர மண்டபத்தில் கூடியிருக்கும்போது திடீரென பீஷ்மர் அங்கு பிரவேசித்தார். மூன்று பெண்களையும் கடத்திச் சென்று அவர்களைத் தன் சகோதரன் விசித்திர வீரியனுக்குத் திருமணம் செய்து வைக்கப் போவதாக அறிவித்தார். அஸ்தினாபுரத்தின் அரசனாக இருந்த விசித்திர வீரியன், பீஷ்மரின் தந்தை சந்தனுவிற்கும், அவரின் இரண்டாவது மனைவி சத்தியவதிக்கும் பிறந்தவன்.

பீஷ்மர் கூறியதை ஏற்க மறுத்த மன்னர்கள், அவருடன் போரிட்டுத் தோற்றனர். சால்வனும் பீஷ்மருடன் போரிட்டுத் தோற்றான். இறுதியில் பீஷ்மர் மூன்று பெண்களையும் கடத்திச் சென்று சத்தியவதிடம் ஒப்படைத்தார். இதில் அம்பிகையும், அம்பாலிகையும் விசித்திர வீரியனை மணம் புரிய சம்மதித்தனர். அம்பை சால்வனைக் காதலிப்பதாகக் கூறினாள். உடனே பீஷ்மர் அவளை உரிய மரியாதையுடன் சால்வனிடம் அனுப்பி வைத்தார்.

ஆனால் சால்வனோ ''என்னைத் தோற்கடித்து பீஷ்மர் உன்னைக் கவர்ந்து சென்றார். வென்ற பீஷ்மருக்குத்தான் நீ சொந்தம். நான் உன்னை ஏற்க முடியாது. பீஷ்மரிடமே திரும்பிச் செல்'' என்றான். அம்பை சால்வனிடம் கெஞ்சினாள். பீஷ்மரிடம் தோற்று விட்ட விரக்தியில் இருந்த சால்வன் பீஷ்மர் திருப்பி அனுப்பிய அம்பையை ஏற்றுக் கொள்வது இழுக்கு என்று கருதினான். அவனது தோல்வியும், அவமானமும் அம்பையின் மீது சினமாக வெளிப்பட்டது. அம்பை எவ்வளவோ கெஞ்சியும், சத்ரிய தர்மத்தைக் காரணம் காட்டி சால்வன் அவளைத் திருமணம் செய்ய மறுத்துவிட்டான்.

வேதனையுடன் திரும்பிய அம்பையைக் கண்ட பீஷ்மர் விசித்திர வீரியனிடம் சென்று அம்பையைத் திருமணம் செய்து கொள்ளச் சொன்னார். வேறொரு ஆடவனை நேசித்த பெண்ணைத் திருமணம் செய்ய முடியாது என்று விசித்திர வீரியன் மறுத்துவிட்டான்.

மனமுடைந்த அம்பை பீஷ்மரை அணுகி, தன்னைத் திருமணம் செய்து கொள்ளுமாறு வேண்டினாள். பிரம்மச்சரிய விரதத்தைக் கடைப்பிடிப்பதால் திருமணம் செய்ய இயலாது என்று பீஷ்மர் மறுத்தார்.

மூன்று ஆண்களாலும் நிராகரிக்கப்பட்டதால் அம்பையின் கோபம் அதிகமாகியது. தன்னுடைய இந்த அவல நிலைக்குக் காரணம் பீஷ்மர்தான் என்ற முடிவுக்கு வந்து, பீஷ்மரைப் பழிவாங்க காட்டுக்குக் கிளம்பினாள். போரின் மூலம் அல்லது துறவறத்தின் மூலம் பீஷ்மரை அழிப்பேன் என்று சபதம் செய்தாள். அம்பையின் தாய்வழித் தாத்தா "பரசுராமரைச் சந்தித்து உனது நிலையைக் கூறு. அவர் உனக்கு உதவுவார்" என்றார்.

அம்பை பரசுராமரை சந்தித்து நடந்ததைக் கூறினாள். அப்போது பரசுராமரின் சீடர்களில் ஒருவர் "பெண்ணே உனக்கு இரண்டு வழிகள் உள்ளன. ஒன்று பரசுராமரின் உதவியால் நீ சால்வனை மணக்க வேண்டும் அல்லது பரசுராமர் போரில் பீஷ்மரை தோற்கடிக்க வேண்டும். இரண்டில் உனக்கு எது வேண்டும்?" என்று கேட்டார்.

"என்னை மணக்க விரும்பாத சால்வனைக் கட்டாயப்படுத்தி திருமணம் செய்ய விரும்பவில்லை. இதன்மூலம் சால்வனுக்கு என்மேல் வெறுப்பு அதிகமாகும். என் மண வாழ்வும் மகிழ்ச்சியாக இராது. என்னை இந்த நிலைக்குத் தள்ளிய பீஷ்மரைப் பழிவாங்க வேண்டும். எனவே பரசுராமர் பீஷ்மரைத் தோற்கடிப்பதையே விரும்புகிறேன்" என்றாள். பரசுராமர் தன் பரிவாரங்களுடன் வருவதை அறிந்த பீஷ்மர் உரிய மரியாதைகளை அளித்து அவரை வரவேற்றார். அதைக் கண்டு மகிழ்ச்சியடைந்த பரசுராமர் "அம்பையைத் திருமணம் செய்து கொள்" என்று பீஷ்மரிடம் கூறினார். பிரம்மச்சரிய விரதம் கடைபிடிப்பதாகக் கூறி பீஷ்மர் அதை மறுத்தார். இதனால் கோபமடைந்த பரசுராமர், பீஷ்மரைப் போருக்கு அழைத்தார். பீஷ்மரும் வேறு வழியின்றி அதற்கு சம்மதித்தார். இந்தப் போரை நிறுத்த கங்கை எவ்வளவோ முயற்சித்தும் பலனில்லை. இருவருக்கும் இடையே 23 நாட்கள் பெரும் போர் நடைபெற்றது. கடைசியாக நாரதரின் தலையீட்டால் போர் முடிவுக்கு வந்தது. பரசுராமரால் உதவ முடியவில்லை என்று அறிந்த அம்பை, துறவறத்தின் மூலம் தனது குறிக்கோளை அடைவேன் என்று சபதம் செய்தாள்.

இமயமலைக்குச் சென்று சிவனின் மகனாகிய கார்த்திகேயனை நோக்கிக் கடுந்தவம் புரிந்தாள். கார்த்திகேயன் அவள் முன் தோன்றி நீல நிறத் தாமரை மலர் மாலை ஒன்றை வழங்கினார். அந்த மாலையை அணிபவர் பீஷ்மரை அழிப்பார் என்றார். தாமரை மாலையை எடுத்துக்கொண்டு அம்பை மன்னர்களையும். இளவரசர்களையும் சந்தித்தாள். ஆனால் பீஷ்மரை எதிர்த்துப் போர் புரிய அஞ்சி, எவரும் அம்பைக்கு உதவ முன் வரவில்லை. இறுதியாக பாஞ்சால நாட்டை அடைந்து மன்னன் துருபதனிடம் தன் விருப்பத்தை கூறினாள். துருபதனும் மறுத்து விட்டதால் விரக்தி அடைந்து, மாலையை அரண்மனைக்கு வெளியே இருந்த ஒரு தூணில் வீசி எறிந்துவிட்டு மீண்டும் காட்டிற்குச் சென்று தவம் செய்தாள். மாலை வாடாமல் இருந்ததைக் கண்ட துருபதன் அதற்கு பூஜை செய்ய உத்தரவிட்டான்.

அம்பை ஊண், உறக்கமின்றி தவம் செய்தாள். நீருக்குள் நின்று காற்றை மட்டுமே சுவாசித்து தவம் மேற்கொண்டாள். பின்னர் ஒரு மரத்திலிருந்து உதிர்ந்து விழுந்த ஒரு இலையை மட்டுமே உண்டு தவத்தைத் தொடர்ந்தாள். தனது பாதத்தின் நுனி விரல்களால் நின்று பன்னிரண்டு ஆண்டுகளுக்கும் மேல் தவம் புரிந்தாள்.

அம்பையின் கடும் தவத்தைக் கண்ட கங்கை, அவள் முன் தோன்றினாள். பீஷ்மரை அழிக்கவே இத்தவம் என்று அம்பை கூறியதும், தன் மகனை அழிக்க விரும்பும் அம்பையின் மீது கங்கைக்குக் கோபம் வந்தது. "புத்தி கோணலாக இருக்கும் நீ, கோணலாக வளைந்து செல்லும் நதியாக மாறுவாய். அந்நதி எட்டு மாதங்கள் வறண்டு, நான்கு மாதங்கள் நீருடன் இருக்கும். நீராடும் இடங்கள் கடினமாகவும், முதலை போன்ற கொடூரமான உயிரினங்களாலும் நிறைந்திருக்கும்'' என்று கங்கை சாபமிட்டாள்.

கங்கையின் சாபம் பலித்தது. அம்பை உடலின் ஒரு பாதி ''அம்பா நதியாக'' மாறியது. இருப்பினும் அவள் செய்த தவத்தின் பலனாக மறு பாதி உடல் மனித உருவில் இருந்தது. மனம் தளராத அம்பை தவத்தைத் தொடர, சிவபெருமான் அவள் முன் தோன்றி ''அடுத்த பிறவியில் ஆணாகி பீஷ்மரை அழிப்பாய். உரிய நேரத்தில் உனக்கு முற்பிறவி நிகழ்வுகள் நினைவிற்கு வரும்" என்றார். மகிழ்ச்சியடைந்த அம்பை "பீஷ்மரின் அழிவிற்காக" என்று கூறி நெருப்பில் குதித்து உயிர் நீத்தாள். அம்பை இறந்த பின்பும் துருபதன் அரண்மனையில் அவள் வீசிய மாலையை எவரும் தொடத் துணியவில்லை. துருபதனுக்கு குழந்தைகள் இல்லாததால் ஒரு மகன் வேண்டும் என்று சிவனை நோக்கி தவம் புரிந்தார். அவரது தவத்தில் மகிழ்ந்த சிவபெருமான் "உனக்கு ஒரு பெண் குழந்தை பிறக்கும். பின்னர் அக்குழந்தை ஆணாக மாறும்" என்று வரம் அளித்தார்.

சிவபெருமானின் கூற்றுப்படி, அம்பை துருபதனுக்கு மகளாகப் பிறந்தாள். சிகண்டி என்ற பெயரில் ஆண் உடை தரித்து, ஆண் போலவே வளர்க்கப்பட்டாள். சிகண்டி பருவ வயதை அடைந்ததும், ஒரு இளவரசியுடன் திருமணம் நடைபெற்றது. சிகண்டியின் பாலினம் குறித்து அந்த இளவரசி தன் தந்தையிடம் கூற, வருத்தமடைந்த அவர் துருபதன் மீது போர் தொடுத்தார். இதனால் சிகண்டி ஒரு யட்சனின் உதவியுடன் ஆணாக மாறினாள்.

ஒரு நாள் சிகண்டி போர்ப் பயிற்சி செய்து கொண்டிருந்தபோது முற்பிறவியில் அவள் வீசிய நீல நிறத் தாமரை மலர் மாலையைக் கண்டாள். அதைக் கையில் எடுத்ததும் அவளுக்கு முற்பிறவியின் நினைவுகள் வந்தது. பீஷ்மரைப் பழி வாங்குவதற்கு உரிய சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தாள். சிகண்டியின் தங்கை பாஞ்சாலி பாண்டவர்களை மணந்தாள். காலப்போக்கில் அம்பிகை, அம்பாலிகை இருவரின் பேரன்களான பாண்டவர்களும், கௌரவர்களும் தங்களுக்குள் இருந்த பகையால் குருஷேத்திரப் போரைத் தொடங்கினர். பாண்டவர்களுக்கு உதவி செய்யும் பொருட்டு அர்ஜுனனின் தேரோட்டியாக சிகண்டி சென்றாள்.

"பெண்ணுக்கு எதிராக ஆயுதம் ஏந்துவதில்லை" என்று சபதம் செய்திருந்த பீஷ்மர், தோற்றத்தில் ஆணாக இருந்தாலும் பிறப்பால் சிகண்டி பெண் என்பதை அறிந்து தன்

ஆயுதங்களைத் தியாகம் செய்தார். இதற்காகவே காத்திருந்த சிகண்டி ஆயுதங்களை இழந்த பீஷ்மரின் மீது கணையைத் தொடுத்தாள். அவளைத் தொடர்ந்து அர்ஜுனன் பீஷ்மரை அம்புப் படுக்கையில் விழ வைத்தான். பல நாட்கள் அம்புப் படுக்கையில் இருந்த பீஷ்மர், குருஷேத்திர போருக்குப் பின் உயிர் நீத்தார். அம்பை பீஷ்மரின் அழிவிற்குக் காரணமானாள்.

எவராலும் வெல்ல முடியாத கங்கையின் மைந்தனை, குருகுலத்தின் பிதாமகரை, தான் செய்த சபதத்தின்படி அழித்தவள் அம்பை. பீஷ்மரின் அழிவிற்காகத் தன் முழு வாழ்வையும் அர்ப்பணித்து, போராட்டங்களையும், வலிகளையும் தாங்கி உயிர்த் தியாகம் செய்த அம்பை என்னும் நங்கை, மகாபாரதத்தின் முக்கியமான பெண் கதாபாத்திரம் ஆவாள்.

சினம் தவிர்

அறியாமை,
ஆற்றாமை,
இயலாமை,
இல்லாமை,
பொறாமை,

இந்த ஆமைகளில்
முளைவிடும் மிகு கீழ் மிகு
ஒவ்வாமையே;
சினம்.

பொங்கு சினம்
அளிக்கும் பரிசு
மங்கா பழி.
நீங்கா ரணம்;
வலி தரும்
வாழும் நாள்
முற்றும்.

ஆக்கிரம் அடக்கி,
சாக்கிர சினம் பழக,
ரௌ க்கிரம் நீர்ந்தமையும்.

ஆறுவது சினம்,
சினம் ஆற்றுவதே அறிவு.

அவ்வை வாய் சூரணம்,
பாரில் அறிவோர் தேர்வு.

சசிகலா விஸ்வநாதன்

இதுவும் பாடம்தான்!



அன்னபூரணி தண்டபாணி

பரமாநந்தம் வாத்தியார் அரசுப் பள்ளியில் கணக்கு ஆசிரியராக வேலை பார்த்து ஓய்வு பெற்றவர். அவருடைய மனைவி சரஸ்வதி டீச்சரும் அவரைப் போலவே ஆசிரியைதான். அறிவியல் வகுப்பு எடுக்கும் ஆசிரியை. ஆனால் அரசுப் பள்ளி ஆசிரியை அல்ல. தனியார் பள்ளியில் பணிபுரிகிறார்.

மதுரையை அடுத்த தேனியை சொந்த ஊராகக் கொண்ட அவர்கள் இருவரும் திருமணத்துக்கு முன் வேறு வேறு தனியார் பள்ளிகளில் வேலை பார்த்து வந்தனர்.

திருமணத்துக்குப் பின்பு பரமாநந்தம் வாத்தியாருக்கு அரசுப்பள்ளியில் வேலை கிடைத்தது. சரஸ்வதி டீச்சரும் அரசுப் பணிக்கு முயற்சி செய்தார். ஆனால் பலன்தான் கிடைக்கவேயில்லை.

இருவரும் தங்கள் செய்யும் ஆசிரியப் பணியை மிகவும் புனிதமாகப் போற்றினார்கள்.

தாங்கள் வேலை செய்யும் பள்ளிக்கூடத்தைக் கோயிலாகவும் அதில் பயல வரும் குழந்தைகளை தெய்வங்களாகவும் மதித்துப் போற்றினார்கள்.

அதனால் தங்களின் மாணவர்களை அவர்கள் தங்களின் பணியை தெய்வத்துக்கு ஆற்றும் தொண்டாக நினைத்துச் செய்தார்கள்.

பரமாநந்தம் பணி ஓய்வு பெற்றுவிட்டார். சரஸ்வதி மறைமலைநகரில் உள்ள பிரபல தனியார் பள்ளியில் ஆசிரியையாக பணிக்குச் சேர்ந்தார். அதனால் அவர்கள் மறைமலைநகரில் வந்து குடியேறி இருக்கிறார்கள்.

அவர்களிடம் படிக்க அந்தப் பகுதியிலுள்ள பள்ளி மாணவ மாணவிகள் அனைவரும் டியூஷன் சென்றார்கள்.

படிப்பில் மிகவும் பின்தங்கிய மாணவரும் எளிதாகப் புரிந்து கொள்ளும் வகையில் பரமாநந்தம் வாத்தியார் கணக்குப் பாடம் சொல்லித் தரக் கூடியவர்.

அதே போல சரஸ்வதி டீச்சர், அறிவியல் பாடம் எடுப்பதை ஒரு முறை கவனித்தால் அதன் பிறகு எத்தனை வருடங்கள் ஆனாலும் அந்தப் பாடம் அவர் மனதை விட்டு

நீங்காது; பசுமரத்தாணியாய் மனதில் பதிந்துவிடும். அத்தனை எளிமையாய் புரிந்து கொள்ளும் வகையில் பாடம் சொல்லித் தரக் கூடிய திறமை வாய்ந்தவர்.

தான் எடுக்கும் டியூஷன் வகுப்புகளுக்கு, வாத்தியார் மிகக் குறைந்த கட்டணமே வசூலித்தார். அவரிடம் படிக்க ஆரம்பித்த பின், தங்கள் பிள்ளைகளின் மதிப்பெண்கள் உயர்ந்துள்ளதாக பெற்றோர் கருதினார்கள். இந்தச் செய்தி அந்தப் பகுதி முழுதும் பரவியது. அதனால் அவரிடம் நிறைய பேர் டியூஷன் சேர்ந்தார்கள்.

ஆரம்பத்தில் எல்லாம் சரியாகப் போய்க் கொண்டிருந்தது.

ஆனால் போகப் போக தங்கள் வீட்டுப் பிள்ளைகளின் நடவடிக்கைகளில் மாற்றம் தெரியத் தொடங்கியதால் பெற்றோரின் மனதில் கலக்கம் உண்டாகத் தொடங்கியது.

மாணவர்கள் எப்போதும் 'டியூஷன் சார்!' 'டியூஷன் டீச்சர்!' என்றே பஜனை செய்வதாகத் தோன்றியது.

மாணவிகள் எப்போதும் அமைதியாகவும் தனிமையை நாடத் தொடங்கியதைப் போலவும் தோன்றியது.

ஆனால் அவர்களின் படிப்பில் கவனமுடன்தான் இருந்தார்கள் என்பது அவர்களுடைய மதிப்பெண்களில் பிரதிபலித்தது.

சரி! எதுவும் பிரச்சனை என்று வந்தால் பார்த்துக் கொள்ளலாம் என்று அமைதியாக இருந்தார்கள் பெற்றோர்.

ஒரு நாள் மாலை, பள்ளிக்கூட நேரம் முடிந்து டியூஷன் சென்ற மாணவர்கள் மிகவும் பரபரப்பாக இருந்தனர்.

டியூஷனில் யாரும் பாடம் படித்ததாகத் தெரியவில்லை. மாணவர்களும் மாணவிகளும் தனித் தனி குழுக்களாகப் பிரிந்து தங்களுக்குள் கூடிக் கூடி பேசிக் கொண்டும் தங்கள் கைபேசியை நோண்டிக் கொண்டும் இருந்தார்கள்.

இவர்களின் இந்த நடவடிக்கைகளை தங்கள் வீடுகளிலிருந்து பார்த்த சிலர், வாத்தியாரின் வீட்டுக்கு வந்தனர்.

"என்ன தம்பிங்களா? டியூஷன் இல்லயா? ஏன் எல்லாரும் இப்டி க்ரூப் க்ரூப்பா நின்னு பேசிட்டிருக்கீங்க?" என்று கேட்டார் ஒரு மாணவனின் தந்தை.

"இல்ல அங்கிள்! நத்திங்!" என்றான் ஒருவன்.

இதற்குள் எல்லா பெற்றோருக்கும் இவர்கள் இப்படி நின்று வெட்டிப் பேச்சு பேசிக் கொண்டிருப்பது காட்டுத்தீயாய் பரவியது. எல்லாரும் வாத்தியார் வீட்டின் முன் கூடி விட்டார்கள்.

எல்லாரும் தங்களின் பிள்ளைகளை அழைக்க, வனிதா என்ற ஒரு மாணவியையும் ரஞ்சன் என்ற ஒரு மாணவனையும் மட்டும் காணவில்லை.

"என்ன சார்? எம்பொண்ணு எங்க?" என்று காணாமல் போன மாணவி வனிதாவின் அம்மாவும்,

"எம்பையன் எங்க?" என்று காணாமல் போன மாணவன் ரஞ்சனின் அப்பாவும் வாத்தியாரைக் கேள்வி கேட்டார்கள்.

"சார்.. டென்ஷனாகாதீங்க.. உங்க பிள்ளைங்க இப்ப வந்துடுவாங்க!" என்றார் பரமாநந்தம் வாத்தியார்.

"ஃபீஸ் கம்மின்னு இந்தாள்கிட்ட சேர்த்தது பெரிய தப்பு போலிருக்கு.. பாடத்த வுட்டுட்டு பசங்களுக்கு வேண்டாததல்லாம் சொல்லித் தராரு போல.." என்று வாத்தியாரைப் பற்றி தரக்குறைவாகப் பேசினார்கள்.

அதற்குள் சிலர் காணாமல் போன மாணவியையும் மாணவனையும் இணைத்து தேவையற்றதைப் பேசத் தொடங்கினார்கள்.

"என்ன சார்? எங்க பொண்ண இந்தாள் பையனோட நீங்களே அனுப்பிட்டீங்களா?" என்று கோபமாகக் கேட்டார் வனிதாவின் அம்மா.

"யோவ் வாத்தி! இந்தம்மா சொல்றது மட்டும் உண்மையாயிருந்தா இங்க நடக்கறதே வேற!" என்று கர்ஜித்தார் ரஞ்சனின் அப்பா.

"என்னய்யா? மெரட்டுறியா?" என்று வனிதாவின் அம்மா கோபமாகப் பேச அதற்கு ரஞ்சனின் அப்பா எகிர அங்கு களேபரமாகத் தொடங்கியது.

சிலர் வனிதாவின் அம்மாவுக்கு ஆதரவாகவும் சிலர் ரஞ்சனின் அப்பாவுக்கு ஆதரவாகவும் பேசப் போக பிரச்சனை பெரிதாயிற்று.

கூடியிருந்தவர்கள் சண்டையை விலக்காமல் சுவாரசியமாக வேடிக்கை பார்க்கத் தொடங்கினார்கள்.

எங்கே கைகலப்பு ஏற்பட்டுவிடுமோ என்று பரமாநந்தம் வாத்தியார் கலங்கித்தான் போனார்.

சரியாக அப்போது ஒரு போலீஸ் ஜீப் வந்து நிற்க, அதிலிருந்து அந்த மாணவி வனிதாவும் மாணவன் ரஞ்சனும் பரமாநந்தம் வாத்தியாரின் மனைவியான சரஸ்வதி டீச்சரும் இறங்கினார்கள்.

இவர்கள் இப்படி வந்து இறங்கியதைப் பார்த்து ரஞ்சனின் அப்பாவும் வனிதாவின் அம்மாவும் அதிர்ந்தனர்.

ரஞ்சனின் அப்பா தன் மகனைப் பார்த்து,

"ஏண்டா? உன்ன படிக்க அனுப்பினா நீ என்ன வேல பாத்துட்டு வந்திருக்க? நீல்லாம் புள்ளயாடா? வீட்டுக்கு வாடா! உன் கால வெட்டி வீசிடறேன்!" என்று ஆரம்பித்து காதில் கேட்கச் சகிக்காத வார்த்தைகளைச் சொல்லித் திட்டித் தீர்த்தார்.

வனிதாவின் அம்மா ஒரு படி மேலே போய், தன் மகளை அடி வெளுக்கத் தொடங்கினார்.

வந்திருந்த காவல் அதிகாரிக்கு ஒன்றுமே புரியில்லை.

"ஸ்டாப் இட்? என்ன நடக்குது இங்க?" என்று அவர் ஒரு அதட்டு போட்ட பின்னரே அவர்கள் அமைதியாகினர்.

பெற்றோர் எதற்காக தங்கள் பிள்ளைகளிடம் கோபப்பட்டார்கள் என்று பரமாநந்தம் வாத்தியார் அந்தக் காவல் அதிகாரிக்கு விளக்கினார்.

"நீங்கல்லாம் படிச்சவங்கதானே? என்ன ஏதுன்னு தெரியறதுக்கு முன்னாடியே இப்டிதான் கண்டதையும் நெனச்சி சண்டை போடுவீங்களா?" என்று அதட்டலாகக் கேட்டார்.

"அப்ப என்னதான் நடந்துச்சுன்னு நீங்கதான் சொல்லுங்களேன் சார்!" என்று ஒரு குரல் கூட்டத்திலிருந்து வந்தது.

"இன்னிக்கு இந்த பொண்ண ரெண்டு ரவுடிப் பசங்க மயக்க மருந்து குடுத்து கடத்த பாத்தாங்க.. ஆனா இந்த பொண்ணு சாமர்த்தியமா அவங்க கிட்டேர்ந்து தப்பிச்சிட்டா..

இந்த விஷயத்தை தன் கிளாஸ்மேட்டான இந்த பையன் கிட்ட சொன்னதும் அவன் தன் டீச்சரோட உதவியோட அவங்கள பிடிச்சிட்டு வந்து எங்க கிட்ட ஒப்படைச்சிட்டான். இந்த பையனையும் இந்த பொண்ணையும் பத்திரமா கொண்டு வந்து விடதான் இவங்கள கூட்டிட்டு நாங்க வந்திருக்கோம்!" என்றார் அந்த அதிகாரி.

சண்டையிட்ட பெற்றோரின் முகத்தில் ஈயாடவில்லை.

"என்ன சார் சொல்றீங்க?" என்று ரஞ்சனின் அப்பா கேட்க,

"ம்! சண்டை போடீங்கல்ல.. உங்க புள்ளைங்ககிட்டயே கேளுங்க.." என்று கூறிவிட்டு பரமாந்தம் சாரைப் பார்த்து கைகுலுக்கிவிட்டுச் சென்றார்.

"பள்ளிக்கூடம் போற நாங்க.. குறிப்பா பொம்பளப் பசங்க.. தைரியமா இருக்கணும்னு எங்க டியூஷன் வாத்தியாரும் டியூஷன் டீச்சரும் தற்காப்பு முறைகள் சொல்லித் தராங்க.. அத வெச்சிதான் உங்க பொண்ணு வனிதா, இன்னிக்கு தனக்கு வந்த ஆபத்தில இருந்து தப்பிச்சிருக்கா.." என்றான் ரஞ்சன்.

"தற்காப்பு கலைகளா?" என்று கேட்டார் பெற்றோர்களில் ஒருவர்.

"ஆமா அங்கிள்.. தனியா போறப்ப யாராவது நம்ம கிட்ட வம்பு பண்ணினா, தவறா நடந்துகிட்டா.. மயக்க மருந்து குடுத்து கடத்தப் பாத்தா.. இந்த மாதிரியில்லாம வேற என்ன ஆபத்து வந்தாலும் பொண்ணுங்க எங்களுக்கு, எங்கள நாங்களே காப்பாத்திக்க தெரியணும்..

அதுக்குதான் டீச்சர் எங்களுக்கு பெப்பர் ஸ்ப்ரே வாங்கி குடுத்திருக்காங்க. அத வாங்கி குடுத்ததோட விட்டுடாம அத எப்டி பயன்படுத்தணும்? எதிரியை எளிதாகவும் அதே நேரத்தில பலமாகவும் எப்டி எங்க தாக்கணும். வெளிச்சம் குறைவான இடத்தில போக நேர்ந்தா என்னென்ன பாதுகாப்பு முறைகளை கையாளணும். நம்ம கிட்ட இருக்கற பொருட்களோட சேர்த்து நம்மை நாமே எப்டி பாதுகாத்துக்கணும்ன்னு எல்லா வழி முறைகளையும் கத்துக் குடுத்திருக்காங்க.." என்றாள் வனிதா.

"எங்களுக்கு இதெல்லாம் கத்து குடுக்கறதோட நிறுத்தல.. இத நாங்க தினம் பயிற்சி பண்றோமா இல்லையான்னும் வாத்தியாரும் டீச்சரும் கண்காணிக்கறாங்க.." என்றான் மற்றொரு மாணவன்.

"அது மட்டுமில்ல! பெண்கள் எல்லா வயதிலயும் அந்தந்த வயதுக்கேற்ப உடல்ரீதியா எத்தனை கஷ்டப்படறாங்க.. அவங்க கிட்ட எப்டி மரியாதையா நடந்துக்கணும்.. வேற யாராவது பெண்களை மரியாதைக் குறைவா நடத்தினா அவங்கள எப்படி திருத்தணும்னு கூட பாய்ஸ்க்கு டீச்சர் சொல்லி குடுத்திருக்காங்க. இப்பல்லாம் எங்களுக்கு பாய்ஸால எந்த பிரச்சனையும் வரதேயில்ல.." என்றாள் மற்றொரு மாணவி.

"எங்க எல்லாருக்கும் சேஃப்டீ அலாரமும் வாங்கி அதை எப்டி பயன்படுத்தணும்னு சொல்லி தந்திருக்காங்க.. இங்க பாருங்க.." என்று கூறி தன் பையிலிருந்து அந்த பாதுகாப்பு அலாரத்தை எடுத்துக் காண்பித்தாள் வனிதா.

"இத மொதல்லயே சொல்லியிருக்கலாம்ல வாத்தி?" என்று கேட்டார் அந்த மாணவனின் அப்பா.

"எங்கப்பா சொல்ல வுட்டீங்க? நீங்களா ஒண்ண கற்பனை செஞ்சிகிட்டு சண்டை போட ஆரம்பிச்சீங்க.." என்று குற்றம் சொன்னான் வேறொரு மாணவன்.

"எங்களுக்கு குழந்தையில்ல. ஆனா அதுக்காக நாங்க வருத்தப்படல. எங்க கிட்ட படிக்கற எல்லா மாணவ மாணவிகளையும் நாங்க எங்க புள்ளைங்களாதான் பாக்கறோம். நாங்க பெத்த புள்ளையாயிருந்தா என்னல்லாம் கத்து குடுத்திருப்போமோ அததான் இவங்களுக்கு கத்து குடுத்தோம்!" என்றார் வாத்தியார்.

சரஸ்வதி டீச்சரின் கண்கள் கலங்கின.

சண்டையிட்ட வனிதாவின் அம்மாவும் ரஞ்சனின் அப்பாவும் ஒருவருக்கொருர் பரஸ்பரம் மன்னிப்பு கேட்டுக் கொண்டார்கள். வாத்தியாரிடமும் டீச்சரிடமும் மன்னிப்பு கேட்டார்கள்.

"தப்புதான்! எங்க சின்ன புத்தி.. தப்பு தப்பா நெனக்க தோணுது.. ஆனா எல்லாம் பிளஸ் டூ படிக்கற புள்ளைங்க.. நாளைக்கு பொதுத் தேர்வுல நல்ல மார்க் எடுக்கணும்னு டியூஷன் அனுப்பறோம்.. இது அவசியம்தான்.. இல்லன்னு சொல்லல.. ஆனா பிளஸ் டூ மார்க் வாழ்க்கைக்கு முக்கியமாச்சே?" என்று தயங்கிய குரலில் கேட்டார் ஒருவர்.

"என்னப் பொறுத்த வரைக்கும் இதுவும் பாடம்தான். பிளஸ் டூ மார்கை விட வாழ்க்கைக்குத் தேவையான ரொம்ப ரொம்ப அவசியமான பாடம் இதுதான். இது மட்டும்தான்." என்று சரஸ்வதி டீச்சர் தன் கண்களைத் துடைத்துக் கொண்டு தெளிவான குரலில் கூறினார்.

"இனிமே உங்க புள்ளைங்க, குறிப்பா பொம்பள புள்ளைங்க எதுக்குமே பயப்படாம எதையும் துணிச்சலா ஃபேஸ் பண்ணனும்னுதான் அவங்களுக்கு தங்களைத் தாங்களே காப்பாத்திக்க கத்து குடுத்தோம்.

ஏதாவது தப்பு நடந்துச்சுன்னா எல்லாத்துக்கும் காரணம் நீதான்னு பொண்ணுங்கள குத்தம் சொல்றத நிறுத்திட்டு நம்ம வீட்டு ஆம்பள புள்ளைங்களுக்கு பொண்ணுங்க கிட்ட எப்டி நடந்துக்கணும்னு சொல்லிக் குடுக்கறது மட்டும்தான் இந்த பிரச்சனைக்கு சரியான தீர்வு.

தப்பு செய்யறவங்கள அரசாங்கம் தண்டிக்கும்னு காத்துகிட்டிருந்தா வேலைக்கு ஆகாது.

தப்பு நடக்கறதுக்கு முன்னாடியே நம்ம பசங்களுக்கு தற்காப்பு கத்து குடுக்கறதுதான் புத்திசாலித்தனம். அததான் நாங்க செஞ்சோம்." என்றார் பரமாநந்தம் வாத்தியார்.

கூச்சலிட்ட பெற்றோர் வாத்தியாரையும் டீச்சரையும் கையெடுத்துக் கும்பிட்டு வாயார வாழ்த்தி நன்றி கூறிவிட்டுச் சென்றனர்.

அறம் துறந்த மனிதம்!

மதுவின் மயக்கத்தில்
மானம் இழந்து
மனவலிமை குலைந்து
மன்றாடும் மனிதம்!

பிஞ்சுகளின் பிறப்புறுப்பில்
பேரின்பம் தேடும்
பிக்தர்களின் புத்திக்குள்
பரிதவிக்கும் மனிதம்!

நோயில் நொந்து
நொடித்துப் போன நொடியில்
மருத்துவரின் மனதில்
மரத்துப்போகும் மனிதம்!

ஊழலில் உழன்று
உன்னத தலைவர்களாய்
உருவெடுக்கும் உத்தமர்களிடம்
உறைந்துவிடும் மனிதம்!

இப்படி மன்றாடி... பரிதவித்து....
மரத்துப்போய்... உறைந்துவிட்ட மனிதம்
சகமனிதனிடம் தன்முகம் தேடி
அலைந்து கொண்டிருக்கிறது...
தான் அறம் துறந்து
மரித்துவிட்டதை மறுதலிக்க முடியாமல்..!

– ஜ.ஜான்சிராணி
ஆய்வு வளமையர்,
உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை

மனிதாபிமானம்

சுஜாதா

என் பெயர் மைதிலி, நான் ஒரு இல்லத்தரசி. இன்று வெள்ளிக்கிழமை அதிகாலை 5:00 மணிக்கு எழுந்து அன்றாட வேலைகளை செய்ய ஆரம்பித்தேன் என் கணவருக்காகவும் என் மகளுக்காகவும் உணவுகளை தயாரித்துக்கொண்டிருந்தேன். அப்பொழுது மழை பெய்து கொண்டு இருந்தது அதை ஜன்னல் வழியாக ரசித்துக்கொண்டே என் சமையல் வேலைகளை செய்து கொண்டு இருந்தேன். பாதி சமையல் முடிவடைந்து விட்டது. அப்போது மணி ஆறு இருக்கும் அப்போது என்னை பின்பக்கத்தில் இருந்து எனது செல்ல மகள் என்னை அணைத்தாள் எனக்கு ஆச்சரியமாக இருந்தது காரணம் அவள்எப்பொழுதும் 7 மணிக்கு தான் எழுந்து கொள்வாள்நானும் என் கணவரும் மாறி மாறி எழுப்பினால் மட்டுமே எழுந்து கொள்ளும் அவள் இன்று தானாக எழுந்து வந்திருக்கிறாள். அது எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது அவளை அனைத்து என்ன இவ்வளவு சீக்கிரம் எழுந்துட்ட தீபாவளி செலிப்ரேஷன் தீபாவளி புது டிரஸ் போட்டு போனோமா இன்னைக்கு என்றால்.

நான் சிரித்தேன், இன்னைக்கு ஸ்கூல் போக வேண்டாமா மழை பெஞ்சுட்டே இருக்கு அதனால இன்னைக்கு ஸ்கூல் லீவ் போட்டுடு என்றேன். ஆஹா முடியாது மா மழை பெய்தாலும்பரவால்லநான்ஸ்கூலுக்குபோவேன்இன்னைக்குதீபாவளிசெலிப்ரேஷன்மா என்று அழ ஆரம்பித்தாள். நான் சிரித்துக் கொண்டே சரி போய் கிளம்பு என்றேன் அவள் குளிக்கச் சென்றால் நானும் எனது வேலைகளை முடித்து நானும் தயாரானேன். ஏனென்றால் பாவணியை நான்தான் பள்ளிக்கு கொண்டு சென்று விட்டு வருவேன் என் மகள் பெயர் பாவனி நான்காம் வகுப்பு படிக்கிறாள் மிகவும் சுட்டித்தனமாக,இருப்பாள் படிப்பிலும் கெட்டிக்காரி அவள் பள்ளி என் வீட்டில் இருந்து மூன்று கிலோ மீட்டர் தூரத்தில் இருப்பதால் அவளை பஸ்ஸில் நான் தான் அழைத்துச் சென்று விட்டு பிறகு அழைத்து வருவேன்,

மாலை 3 மணிக்கு அவள் பள்ளிக்க

செல்லம்மாள் மகளிர் கல்லூரி, சென்னை

செல்லம்மாள் மகளிர் கல்லூரி, கிண்டி மகளிர் கல்லூரி என்றும் அழைக்கப்படும், செல்லம்மாளின் பெயரால் அழைக்கப்படுகிறது. 1867 ஆம் ஆண்டு திருப்போரூர் அருகே உள்ள பட்டிபாளையத்தில் (இப்போது பட்டிபுலம்) பிறந்த இவர், ஒரு சாதாரண விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர்.

மயிலை வடமலை கிராமணியை மணந்த பிறகு, அவருக்கு செல்வமும் ஆறுதலும் கிடைத்தது. வடமலை கிராமணியே திருக்கழுகுன்றத்தில் ஒரு துறவி வாழ்க்கையை கைவிடும்படி கட்டாயப்படுத்தப்பட்டார், மேலும் செல்லம்மாளுடனான திருமணத்திற்குப் பிறகு அவரது கடின உழைப்பின் காரணமாக ஒரு வெற்றிகரமான தொழிலதிபரானார். இந்த ஜோடிக்கு எந்தப் பிரச்சினையும் ஏற்படவில்லை. வடமலை கிராமணி ஜூலை 31, 1911 அன்று காலமானார்,

தனது கணவரின் முன்மாதிரியான வாழ்க்கை மற்றும் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு, தான் கடினமாக சம்பாதித்த செல்வத்தையும் சொத்தையும் புத்திசாலித்தனமாகவும் பயனுள்ளதாகவும் நன்கொடையாக வழங்க முடிவு செய்தார். நவம்பர் 1913 இல், இதற்காக அவர் நான்கு உயில்களை இயற்றினார். தனது உயிலில், தங்கள் வருமானத்தில் ஒரு பகுதியை பல கோயில்களுக்கு நன்கொடையாக அளித்தார் - முக்கியமாக திருக்கழுந்தூரத்தில் உள்ள இரண்டு கோயில்கள், திருப்போரூரில் உள்ள கோயில் மற்றும் சென்னையில் உள்ள திருவோத்திரீஸ்வரர் கோயில் மற்றும் மைலாப்பூரில் உள்ள வேலத்தம்மன் கோயில்.

தங்கள் வருமானத்தில் ஒரு பகுதியை உறவினர்களுக்கு நன்கொடையாக வழங்கிய பிறகு, நன்கொடையின் பெரும்பகுதி பச்சையப்பா அறக்கட்டளைக்கு வழங்கப்பட்டது, இது அப்போது கல்வித் துறையில்

சிறந்த சேவையைச் செய்து வந்தது. பச்சையப்பாவின் உயர்நிலைப் பள்ளி மற்றும் கல்லூரியின் சமூக ரீதியாக பின்தங்கிய மாணவர்களுக்கு அத்தியாவசிய உணவு, உடை, கட்டணம், புத்தகங்கள் மற்றும் விடுதி வசதிகளை உறுதி செய்வதற்காக இந்த நன்கொடை வழங்கப்பட்டது.

செல்லம்மாள் சமூக உணர்வுள்ள தனிநபராக வளர்ந்து வந்த 1907 முதல் 1917 வரையிலான காலம், நாட்டிலேயே அறிவுசார் மற்றும் சமூக எழுச்சியின் காலமாக இருந்தது என்பதை நினைவு கூர்வது மதிப்புக்குரியது. அவர் வாழ்ந்த டிரிப்ளிகேனும், சுப்பிரமணிய பாரதி மற்றும் பின்னர் கிருஷ்ணசாமி ஐயர் ஆகியோரின் பெயர்களுடன் பிரிக்கமுடியாத வகையில் இணைக்கப்பட்டுள்ளது, இது சாதாரண மக்களைக் கூட இந்தியர்களின் அதிகாரமளிப்பு மற்றும் அவர்களின் விடுதலையின் அவசியத்தை உணர வைத்தது.

1913 ஆம் ஆண்டு, முதலாம் உலகப் போருக்குப் பிறகு, மக்கள் பெருமளவில் பிரச்சினைகளுக்கு பயந்து நகரத்தை விட்டு வெளியேறியபோது, செல்லம்மாள் தனது விருப்பத்தை வெளிப்படுத்தினார்.

இத்தகைய சமூக சூழலில், படிக்காதவராக இருந்தாலும், கல்வி ரீதியாக விடுதலை பெற்ற மற்றும் அதிகாரம் பெற்ற சமூகத்திற்காக தனது பங்களிப்பை வழங்கும் தொலைநோக்குப் பார்வையைக் கொண்டிருந்தார் என்பது பாராட்டத்தக்கது. பெண்களின் கல்வி அதிகாரமளிப்புக்காக நன்கொடை அளித்ததன் மூலம், தனது காலத்தின் பிற கொடையாளர்களுடன் சேர்ந்து, அவர் தனது முத்திரையைப் பதித்தார்.

பல்லாவரம் மிட்டாவில் உள்ள அடையார் ஜமீன் கிராமத்தில் உள்ள அவரது சொத்து, கிண்டி எஸ்டேட்டையும் உள்ளடக்கியது, 5 காவ்னி நிலத்தில் ஒரு மகளிர் நிறுவனத்தைத் தொடங்க முயற்சி மேற்கொள்ளப்பட்டது. சென்னை பச்சையப்பன் கல்லூரியில் படிக்க புறநகர்ப் பகுதிகளிலிருந்து வரும் மாணவர்களுக்கு உணவளிக்கும் ஒரு விடுதி ஏற்கனவே இந்த இடத்தில் இருந்தது. விடுதி கட்டிடத்தை அடிப்படையாகக் கொண்டு, மகளிர் கல்லூரி ஜூலை 22, 1971 அன்று தொடங்கப்பட்டது.

கல்லூரியைத் தவிர, சென்னை லாயிட்ஸ் காலனியில் உள்ள செல்லம்மாள் தோட்டத்தில் உள்ள பிஎஸ்என்எல் குடியிருப்புக்கு அருகிலுள்ள செல்லம்மாள் மற்றும் வடமலை கிராமணி சமாதி, தாழ்மையான தனிநபர்கள் கூட சமூகத்தில் மாற்றத்தை ஏற்படுத்த, அது சிறியதாக இருந்தாலும், மாற்றத்தைத் தொடங்க முடியும் என்பதற்கு ஒரு சான்றாக நிற்கிறது.

வண்ணக்காரன் நடேசன் பிள்ளையின் ஓவியங்களில் தேவரடியார்

ஓவியர்.ஆர்.ராஜராஜன்

கோணேரி ராஜபுரம் திருக்கோவில் ஓவியங்கள் பற்றியும், ஓவியமாமேதை திருவாரூர் வண்ணக்காரன் நடேசன் பிள்ளையின் குறிப்புக்களையும் முன்பே முகநூலில் எனது பக்கத்தில் எழுதியுள்ளேன்.

அன்மையில் இரா.நாகசாமி அவர்களின் "தவம் செய்த தவம் எனும் நூலின் குறிப்புக்களை வேறொரு நூலில் காண வாய்ப்பு அமைந்தது. இங்கு இடம்பெற்றுள்ள இரண்டாவது படத்தில் கோணேரி ராஜபுரம் மனவாள நாதர் ஊர்வல உற்சவத்தில் நாதசுர கச்சேரியுடன் ஒரு பெண்னின் நாட்டியமும், இடம்பெற்றுள்ளது. அந்த பெண் திருவிடைமருதூரை சேர்ந்த தேவரடியாள் " ருக்மணி" என்பவர். அந்த நாட்டிய பெண் அப்போது மிக புகழ்பெற்ற நிலையில் இருந்தவராக கருதமுடிகிறது.ருக்மணியின் அருகில் தவில் வசிக்கும் கலைஞர்,அம்மாபேட்டை பக்கிரி ஆவார்.நெற்றியில் திருநீற்றுப்பட்டை,கழுத்தில் ருத்ராட்சம்,அசைந்தாடும் நீண்ட கூந்தலுடன் வெற்றுடம்புடன் காணப்படுகிறார்.அவருக்கு பக்கத்தில் நாதசுரம் வாசிப்பவர்,கருமையான உடலும்,உருண்டை தலையும் அதில் சின்ன குடுமியும் உள்ளவர் , மன்னார்குடி சின்னப் பக்கிரி என்று குறிப்பிடப்பட்டுள்ளது.அவருக்கு அருகில் உள்ளூர் கலைஞர் வையாபுரி ஆவார்.

கோணேரி ராஜபுரம் திருக்கோவிலில் பத்துநாள் விழாவாக வைகாசி விசாகத் திருவிழா. திருவிடைமருதூரில் இருந்து தேவரடியாள் "ருக்மணி" வந்தபிறகே ,காப்புகட்டி கொடியேற்றத்துடன் தொடங்கும் வழக்கம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த ஓவியத் தொகுப்பில் பல்வேறு காட்சிகள் ஓவியமாக தீட்டப்பட்டுள்ளன, இசைவாணர்கள் வாத்தியங்களை இசைத்துக்கொண்டு நடந்து வரும் போது அவர்களுக்கு முன் நாட்டியமாடிவரும் பெண் ,சிறப்பான நாட்டிய உடைகளில் ,ஆபரணங்களை அணிந்துகொண்டு ஆடிவரும் காட்சி மிக அற்புதமாக தீட்டப்பட்டுள்ளது,

இந்த ஓவியத்தொகுப்பில் மற்றுமொரு சிறப்பு, வேதமூர்த்திகளின் உருவங்கள், ரிக் வேதமூர்த்தி,யஜுர்வேதமூர்த்தி,சாமவேதமூர்த்தி,

அதர்வனவேத மூர்த்தி,மற்றும் அகத்தியர் ஆகிய ஓவியங்களும் இடம்பெற்றுள்ளன.

இந்த தகவல் ,கோ.எழில் ஆதிரை என்பவரின், செம்பியன் மாதேவி கலைக்கோவில் -கோணேரி ராசபுரம் எனும் நூலில் காணப்படுகிறது.

கோணேரி ராஜபுர கோவில் ஓவியங்கள் 1916 ஆம் ஆண்டளவில் ஒருமுறையும், மீண்டும் 1935 ஆம் ஆண்டு ஒருமுறையும் தீட்டப்பட்டதாக தெரிகிறது,1916 இல் வண்ணக்காரன் நடேசன் பிள்ளையும், இரண்டாவது 1935 ஆம் ஆண்டு முறை தீட்டும் போது திருவாரூர் மாசிலாமணியும் தீட்டியதாக ஒரு குறிப்பு உள்ளது, இதன் உண்மைதன்மை சரியாக தெரியவில்லை ,காரணம், இரண்டாவது முறை இந்த ஓவியப்பணி நடந்த போது

திருவாரூர் வண்ணக்காரன் நடேசன் பிள்ளையிடம் அப்போது சிறுவனாக இருந்த ,வி. கே.எஸ்.சிவம் ஸ்தபதி அவர்கள் உதவியாளராக உடன் இருந்து கோணேரி ராஜபுரம் வேலை செய்ததாக அவரே என்னிடம் தெரிவித்து இருந்தார்.

இந்த ஓவியங்கள் பற்றி குறைந்த தகவல்களே இருந்தன.ஆயினும் இந்த தகவல்கள் பகிரவேண்டியவை.

வாங்கிப் பயன் பெறவீர்!!! தொடர்புக்கு:

சம்சுல் ஹுதா பானு

99403 35306

ARANYANI

VIJENI

CHAPTER - 9

Saravanan tried his best to collect all the news about John Keiser from American journals and newspapers and contacted his friend Murgosh. Swapna's uncle in the US helped him in this regard. When Murgosh came to Chennai, he met Saravanan and talked to him about his roommate John Keiser and handed him his diary.

MurGosh's wife didn't like John Keiser because he was always talking about Tamil Nadu, its history, and its culture. She didn't want to entertain him. She had put aside all her Indian dresses and moved to mini skirts. She had completely changed to American culture. She was afraid that due to John's madness, she may have to change back to Indian costumes and culture.

MurGosh's dad advised his son to forget all about Tamils and do his job. His father was tired of explaining the reason for naming as Murugesan to his friends and relatives. His first son died in an accident near Thiruchendur, a Murugan temple. He prayed to the Lord to bless him with another son and he will call him in the name of Muruga. Although it is not in practice among the Brahmins since he prayed to Murugan, he had to name his only son Murugesan. When Murugesan became a devotee of Aravind Gosh, he changed his name to MuruGosh.

MuruGosh wanted to help John Keiser. He hesitated to leave him uncared for the advice of his dad and wife. At this point, Saravanan came in contact and MurGosh shared about his friend. This sharing helped him to reduce his stress.

Actually, John wanted to go for the list of Greeks to identify his forefather. One of his forefathers worked under Karikal Chola and promised to find out the archives on the origin of the Tamils. Keiser tried to find out his name.

Saravanan felt it was a tedious job that John wanted to do. MurGosh arranged a conference call with John to Sarvanan.

Information registered in the brain for many centuries had been retrieved now. It cannot be ignored. If so, it would be a historical error. History is more important than literature.

John Keiser told he cannot remember the promise of the Greeks to the king. But he can remember a city called Koliyur [a city named after hens] near Thuraiyur. Saravanan had a doubt whether John was blabbering all these after reading from any book. John could read Sarvanan's mind. He answered, 'A race which rendered the first language to this world, feeling proud of that, cannot be treated as self-boasting.' John sometimes told some unrelated statements. Although Saravanan could not get everything at that moment, he believed that he will get them later, so he recorded everything.

It was difficult for Sarvanan to get John as a Dravidian. His looks and behavior are of an American and also his explanation of Koliyur cannot be ignored. He told that he had seen the Aayars [shepherds in Tamil] who moved from the banks of Sindhu to Egypt. The so-called Aayars are called Nuuyars in Egypt. Similarly, roasting in fire is called 'nep' [neruppu is the fire in Tamil], the rainwater as 'pey' [pour in Tamil], and so on.

Maybe Cleopatra, the dark-complexioned lady with a different nose, belongs to these Aayars from Tamil Nadu.

John told Tamil kings ruled Egypt and there were many words similar to Tamil in the Semantic languages spoken in Egypt. John reminded of kol [kill] and poer [war] being used with the same meaning in Europe. He listed a hundred essential words like fire, water, dwelling place, eyes, cattle, and fish being the same in all languages, having their roots in Tamil.

Saravanan could not believe this, but John said, 'Look in Tamil you have dialects within a few hundreds of kilometres. Tamils have spread to thousands of kilometres to Egypt and Africa. Naturally, their language would have undergone a few changes.' Saravanan cannot argue with him.

John added, Tamil has changed as Telugu, Malayalam, Kannadam, Tulu in South India whereas in Baluchisthan it is Brahui, in Central India is Kondu, Gonda and others. In Pakisthan and Afganisthan, the names of places called as Kunru, Kurinji, Aamuur, Mathrai, Korkai, Paalai, Vanji, Paandiyan, Killi, Nhochi and Kaavri remind us of Tamil names . An IAS officer, Mr. Balakrishnan, has written a book on this.

Saravanan was simply listening to John. It was too much for him to digest.

'Whenever cock fight took place in Koeliyur, elder men among the spectators used to share the trade links with Egypt. They speak about people who took their cattle herd to the banks of the River Nile. A race that worshipped the bulls moved to the grazing grounds. At the same time, a hunter group from the west with a fair complexion, long hair, and peculiar behavior came here. They reared horses; wore the hides of horses; ride on horses to long distances and had chariots

drawn by them. They were nomads. Both men and women moved their cattle in search of pastures. Once they stayed in the suburbs and didn't move for a long time. It seems that they loved that fertile place where five rivers flow. Sometimes they entered the city and looted the paddy and cotton clothes. In a few places, some quarrels arose but the king didn't take any serious action against them. He told they are nomads and there are a lot of differences between both lifestyles.

The nomads didn't move from that place as the king and people expected. They made tents in the woods and stayed longer. They became friends with the villagers. The shepherds got in touch with the fair girls and a few men brought them to their homes.

A young man, Murugu, brought Ashwini to his house. She asked him,Your language is so sweet. What is it called?

Thamizhi. Tham moli [means our language] has changed to Thamili.

What is uur?

A place where people live together.

Why do you differentiate Uur as Maeluur and keelluur.?

Mael is the uur in the high ground and keel uur is at the lower level. That's it.

Why do you use the letter mae and kii to refer to the west and east?

Initially, we lived in the south. Due to the deluge [or tsunami], we moved to the north. Since we traveled on the sea route, we called the highland or the mountain in our west as mae and the lower land as kii. Mae is high and refers to the west; kii is low and refers to the east.

He was happily answering her questions. She is good at astronomy. She could read the sky, watch the position of the stars and predict certain things. She told,

'We follow the stars and travel. My name Ashwini also refers to a star.'

Murugu was admiring her. He loved her so much. Her skin was fair and shining that night. He embraced her and whispered in her ears, 'Your star name suits you. You are shining like a star.'

Aren't you interested in knowing about me?

Come on, speak out.

We won't stay permanently in any place. We will be roaming around. We have our army to protect us. Wherever we find our food and pastures, we stay there and then move on.

Our scripture says that if we build a house to stay in a place, we will face dangers and demolition.

Scripture?

Yes. Our forefathers have defined the rules for our life. That is our scripture. It is orally transmitted to generations. We don't write anything. We pray to Agni [Fire God] and Indra [Rain God]. We listen to our elders' words.

So you are following the words of your elders?

Ashwini understood the nuance in his words and showed a broad smile of acceptance. She then asked, Do you follow any such things

Yes. We do have. We don't kill any life.

At any cost?

Yes, no doubt at all.

Why?

In all men, there is a seevan–a soul, a matter. In all women, there is shakthi–the power or energy. How can we kill the soul or the power? They are the matter and energy of this world.

Ashwini wondered, 'It's good, why do you store the running water and do farming? You build huge ships and sail on the seas. You build big houses to live in. You worship the genitals. All these develop an aversion to you.'

She liked all of those but her people didn't like any of them. They called the Murugu's people The Thiramidas a thasyus which means slaves or demons [asuras]. It is their duty to kill these demons. It is an order from the celestials for them. Their god Indra always demolishes forts. He is against Rudras who build dams and involve in agriculture. Indra and Rudra are enemies. They fight against each other.

Ashwini told 'If anyone crosses the sea, we will expel him from our group. We travel in the land but you sail on the seas.'

Do you expel me?, asked Murugu.

When Saravanan was talking in the video call with John Keiser, Dev was lingering in another world where Murugu and Ashwini were chatting. Dev felt that it should not be another tale of Don Quixote. After watching the document of anti-Hindi agitation, Dev's thoughts seem to be an entangled ball of thread severely intricated. He couldn't resolve it. He didn't erase that documentary from his All Tab.

"கல்விக்கூடங்களும் வட்டாரவழக்குகளும்"

முனைவர் த.ஜான்சிபால்ராஜ்
திருநெல்வேலி

எந்தவொரு மொழியும் அது பேசப்படும் வெவ்வேறு பகுதிகளில் பல்வேறு காரணங்களால் திரிந்து பேசப்படுவது இயல்பு.மொழியின் அத்தகைய நெகிழ்வுத் தன்மையினால் பிறக்கும் புதிய பேச்சுவழக்கிற்கு வட்டார வழக்கு என்று பெயர்.

"ஒரு மொழி பல்வேறு இடங்களில் வாழும் மக்களால் வேறுபட்ட விதங்களில் பேசப்படுதல் அக்குறிப்பிட்டப் பகுதியின் வட்டார வழக்கு" எனலாம். அவ்வட்டார வழக்குகள் வார்த்தைகளின் திரிபுகளாகவோ, அங்கு வாழும் பிற மொழி பேசுபவர்களின் மொழிக்கலப்பினால் ஏற்படும் புதிய வார்த்தைகளாகவோ இருக்கலாம்.இவ்வாறு உருவாக்கப்படும் வட்டார வழக்குகள் அப்பகுதியினரின் முக்கிய அடையாளங்களுள் ஒன்றாகவும் திகழும்.

நெடுந்தொலைவு பேருந்து அல்லது இரயில் பயணங்களில் பிற மாவட்டங்களுக்குள் நுழைகிறோம் என்பதை அப்பகுதி நிறுத்தங்களில் ஏறுபவர்களின் புதுவிதமான பேச்சு வழக்குகளின் முலம் எளிதில் அறிந்து கொள்ளலாம். தற்காலத்தில் சமூக ஊடகங்களின் பெருக்கத்தினால் எல்லாவகையான வட்டாரவழக்குகளையும் மிக எளிதில் இனங்காண இயலுகிறது. பள்ளிகளில்_ வட்டார வழக்குகள்_

குழந்தைகள், குடும்பம் என்னும் முதல் சமூக அமைப்பிலிருந்து அக்குடும்பத்தினரின் பேச்சுவழக்கைக் கற்று ,பள்ளி என்னும் பொது நீரோடைக்குள் வருகின்றனர்.அங்கு அவர்கள் தாங்கள் பேசும் மொழிசார்ந்தும் பல அனுபவங்களைக் கற்று அறின்றனர்

ஒரு பள்ளிக்கு அதன் சுற்றுவட்டார பகுதிகளிலிருந்து வரும் மாணாக்கர்களின் வட்டார வழக்குகளின் கலப்பினால் புதிய வகை மொழிவழக்குகள் ஏற்பட்டு, அம்மொழி மென்மேலும் மெருகேறுகின்றது

குறிப்பிட்ட சாதி,சமயம், மற்றும் வளரும் சுற்றுச் சூழல் ஆகியன சார்ந்தும் வட்டாரவழக்குகள் உருவாகி நிலைபெறுகின்றன. பெரும்பாலும் ஒரு பள்ளி, அது அமைந்துள்ளஊரைச்சுற்றியுள்ளப்பகுதி மக்கள்பேசும்வட்டாரவழக்குகளின்

ஆக்கிரமைப்பை உடையதாக இருக்க முயலுகின்றது. மாணாக்கர்கள் பள்ளிகளில் சேர்ந்து ஒருசில மாதங்களில் வெவ்வேறு வட்டாரவழக்குகளின் கலப்பினால் புதுவகையான வட்டார வழக்குகளில் பேசும் நிலை ஏற்பட்டு, பின்னர் அதுவே அப்பள்ளியின் பொது வட்டாரவழக்காகத் தொடர்கின்றது. ஆனாலும் அப்பள்ளியில் பயிலும் மாணாக்கர்கள் தங்களது ஊர், இன, சமய, மாணாக்கர்களோடு தங்களுக்கே உரிய வட்டார வழக்குகளிலேயே பேசுகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. சிற்றூர்களில் அமைந்துள்ள பள்ளிகளில் வெளியூர் மாணாக்கர்கள் இல்லாதிருப்பின் அவ்வூரின் வட்டாரவழக்கே அவர்களது பேசுமொழியாகவும் தொடர்கின்றது. குறிப்பாகத் தொடக்க மற்றும் நடுநிலைப்பள்ளிகளில் இந்நிலைப்பாடு அதிகளவு இருக்க வாய்ப்புள்ளது.

இதிலும்கூட அப்பள்ளியில் பணியாற்றும் வெளியூர் ஆசிரியர்களின் பேச்சுவழக்கு, மாணாக்கர்களின் பேசும்விதத்தில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தி அவ்வட்டார வழக்கின் போக்கில் மாற்றங்களை ஏற்படுத்தவே செய்கின்றது.n பெரும்பாலும் ஆசிரியர்களைப் பின்பற்றும் தன்மை குழந்தைகளுக்கு இயல்பானதாகையால், இந்நிலைப்பாடு ஏற்படுவது தவிர்க்க இயலாதது. மேலும் அது பெருமளவில் மொழியின் செழுமைக்குத் தேவையானதாகவும் அமைகின்றது. அத்தகைய மாற்றங்கள் குழந்தைகளின் பெற்றோர்களால் அங்கீகரிக்கப்பட்டு, தொடரவும் வாய்ப்புள்ளது.

இதனால் தொடர்ந்து அவ்வூராரால் பேசப்பட்டுவரும் சில வார்த்தைகளின் மரூஉக்களும், திரிபுகளும் ஏற்கெனவே வட்டாரவழக்குகளாக இருந்திருப்பினும், ஆசிரியரால் திருத்தம் செய்யப்பட்டு அவை பேச்சு வழக்கில் பயன்படுத்தப்படும் போது மாணாக்கர்கள் அவற்றை உள்வாங்கி தங்களது இயல்பான பேச்சுவழக்காக்கிக் கொள்ளுகின்றனர். இதனால் நாளடைவில் அதுவே வழக்காகி நிலைபெற்று விடுகின்றது.

உதாரணமாக சில பகுதிகளில் உயர்திணை, அஃறிணை விகுதிகளைப் பொருட்படுத்தாமல் பேசும் வழக்கு உள்ளது. இது அப்பகுதி மக்களின் வட்டாரவழக்காகவும் தொடர்கின்றது. குறிப்பாக மாணவர்கள் தங்களுக்குள், ஆசிரியரை சுட்டிக்காட்டிப் பேசும்போது,

ஆசிரியரின் பெயரோடு..."ஆசிரியர் வருகிறார்" என்று கூறுவதற்கு மாறாக "ஆசிரியர் வருது" என்றும், அவ்வாறே பெற்றோரைக் குறிப்பிடும் போதும் ,"என் அப்பா வரும்", "என் அம்மா வரும்" என்றும் கூறுவது வழக்கில் உள்ளது.

இதற்கான காரணம் அம்மாணாக்கர்களின் பெற்றோரும் மற்றவர்களை அவ்வாறே (உயர்திணைக்கு அஃறிணை விகுதியை)குறிப்பிட்டுப் பேசுவதுதான் என்பதை அறிய முடிந்தது. இவ்வாறான மக்களின் அத்தகைய வழக்குகள் ஆசிரியர்களால் திருத்தம் செய்யப்பட்டு சரியாகப் பேசவைக்கப்படுகிறது.

இத்தன்மையால் அடுத்தடுத்த தலைமுறையினர் தங்களது பேச்சு வழக்கில் சரியான மாற்றங்களைக் கடைப்பிடித்து மொழியின் செம்மையைத் தக்கவைக்க முன்வருகின்றனர். என்பதும் உண்மை.

உயர்நிலை ,மேல்நிலைப் பள்ளிகளில் சேரும் மாணாக்கர்கள் தங்களது பள்ளிகளில் பேசிய மொழிவழக்கத்தைத் தங்களது இயல்பான பேச்சில் பயன்படுத்தும்போது அப்பள்ளி அமைந்துள்ள ஊரின் வட்டாரவழக்குகளின் ஆதிக்கத்தால் மேலும் மாற்றங்கண்டு, நாளடைவில் அப்பள்ளிக்கே உரிய பொது வட்டாரவழக்கமாக உருவேற்படுகிறது. கல்லூரிகளில் வட்டாரவழக்குகள்

பள்ளிக் கல்வியை முடித்து கல்லூரிகளுக்குச் சென்று சேரும் மாணாக்கர்கள் தங்களது வட்டாரவழக்கின்மூலம் அக்கல்லூரி அமைந்துள்ள சுற்றுவட்டாரப் பகுதியில் அவர்கள் எப்பகுதியிலிருந்து(ஊர்) வருபவர்கள் என்பதை எளிதில் அடையாளங்காணலாம். தொடர்ந்து அதே கல்லூரியில் பணியாற்றும் பணியாளர்களால் எளிதாக இதை அறிந்து கொள்ள இலும்..அத்தோடு கல்லூரி அமைந்துள்ள பகுதியின் வட்டாரவழக்கே அங்கும் சரியான பேசும்மொழியாகக் கருதப்படும் நிலையில்...மாணாக்கர்கள் மீண்டும் ஒருவித பொதுமொழி

வழக்கினை ஏற்படுத்துவதும், ஏற்பதுமான தொடர் நிகழ்வால்... மொழியின் செழுமையாக்கம் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டே உள்ளது. இத்தகைய நெகிழ்வுத் தன்மைக்கு இடந்தராத மொழிகளால் செம்மையடைய இயலாது. நமது தமிழ் மொழி இத்தகைய செழுமைக்கும், இரவாப்புகளுக்கும் தகுதியுடையது.இதற்கு முதற் காரணமாக சமூகத்தின் ஆணிவேர்களாகத் திகழும் கல்வி நிலையங்கள் பெரும்பங்காற்றி வருகின்றன என்பதும் நிதர்சனம்.

வாங்கிப் பயன் பெறவீர்!!! தொடர்புக்கு:

சம்சுல் ஹுதா பானு

99403 35306

பால் நிலவு

சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் சொக்கத் தங்கமே/
நான் சொக்கி விழும் சக்கரைப் பேச்சின் சொந்தமே//

தித்திக்கும் தேனமுதே/
தெவிட்டாத சொல்லமுதே//

தீங்கள் ஒளி போல் உன்
கண்கள் ஒளி /
உன் கருணையும் காதலும் தேனருவி//

ஒற்றைச் சொல் காவியம் நீ/
உரிமைச் சொல் ஓவியம் நீ//

தீகட்டாத தெள்ளமுது /
நீ தேடி வந்த
பால் நிலவு//

சக்ய பிரபா

Shakthi Pennithazh

Printed and Published by :
E.Satish Rajkumar (Advocate)

3/422, Dinamani Nagar, Madhurai,
Tamil Nadu - 625 018.
Ph : +91 7871123226, +91 7010997630

கட்டுரைகள் அனுப்ப..
sakthipennithazh@gmail.com
rajetamiljuly1@gmail.com

இவ்விதழில் இடம்பெற்றுள்ளகருத்துகள் அனைத்தும் கட்டுரையாளர்களின் கருத்துகளே ஆகும்.
அவற்றுக்கும் இதழாசிரியருக்கும் எந்தத் தொடர்பும் இல்லை

புதிய வெளியீடுகள்







விலை ரூ120

சந்திரோதயம் பதிப்பகம், மதுரை -18. போன் 7010997639